

டும்ப
நாவல்
2011
ரூ.12
ஜெய்சக்தி
புன்னகை
மட்டும் கொடு...!



# மட்டும் கொடு!

## ஜெய்சக்தி

**வ**ணக்கத்திற்குரிய வாசகர்களுக்கு,

உங்கள் சகோதரி ஜெய்சக்தி எழுதுவது...

என் அன்பிற்குரிய கணவர் காலமான தகவலை சென்ற மாதமே குடும்ப நாவல் மூலம் தெரியப்படுத்தியிருந்தேன். ஆழ்ந்த வருத்தத்தில் உள்ள எனக்கு மகன் ஹரீஸ் சின்னராஜன் - மருமகள் ஜோதி இருவரும்தான் ஆறுதல்.

இவர்களுக்கு அடுத்து 'குடும்ப நாவல்' ஆசிரியர் ஜி.அசோகன் என் உடன்பிறவா சகோதரர். என் கணவரை ஒருமுறைதான் - எங்கள் மகன் திருமணத்தின்போது சந்தித்தார். இப்போது எங்கள் குடும்ப சுக-துக்கங்களில் அவரும் பங்குகொள்கிறார்.

சென்ற முறை நான் எழுதிய கடிதத்தில் என் கணவரைப் பற்றியும் அவரது உடல்நிலை பற்றியும் நிறைய குறிப்பிட்டிருந்தேன். என் கணவர் உடல்நலம் குன்றியிருந்த போது எனக்கு உற்ற துணையாக இருந்த என் உறவினர்கள் - குறிப்பாக என் கணவரின் சகோதரர் - சகோதரிகள், அவர்களின் குழந்தைகள், என் சகோதர-சகோதரிகள், அவர்களின் பிள்ளைகள் - இவர்கள் அனைவருமே என் கணவர் உடல் நலமின்றி இருந்த போது காட்டிய அன்பும், அக்கறையும் அளவில்லாதது. அதற்கு - அவர்களுக்கு நாங்கள் வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டுள்ளோம்.

என் மன எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள இக்கடிதம் எழுத வாய்ப்புத் தந்த சகோதரர் ஜி.அசோகன் அவர்களுக்கு நன்றி.

- அன்புடன், **ஜெய்சக்தி.**





**1**

"**ந**ல்ல நேரம் வந்தாச்சு... ஆரம்பிக்கலாம்." என்று குரல் கொடுத்தார் ஒரு பெரியவர்.

"கெட்டி மேளம்! கெட்டி மேளம்!" என்று யாரோ அதட்டினார்கள்.

மேளம் முழங்கியது.

வந்திருந்தவர்கள் எல்லாரும் அட்சதை போட்டு வாழ்த்த - வானதியின் கழுத்தில் மங்கல நாண் பூட்டினான் ரஞ்சித்.

தாலி கட்டி முடித்தவுடன் திரும்பி நண்பன் ரகுநாத்தைப் பார்த்துப் புன்னகைத்தான்.

லேசாக ஓரக் கண்ணால் அவனைக் கவனித்த வானதி அவன் தன்னைப் பார்க்கக் கூடுமென்று காத்திருக்க - அவன் நண்பனைப் பெருமையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சற்றுக் கழித்துத்தான் அவளை நோக்கித் திரும்பினான். மெல்லப் புன்னகைத்தான்.

பெண் பார்க்க வந்த அன்றே பார்த்திருந்தாள் வானதி. ரஞ்சித்தும் அவனும் ஒன்றாகவே இருந்தார்கள். இரண்டு பேரும் இணை பிரியா நண்பர்கள்.

வானதியிடம் காஃபி கொடுத்து அனுப்பினார்கள் அவள் வீட்டுப் பெரியவர்கள். கொண்டு வந்து அவனிடம் நீட்ட, அவன் தன் நண்பனை நோக்கித்தான் கை காட்டினான். ரகுநாத் தான் மிரட்டினான்.

"டேய்! நீ எடுடா...!" என்றான்.

அதற்குப் பிறகுதான் ரஞ்சித் எடுத்துக் கொண்டான். அப்போது அவளுக்கு ஒன்றும் பெரிதாகத் தெரியவில்லை. இப்போது கூட அவளுக்குப் பெரிதாக ஒன்றும் தோன்றிவிடவில்லை.

பள்ளி நாட்களில் பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ் சோழனுக்கும் இடையே இருக்கிற நட்பைப்பற்றி அவள் தமிழ்ப்பாடத்தில்

படித்திருக்கிறாள். எவ்வளவோ கெட்டவன் என்று கருதப்பட்ட துரியோதனன் கூட கர்ணனிடத்தில் அபாரமான நட்புறவு கொண்டிருந்தான் என்று அவள் படித்திருக்கிறாள். நண்பர்களிடத்தில் அன்பாக இருப்பவனுக்குக் கண்டிப்பாக மனைவியிடத்திலேயும் அன்பு இருக்கும் என்று தோன்றியது. அதனால் அவளைப் பொறுத்தவரை ரஞ்சித்துக்கும், ரகுநாத்துக்கும் இடையே இருந்த நட்பு ரஞ்சித்திடம் இருந்த நல்ல விஷயம் என்றே கருதினாள்.

தாலி கட்டி முடித்து சடங்குகள் எல்லாம் ஆரம்பித்தார்கள்.

வானதியின் தோழிகளும் வந்திருந்தார்கள். சுப்ரியாதான் அவளுக்கு நெருங்கிய தோழி என்றாலும் ஆண்களைப் போல - நினைத்த நேரத்தில், தெருவோரத்தில் என்றெல்லாம் அவர்கள் சந்தித்துக் கொள்ள முடியாதே. அதிலும் சுப்ரியா வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள்; அதனால் அளவான நட்புதான்.

மணமக்களின் அறைக்கு அழைத்து வந்து பால் பழம் கொடுத்தார்கள்.

''சரி. கொஞ்சம் ஓய்வெடுங்கள்'' என்று அந்தப் பக்கம் போனார்கள். அவன் மாலையைக் கழற்றி அவளிடம் நீட்டினான்.

அவளும் அதை வாங்கிக் கொண்டு அந்த அறையில் இருந்த ஸ்டாண்டில் மாட்டி விட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

கணவனைக் காணவில்லை! அந்த இடைவெளிக்குள்ளாக அவன் நண்பனைப் பார்க்கப் போய்விட்டான்.

''டேய்! என்னடா... இது! வைஃபோட கொஞ்ச நேரம் போய் உட்காரு.'' என்று யாரோ சொன்னார்கள்.

''இருக்கட்டும்டா! இனி எப்பவும் அவ கூடத்தானே இருக்கப் போறேன்'' என்று அவன் சொல்வது அவள் காதில் விழுந்தது.

'இனி எப்போதும் நம்ம கூடத்தான் இருக்கப் போறாராமே...' என்று எண்ணிக் கொண்டாள். புன்சிரிப்புடன் இருக்கையில் அவளுடைய தோழிகள் சுப்ரியா, ஜலஜா, மாதங்கி என்று எல்லோரும் வந்தார்கள்.

''என்னடி... உன் ஹஸ்பெண்ட் இப்படி உட்கார வச்சுட்டுப் போயிட்டாரு...'' என்றாள் மாதங்கி.

அவளுக்கும் சமீபத்தில் தான் திருமணம் ஆகியிருந்தது.

''எங்க கல்யாணத்துக்கப்புறம் எங்க வீட்டுக்காரர் அட்டையா ஒட்டிகிட்டே இருந்தாரு...!'' என்று வெட்கத்துடன் சிரித்தாள் மாதங்கி.

''ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரி! இப்ப ரஞ்சித் இப்படி இருக்கலாம்.



அப்புறம் தனியா வேற மாதிரி இருப்பாரோ என்னமோ...'' என்றாள் ஜலஜா.

எல்லாரும் சிரித்தார்கள்.

''என் பாடுதான் திண்டாட்டம்!'' என்றாள் சுப்ரியா.

''ஏண்டி...?'' என்றாள் ஜலஜா.

''ஆமா. உனக்கும் மாதங்கிக்கும் கல்யாணம் ஆனாலும் ஆச்சு! பழைய மாதிரி நீங்க கிடைக்கறதேயில்லை. இப்ப வானதிக்கும் கல்யாணம் ஆயிடுச்சு...! இனிமே எனக்குக் கம்பெனி கிடைக்காது...'' என்றாள்.

''கவலைப் படாதே...! உங்க வீட்லயும் உனக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சாச்சு...'' என்றாள் மாதங்கி.

''ஆமா...! அது ஒண்ணுதான் குறைச்சல்'' என்றாள் சுப்ரியா.

அவளுக்குத் திருமணத்தில் ஆர்வமில்லை.

''போடி! உன்னை மாதிரி அளந்தவங்க எத்தனையோ பேரை நாங்க பாத்தாச்சு...'' என்று கேலி செய்தார்கள்.

மாதங்கி திடீரென்று சிந்தனையுடன் சொன்னாள்.

''ஆனா.. ஒரு விஷயம் பாத்தீங்களா? ஜெண்ட்ஸுக்கு மட்டும் கல்யாணத்துக்கு அப்புறமும் நட்பைத் தொடர முழு அனுமதியும் இருக்கு. ஆனா... பெண்களுக்குள்ளே பெரும்பாலும் நட்பு கொஞ்ச நாளைக்குத்தானே!'' என்றாள் மாதங்கி.

''ஏண்டி! இப்பத்தான் அவளுக்குக் கல்யாணம் முடிஞ்சிருக்கு. அவகிட்டே போய் தத்துவமெல்லாம் பேசிகிட்டு! அதெல்லாம் அவ காதுல ஏறாது..'' என்றாள் சுப்ரியா.

''அதானே!'' என்று திரும்பவும் வானதியின் திருமண நிகழ்வுக்கு வந்தார்கள்.

''ஏய்! கல்யாணம் உண்மையாவே நல்லா நடந்துச்சு'' என்றாள் சுப்ரியா.

''தேங்ஸ்'' என்றாள் வானதி. இப்படியே நேரம் ஓடியது.

''ஏம்பா..! பொண்ணு மாப்பிள்ளையை சாப்பிடக் கூப்பிடுங்கப்பா...'' என்று யாரோ குரல் கொடுத்ததற்குப் பிறகுதான் ரஞ்சித் அந்த அறைக்கு வந்தான்.

''இந்தா... இந்த ஆரத்தைப் போட்டுக்க.'' என்றாள் மாதங்கி.

வானதி மாதங்கி அணிவித்த ஆரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டாள்.

''ஏண்டி... சுப்ரியாவை அனுப்பிச்சுட்டீங்க'' என்றாள் வானதி.

மாதங்கியும் ஜலஜாவும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

"புரியாம பேசாதேடி! முதலிரவுச் சடங்கு நடக்கும் போது அவ எதுக்குடி... அவளுக்கும் அன்ஈசியா இருக்கும்" என்றாள் மாதங்கி.

வானதிக்கும் கொஞ்சம் புரிந்தாற்போல இருந்தது. உறவுக்காரப் பெண்கள் இரண்டு மூன்று பேர் இருந்தார்கள். எல்லாருமாக அவளைத் தயார் செய்து அழகு பார்த்தார்கள்.

"போதும்டி...! ரொம்ப செயற்கையா...!" என்றாள்.

மாதங்கி அவள் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளிவிட்டுவிட்டு சொன்னாள்.

"அதெல்லாம்... அப்படித்தாங்கம்மா...! இன்னைக்கெல்லாம் நீ எதுவும் பேசக்கூடாது...! எல்லாம் எங்க ராஜ்ஜியம்தான்" என்றாள் மாதங்கி.

"சரிடி!" என்றாள் வானதி அடக்கமாக.

ஒரு வழியாக அறைக்கு அனுப்பினார்கள். அறையில் ரஞ்சித் காத்துக் கொண்டிருந்தான்.

மெல்ல நுழைந்தாள் வானதி.

ரஞ்சித் அருகில் நின்று கொண்டு வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

அது ஒரு நிலாக் காலம் என்பது போலே நிலவு பால் போல் பொழிந்து கொண்டிருந்தது.

திரும்பிக் கணவனைப் பார்த்தாள்.

"வா...!" என்றான். அருகில் வந்தாள். கதவை அவனே சாத்தினான்.

"உட்காரு" என்றான்.

அவள் வெட்கத்துடன் உட்கார்ந்தாள்.

"பரவால்லே! உங்க அப்பா நான் நினைச்சதுக்கு மேலேயே கல்யாணம் நல்லாப் பண்ணினாரு...!" என்றான்.

அவள் புன்னகைத்தாள். "அப்பா... எல்லாத்திலேயும் ப்ளானிங் நல்லாப் பண்ணுவாரு. எனக்கு, என் தங்கை படிப்பு - கல்யாண, தம்பி படிப்புக்குன்னு எல்லாத்துக்குமே தனித்தனியா சேமிச்சாரு" என்றாள்.

"அப்படியா?" என்றான்.

அவள் அருகில் நெருங்கி அமர்ந்தான். அவள் தலையைக் குனிந்து கொண்டாள். "இந்த.... பாலு... பழம்னு எதுவும் இல்லையா" என்றான். அவள் அவசரமாக பால் சொம்பை எடுக்க -



"ஓ...கே...! ஓகே!... சும்மா தமாஷ் பண்ணினேன்" என்றான்.

அவள் 'டக்' என்று வைத்துவிட்டாள்

"அப்புறம்... உனக்கு ஏதாவது சொல்லணும்னா சொல்லு..." என்றான்.

அவள் கீழே பார்த்துக் கொண்டு "இப்போதைக்கு இல்லை." என்றாள்.

அவன் கடகடவென்று சிரித்தான்.

"இப்ப வேற வேலை இருக்குங்கிறியா" என்றான்.

அவள் அவசரமாக "நான்... அப்படிச் சொல்லலே" என்று தடுமாறினாள்.

"அப்படி சொல்லலாம்..! தாராளமாச் சொல்லலாம்" என்றான் அவன்.

அவள் திணறுவதைப் பார்த்துவிட்டு மறுபடியும் சிரித்தான். பிறகு மெல்ல அருகே இழுத்தான்.

"வானதி...! உங்கிட்டே எனக்குச் சொல்றதுக்குக் கொஞ்சம் இருக்கு" என்றான்.

"சொல்லுங்க" என்றாள்.

"உனக்கு ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்களா?" என்றான்.

"ம்... இருக்காங்களே...." என்றாள்

"எவ்வளவு தூரம் ஃப்ரெண்ட்ஷிப்...?"

"எவ்வளவு தூரம்னா?"

"இல்லே! என்னைப் பொறுத்தவரை ஃப்ரண்ட்ஷிப் லைஃப்ல முக்கியமான விஷயம். அவ்வளவு ஏன்... ஃப்ரண்ட்ஷிப்னு வரப்போ மத்த எல்லாமே இரண்டாம் பட்சம்தான். அதை நீ புரிஞ்சுக்கணும்."

"ம்" என்றாள்.

"அப்புறம்... அதை வச்சுகிட்டு நாளைக்கு சங்கடப்படக் கூடாது."

"எதுக்கு? ஃபிரண்ட்ஷிப் நல்ல விஷயம். அதுக்கு எதுக்கு சங்கடப்படறது?"

"தட்ஸ் குட்..." என்றான் ரஞ்சித்.

அவள் புன்னகைத்தாள்.

"சரி.. பக்கத்துல வா" என்றான்.

நெருங்கி அமர்ந்தான். ஆனாலும் சற்று நேரம் மென்மையாக பேசிக் கொண்டிருந்தான். அவளும் அவனிடம் இயல்பாகப் பேச ஆரம்பித்தாள்.

மெல்லக் கையணைப்பில் கொண்டு வந்து தோளில் முகத்தைப் புதைக்கிற நேரம் செல்போன் ஒலித்தது.

எடுத்தான். "சொல்றா... ரகுநாத்" என்றான்.

அந்தப்புறம் என்ன சொன்னார்களோ தெரியவில்லை

''என்ன... ரகுநாத்துக்கு... என்ன?'' என்றான் அதிர்ந்து போன குரலில். பேசிக்கொண்டே அவளை விலக்கினான்.

நல்லதொரு கனவிலிருந்து அவள் திடுக்கிட்டு விழித்தாற் போல உணர்ந்தாள்.

''சரிடா... நான் நேர்ல வர்றேன்'' என்றான் ரஞ்சித்.

அந்தப் பக்கம் என்ன சொன்னார்களோ? ''இல்லல்லே...! வானதி எங்கே போயிடறா...! நான்தான் எங்கே போயிடப்போறேன்... நோ...! நோ...! நான் வர்றேன்'' என்று ஸ்விட்ச் ஆஃப் செய்தான்.

திரும்பி வானதியைப் பார்த்தான்.

''சாரி'' என்று ஆரம்பிக்க - அவளுக்குள் ஏமாற்றம் இருந்தாலும் ''பரவால்லே...!'' என்றாள்.

அவன் அவளது பிரதிபலிப்பைப் பற்றிச் சற்றும் கவலைப்படாதவனாக அறையை விட்டு வேகமாக வெளியேறினான்.

அவள் செய்வதறியாது அமர்ந்து கொண்டிருந்தாள்.



## 2

''பாரம்மா... இதுல அரிசி இருக்கு. இந்தப் பக்கம் இருக்குற டப்பாவுல சர்க்கரை இருக்கு'' என்று சொல்லிக் கொண்டிருந்தார் கலைமணி - வானதியின் மாமியார்.

''இந்தா... கலைமணி'' என்று அழைத்தார் சதுர்முகன். ''வரேங்க...'' என்று அடுக்களையிலிருந்து வெளியே வர அவர் எத்தனிக்கையில் அவரை அழைத்தாள்.

''அம்மா... இந்த காஃபி...'' என்று இழுக்க -

''குடு... நானே கொண்டு போய்க் குடுக்கறேன்'' என்று வாங்கிக் கொண்டார்.

காஃபியை வாங்கிக் கொண்ட சதுர்முகன் மனைவியிடம் கோபமாக முணுமுணுத்தார்.

''ஏய்.. அறிவிருக்கா...? அந்தப் புள்ளை வந்த முதநாளே இப்படி வேலை குடுக்கறியே!'' என்றார் கோபமாக.

கலைமணி உறுத்துப் பார்த்தார்.



''என்ன... புரியாமப் பேசறீங்க? உங்க அருமைப் புள்ளை, அந்த ரகுவுக்கு உடம்பு சரியில்லேன்னு உட்டுப்போட்டு போயிட்டான். அவ பாவம், காலையில இருந்து என்ன பண்றதுன்னு தெரியாம முழிச்சுகிட்டிருக்கா! அதான் கொஞ்சம் வேலை குடுத்தா... மனசு ஆறுமில்லே...!'' என்றார்.

''ஓ.... அப்படி வர்றியா? சரி... சரி'' என்றார் சதுர்முகன்.

அந்த உரையாடல் வானதியின் காதில் விழுந்தது. கசப்புடன் புன்னகைத்தாள்.

உண்மைதான்! கலைமணியம்மாள் சொன்னது உண்மைதான்.

கிட்டத்தட்ட பனிரெண்டு மணி வரை கணவன் வரக்கூடும் என்று தெரியாத அளவில் உறங்கிப் போனாள்!

உறக்கமும் நிம்மதியான உறக்கமாக இருக்கவில்லை.

குழப்பமும், கனவுகளும் நிறைந்த உறக்கம்.

காலையில் எழுந்ததற்குப் பிறகும்கூட அடுத்து என்ன செய்வது என்று தெரியாமலே காரியங்கள் தொடர்ந்தன.

எப்போது வேண்டுமானாலும் வரக்கூடும் என்ற நினைப்பிலேயே குளித்தாள். புடவை மாற்றிக் கொண்டு தயாரானாள்.

ஆறரை மணிக்கு மேல் 'இனியும் அறையில் அடைந்து கொண்டு கிடந்தால் நன்றாக இருக்காது' என்ற எண்ணத்தோடு வெளியே வந்தாள்.

ஹாலில் தயக்கத்தோடு நின்றாள்.

நடுத்தரக் குடும்பங்கள் வாழ்கின்ற அளவிலான வீடு. மூன்று படுக்கை அறைகள் இருந்தன. தவிர ஒரு ஹால், டைனிங் ஹால் என்று வசதிகள் இருந்தன.

ரஞ்சித் ஒரே மகன். செல்லம் அதிகம் போலும் என்று எண்ணிக்கொண்டாள்.

நல்ல வேளையாக கலைமணியம்மாள் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு விஷயங்களைக் கையாள்பவராக இருந்தார்.

''என்னம்மா... குளிச்சுட்டியா..! வா... வா'' என்று வரவேற்றார்.

வானதி கொஞ்சம் இயல்புக்கு வந்தாள்.

''ஆமாங்க அத்தே...! அவரு... இன்னும் வர்லே'' என்று தடுமாறினாள்.

''பரவாயில்லை...! நீ காஃபி சாப்பிடுவியா... இல்ல டீ சாப்பிடுவியா? நான் போட்டுத் தர்றேன்.''

''இல்லே... நானே...!'' என்று அவள் இழுத்தாள்.

''அதெல்லாம் கவலைப்படாதே... ரெண்டு மூணு நாளைக்குப் பிறகு பழகினப்புறம் நீ போடுவியாம். இண்ணைக்கு நான் போட்டுத்தர்றேன்'' என்றார்.

அவளும் அடுப்படிக்குப் போய் நின்றாள். கலைமணி இயல்பாகப் பேசினார்.

''இந்தப் பயல்... ரஞ்சித்துக்கு அந்த ரகுநாத் பயலை ரொம்பப் பிடிக்கும். ஒத்தையா வளந்துட்டானா... அதனாலே அவன் கூடவே சுத்திக்கிட்டு இருப்பான். அதான். நீ ஒண்ணும் தப்பா நினைக்காதே. எல்லாம் கொஞ்ச நாளானா சரியாப் போயிடும்....'' என்றார்.

''சரிங்க அத்தே...'' என்றாள் வானதி.

அப்போதுதான் வானதி ''அத்தே....! சும்மா இருக்கறது எனக்குக் கஷ்டமாக இருக்கு. எங்க வீட்ல நான்தான் சமையல் பண்ணுவேன்'' என்றாள்!

''சரி.... அப்படின்னா நீயே சமையல் செய்'' என்ற கலைமணியம்மாள் தானும் கூடவே வந்து நின்றார்!

எதுஎது எங்கே இருக்கிறது என்று சொன்னதோடு கலகலவென்று பேச்சுக்கொடுத்துக் கொண்டே இருந்தார்.

வானதிக்கே கொஞ்ச நேரத்தில் ஆச்சரியமாகிப் போனது. மாமியாரிடம் அவ்வளவு இயல்பாகப் பேச ஆரம்பித்திருந்தாள்.

கலைமணிக்கு அவள் மனம்திறந்து பேசுகிற அளவுக்குப் பழகுகிற சாமர்த்தியம் இருந்தது.

''எங்க வீட்ல சாப்பாடும் காலையிலேயே சமைச்சிடுவோம். ஏன்னா அவன் சாப்பாடு எடுத்துட்டுப் போயிடுவான். பகல்ல வரமாட்டான். எங்களுக்கு மட்டும் கொஞ்சமா பகல்ல சாப்பாடு வைச்சுப்போம்'' என்றார்.

ரஞ்சித் சொந்தமாக ஒரு தொழில் நடத்திக் கொண்டிருந்தான். அச்சகத் துறை சார்ந்த தொழில். திருமண அழைப்பிதழ்கள் தயாரித்து விற்கும் தொழில். அவன் கடை ஓரளவுக்கு பிரபலமாக இருந்தது.

அந்த நிறுவனத்தில் நாற்பது பேருக்கு மேல் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். புதுமையாகத் திட்டமிட்டு நிறைய டிசைன்களில் தயாரிப்பான். அதனால் அவன் பெயரும் பிரசித்தமாக இருந்தது.

ரகுநாத் அந்த விஷயத்தில் நிறைய ஆலோசனைகள் தருவான். அப்படித்தான் அவர்கள் நட்பு ஆரம்பித்தது. இரண்டு பேரும் இணைபிரியாத நண்பர்களானார்கள்.



கலைமணியம்மாள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் சதுர்முகனுக்கு மட்டும் அவர்களது நட்பில் பிடித்தமில்லை.

ரகுநாத் காரியார்த்தமாகப் பழகுவதாகவே அவர் நினைத்தார். ஆனால் ஒருநாளும் வாய்விட்டுச் சொல்லவில்லை. மனதுக்குள்ளேயே வைத்துக் கொண்டார். இப்போது மனைவியுடன் செலவு செய்ய வேண்டிய நேரத்தைக் கூட அவன் ரகுநாத்துடன் செலவு செய்வது குறித்து அவருக்குக் கடுங்கோபம் இருந்தது. ஆனால் பேசுவதற்கு இது நேரமில்லை என்று கருதியே அவர் மௌனமாக இருந்தார்.

பத்துமணியிருக்கும். தளர்ந்த தோற்றத்துடன் ரஞ்சித் வந்தான். இன்னும் முழுமையாகப் பழகாததாலோ என்னவோ வானதி சமையலறை வாசலிலே தயங்கி நின்றாள்.

''வாடா..!'' என்று கலைமணிதான் வரவேற்றார்.

''கொஞ்சம் காஃபி கொடும்மா'' என்று சோபாவில் அமர்ந்தான்.

''என்னப்பா... ரகுநாத்துக்கு எப்படியிருக்கு?'' என்று விசாரித்தபடியே திரும்பி மருமகளிடம் காஃபி கொண்டு வரும்படி சைகையாலேயே சொன்னார் கலைமணி.

என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டு நின்ற வானதிக்கு இந்த ஏற்பாடு மிகவும் சௌகரியமாக இருந்தது.

அப்பாவும் தன் பங்குக்கு ''என்னப்பா... ரகுநாத் எப்படி இருக்கான்?'' என்றார்.

''பெரிய காயமில்லை. அம்மாவும் அப்பாவும் இல்லையா... அதனால பயந்துட்டான். அதனாலதான் நான் கூட இருக்க வேண்டியதா போச்சு...'' என்றான் விளக்கம் போல.

''அப்படியா?'' என்று கேட்டுக் கொண்ட அப்பா ''சரிப்பா ரெஸ்ட் எடு'' என்று நியூஸ்பேப்பரைப் கையில் எடுத்துக் கொண்டு சிட் அவுட்டுக்குப் போய்விட்டார்.

''குளிக்கிறியாப்பா?'' என்று கேட்டுக்கொண்டே ஏதோ வெந்நீர் போடுபவர் போல கலைமணி அந்தப் பக்கம் போனார்.

வானதி தயக்கத்துடனும் வெட்கத்துடனும் அவனை நோக்கிப் போனாள்.

''காஃபி'' என்று நீட்டினாள். அவன் லேசான புன்னகையுடன் வாங்கிக் கொண்டான்.

''சாரி....! ரகுநாத் கூடக் கொஞ்சம் தங்க வேண்டியதா போச்சு'' என்றான்.

அவள் அந்த விளக்கத்தால் கொஞ்சம் மனம் குளிர்ந்து போனாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

''பரவால்ல...! சூழ்நிலை அப்படியாயிபோச்சு'' என்றாள் அவள் விளக்கம் போல.

''ம்...'' என்றான்.

மெதுவாக காஃபியை அருந்தினான்.

''ரஞ்சித்... குளிக்க வா...'' என்றார் அம்மா. அவன் எழுந்தான்.

''ஆமா...! குளிச்சுட்டுக் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும்'' என்றான்.

பாத்ரூமை விட்டு வெளியே வந்து கொண்டிருந்த கலைமணி மருமகளிடம், ''போம்மா... போ...! ஹெல்ப் பண்ணு! நாங்க கோவிலுக்குப் போயிட்டு வரோம்...'' என்றார்.

கணவரையும் கிளப்பிக் கொண்டு கோவிலுக்கு புறப்பட்டார்.

குளித்துவிட்டு வெளியே வந்த ரஞ்சித்துக்கு அருகே இருந்து பரிமாறினாள்.

''பெரிய காயம் ஒண்ணுமில்லே. இருந்தாலும் இந்த மாதிரி நேரத்துலே... ஹெல்ப் பண்ணணுமில்லே'' என்றான் அவளிடம் - மன்னிப்புக் கோருபவன் போல.

''ஆமா ஆமா...!'' என்றாள் அவசரமாக. சுற்றும் முற்றும் பார்த்தான். ''பாரேன்... நமக்கு அம்மா பிரைவசி குடுக்கறாங்களாம்.''

அவள் முகம் சிவந்ததை சுவாரசியமாகப் பார்த்தான்.

''அது... நேத்து... நீங்க...!'' என்று இழுத்து நிறுத்தினாள்.

சாப்பிட்டு முடித்து எழுந்து கைகழுவிக் கொண்டு நின்றவன் கையைத் துடைத்தவன் மெல்ல அவளை அருகே இழுத்தான்.

''கோபமா?'' என்றான் குழைந்த குரலில்.

''இல்லே...!'' என்றாள் அவள் மெல்லிய குரலில். மெல்ல அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டாள்.

''ஐ'ம் சாரி...!'' என்றான்.

அப்படியே அறைக்குப் போனார்கள். மெல்ல அவளைத் தோளில் சாய்த்துக் கொண்டான்.

''இதபாரு... வானதி...! ரகுநாத்ன்னா எனக்கு உசுரு...! அதை நீ



புரிஞ்சுக்கணும். அவன் ஆஸ்பத்திரியில் இருக்கறப்ப நாம சந்தோஷமா இருக்க முடியாதுல்லே...! நீ புரிஞ்சிக்கிறியா?'' என்றான்.

அவள் மெல்லத் தலையாட்டினாள்.

''யெஸ்...! அவன் ஆஸ்பத்திரியிலே இருந்து வீட்டுக்கு வரவரைக்கும் நீயும் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்... சரியா..!'' என்றான்.

அவளுக்கு உள்ளூரக் கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தாலும் வேகமாகத் தலையை உருட்டினாள்.

''உங்க இஷ்டம்...!'' என்றாள். அவளே தொடர்ந்து,

''ராத்திரி சரியாத் தூங்கி இருக்க மாட்டீங்க. இப்ப ரெஸ்ட் எடுங்க'' என்றாள்.

எப்போதடா... அவள் வாயில் இருந்து அப்படியொரு வார்த்தை வரும் என்று காத்திருந்தவன் போல சடாரென்று படுக்கையில் காலை நீட்டினான். அவள் தலையணைகளை சரி செய்து கொடுத்தாள்.

அடுத்த சில நிமிடங்களில் அவன் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டான்.

வானதி அவன் முகத்தையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பெருமூச்சொன்று கிளம்பியது. ஜன்னல் திரைகளை இழுத்து விட்டுவிட்டு அறையின் ஓரமாக இருந்த சோபாவில் அமர்ந்தாள்.

நியூஸ் பேப்பரை எடுத்துப் பிரித்தாள். சரசரவென்று ஒலி எழும்பியது.

''என்னடா... ரகு... வேணும்'' என்று அவன் திடுக்கிட்டு விழிக்க,

''இல்லல்லே... நான்தான், பேப்பர் படிச்சேன். இதோ... மடிச்சு வெச்சுட்டேன்'' என்றாள்.

மெல்ல எழுந்து வந்து ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்தாள்.

என்ன செய்வது என்று தெரியவில்லை.

டி.வி. போட்டாள். ஒலி எழும்பாத வகையில் மௌனக் காட்சி போல் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

கோவிலுக்குச் சென்ற மாமனாரும், மாமியாரும் திரும்பி வந்து - பாவமாக அமர்ந்திருந்த அவளைப் பார்த்தார்கள். ஏதோ கேட்கத் துவங்குகையில் அவள் 'உஷ்' என்பதுபோல சைகை செய்து ''தூங்கறாரு'' என்றாள்.

அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள, அவள் அவர்கள் இருவரையும் பார்ப்பதை அறவே தவிர்த்தாள்.

எதையோ எடுக்கிறாற் போல நடித்துக் கொண்டு கனகாரியமாக சமையலறைக்குப் போனாள்.



## 3

"ஏம்பா தம்பி...! ஏதோ பேசணும்னு சொன்னியே..." என்றார் சதுர்முகன்.

"ஆமப்பா...!" என்றான் ரஞ்சித்.

"சொல்லு...!" என்று எதிர் சோஃபாவில் அமர்ந்தார் சதுர்முகன்.

"அதாம்ப்பா...! கடையைக் கொஞ்சம் எக்ஸ்டெண்ட் பண்ணலாம்னு ஐடியா...! தீபாவளி, ரம்ஜான்னு பண்டிகைகள் வேற வருது...! அதுவுமில்லாம ஐப்பசி, கார்த்திகை மாசங்கள்ல நிறைய கல்யாணங்கள் வேற வருது இல்லே...! நிறைய ஆர்டர்கள் வேற வரும்..." என்றான்.

"நல்லதுதானேப்பா...! செய்யலாமே...! ஆனா... எப்படி எக்ஸ்டெண்ட் பண்ணுவே...? இருக்கிற இடம் அவ்வளவுதானேப்பா..."

"இல்லப்பா..! பக்கத்துக் கடைக்காரர் காலி பண்றாராம்....!'

"ஆமா...! அந்த அச்சாபீஸ்...! அப்ப பேசிப் பாக்கறதுதானே..?"

"பேசினேன்ப்பா...! அச்சாஃபீஸ்ஸயே விலைக்குக் கேட்டுட்டேன். தர்ற மாதிரித்தான் பேசினாரு...!"

அப்பா மிகவும் மகிழ்ந்து போனார்.

"நல்லதுப்பா...! அச்சாஃபீஸ் தணிகை வேல்தானே..! நான் அவர்கிட்டே பேசறேன்... ஏன் விக்கறாராம்?"

"அவங்க பசங்க ரெண்டு பேருமே என்ஜினீயர்ஸ்தானேப்பா...! அவங்கள்ளாம் வெளியூர்ல வேலைக்குப் போயிட்டாங்களாம். அவங்களுக்கு இந்தத் தொழில்ல இன்ட்ரஸ்ட் இல்லையாம். இவரால தனியா அலைய முடியலையாம். 'அச்சகத்தை வித்துடறேன். ஆனா... வீட்ல என்னால சும்மா இருக்க முடியாது...! நானே வந்து மேற்பார்வை பாத்துக்கறே'ங்''கறார்.

"அது சரிவருமா? உறவுப்பிரச்சனைகள் வரக்கூடாது!"

"அது பாத்துக்கலாம்ப்பா...! அவரோட கௌரவம் குறையாத அளவுல ஏதாவது பண்ணிக்கலாம்ப்பா"

"அதுவும் சரிதான். இத்தனைநாள் சுறுசுறுப்பா இருந்துட்டு... சும்மா இருக்கறதுன்னா கஷ்டம்தான். நானும்கூட அப்படியே பாத்துக்குவேன்" என்றார்.



"சரிப்பா! உங்களுக்கும் அவங்களுக்கும் நல்லா ஒத்துப்போகும்...!" என்று புன்னகைத்தான்.

சதுர்முகனும் புன்னகைத்துக் கொண்டார். அதற்குப் பிறகு விலை நிலவரம் பேசினார்கள். அந்தப் பேச்சு முடிந்ததற்குப் பிறகுதான் அவன் கண்கள் வானதியைத் தேடின.

"உங்க அம்மாவும், அவளும் கோவிலுக்குப் போனாங்கப்பா" என்றவர் தொடர்ந்து 'சொல்லலாமா வேண்டாமா' என்று யோசித்தாற்போலத் தயங்கினார். பிறகு 'சொல்லித்தான் ஆக வேண்டும்' என்ற முடிவோடு சொன்னார்.

"பாரு தம்பி! உன் ஃபிரெண்டுக்குத்தான் இப்ப சரியாய் போச்சே! கொஞ்சம் வானதியையும் கவனிப்பா! புதுப்பொண்ணு...! நம்ம வீட்டு சூழ்நிலைக்கு அட்ஜஸ்ட் ஆகணும். முதலில் உனக்கும் அவளுக்கும் ஒரு அண்டர்ஸ்டேண்டிங் வரணும்" என்றார்.

குரலில் கொஞ்சம் மனத்தாங்கல் இருந்தது.

ரஞ்சித் சற்றே மௌனம் காத்தான். பிறகு 'அப்பா! உங்களுக்குத் தெரியும்... நானும் ரகுநாத்தும் ரொம்ப நாளா ஃபிரெண்ட்ஸ். திடீரென்று வந்த உறவுக்காக நட்பைத் திடீரென்று கட் பண்ண முடியுமா?'

'தப்பா பேசறப்பா! இது திடீர்னு வந்த உறவு இல்லே! உன்னோட வாழ்க்கை பார்ட்னர். இனிமே ஆயுசுக்கும் உன்னோட நிற்கப்போற உறவு. வந்த புதுசலேயே அந்தப் பொண்ணு மனசுல வெறுப்பை உண்டாக்காதே!' என்றார்

'போங்கப்பா! வானதி ஒண்ணும் தப்பாவே எடுத்துக்கலை! நீங்கதான் பெரிசு பண்றீங்க!' என்றான் ரஞ்சித்.

'இல்லப்பா. தினமும் உன்னை எதிர்பார்த்து அந்தப் பொண்ணு ஏமாந்து போகுது. வந்தவுடனே வாய்விட்டுச் சொல்லலேன்னாலும் மனசுக்குள்ளே ஏமாத்தம் இருக்குது. புரிஞ்சு நடந்துக்க' என்றார் அப்பா.

குரலில் தெரிந்த கடுமை அவனைப் பேசவிடவில்லை. கொஞ்சம் எரிச்சலோடு தலையாட்டிவிட்டு நகர்ந்தான்.

கோவிலுக்குப் போய்விட்டு வந்த வானதியும் கலைமணியும் பைக் நிற்பதைப் பார்த்தார்கள்.

'வானதி... உங்க ஊட்டுக்காரன் வந்துட்டான்' என்றார் கலைமணி.

உற்சாகத்துடன் உள்ளே நுழைந்தாள்.

ஆர்வமாகத் தங்கள் அறைக்குப் போனாள்.

ரஞ்சித் பரபரப்பாக மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தான். அவள் அதையெல்லாம் கவனிக்கிற மனநிலையில் இல்லை.

'வந்துட்டீங்களா? அம்மா கோவிலுக்குப் போனாங்களா... கூட கூப்பிட்டாங்க. நானும் போனேன். இந்தாங்க விபூதி' என்று ஆர்வமாக நீட்டினாள்.

ரஞ்சித் ஒரு வினாடி அவள் முகத்தைப் பார்த்தான். ஆசையும் அன்பும் பொங்கி வழிகிற அந்த முகத்தைப் பார்த்ததும் அவனுக்குள்ளும் ஏதோ ஒன்று நகர்ந்து கொடுத்தது.

'வச்சுவிடு' என்றான் லேசாக நெகிழ்ந்த குரலில். அவள் உள்ளத்துக்குள்ளே பூந்தென்றல் வீசினாற்போல உணர்ந்தாள். ஆசையாக அவன் நெற்றியில் திருநீறைப் பூசிவிட்டாள்.

'காஃபி கொண்டு வரட்டுமா?' என்றாள்.

'ம்...' என்றான்.

அவள் உற்சாகமாகப் போவதை வெறுமையாகப் பார்த்தான்.

நண்பர்களெல்லாம் அடிக்கடி சொல்வது நினைவுக்கு வந்தது.

'நட்பாவது ஒண்ணாவது... கல்யாணம்ன்னு ஒண்ணு ஆனா முடிஞ்சது' என்ற வார்த்தைகள்தான் அவை. தலையை உலுக்கிக் கொண்டான்.

'ம்கும்.... ம்ஹூம். அது மட்டும் என் வாழ்க்கையில் நடக்கவே நடக்காது' என்று எண்ணிக் கொண்டான்.

முகத்தில் மீண்டும் இறுக்கம் வந்து குடியேறியது. அந்த இன்னொரு நிகழ்வும் மனதுக்குள் வந்து போனது.

இப்படித்தான் ஒருநாள் கோவிலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள் அவனும் ரகுநாத்தும் சிம்மேந்திரனும். டாபிக் என்னவோ இதேதான். நட்புக்கும் கல்யாணத்திற்கும் இடையே நேர்கிற போட்டி பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போதுதான் ரகுநாத் சொன்னான், 'டேய் ரஞ்சித்! நாம வித்தியாசமா இருந்து காட்டணும்டா...'

'எப்படி?' என்றான் சிம்மேந்திரன் சற்றே கேலியாக.

'எப்பவுமே நம்ம ஃப்ரெண்ட்ஷிப்ல இருந்து நாம மாறக்கூடாது. வேண்ணா... இவனையே சாட்சியா வச்சு... இந்தக் கோவில்ல உறுதிமொழி எடுத்துக்குவோமடா...!' என்றான்.

'ஓ...! எஸ்...!' என்று கொஞ்சம் சீரியஸாகவே பதில் சொன்னான் ரஞ்சித்.



சிம்மேந்திரனை சாட்சியாக வைத்து 'நாங்கள் என்றைக்கும் நண்பர்களாக இருப்போம்' என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

திருமணம் முடிந்த பிறகு சிம்மேந்திரன்கூட அதை நினைவு படுத்திச் சிரித்தான்.

'டேய்... ரஞ்சித்...! உறுதிமொழி... அது ஞாபகம் இருக்கா...! பாப்பம்டா... இனிமே...' என்று சிரித்தான்.

இப்போது அதெல்லாம் நினைவுக்கு வர சிலிர்த்துக் கொண்டான் ரஞ்சித்.

தலையை உசுப்பிக் கொண்டான். மனைவி கொண்டு வந்து கொடுத்த காஃபியை, 'உர்'ரென்று முகத்தை வைத்துக் கொண்டு வாங்கிக் கொண்டான்.

வானதிக்கு, இந்த முக மாற்றத்திற்குக் காரணம் புரியவில்லை.

முகத்தை ஜாடையாகப் பார்த்தபடி காஃபியை நீட்டினாள். வாங்கிக் கொண்டான். குரலை செருமிக் கொண்டான்.

'நான் ரகுவைப் பார்க்கப் போனதுபத்தி அப்பாகிட்டே கம்ப்ளெயிண்ட் பண்ணினியா?' என்றான்.

அவள் திகைத்துப் போனாள். அதிர்ச்சி நிறைந்த முகத்துடன் அவனைப் பார்த்தாள்.

'இல்லையே! அப்பாகிட்டே இதைப் பத்தி நான் பேசவே இல்லையே?' என்றாள் அவசரமாக.

'ம்... வேற எதைப் பத்திப் பேசினே?' என்றான் அமர்த்தலாக.

அவள் மறுபடியும் திகைத்தாள். 'இதுவரைக்கும்... அதிக பட்சமா... பத்து வாக்கியம்தான் அப்பா கிட்டே பேசியிருப்பேன். அதுவும் எங்க பிறந்த வீட்டு மனுஷங்களைப் பத்தித்தான் விசாரிப்பாரு...' என்றாள்.

'ம்.... இனிமேயும் ஒண்ணு ஞாபகம் வச்சுக்க! நானும் ரகுநாத்தும் நீ வர்றதுக்கு முன்னாடியே ஃப்ரெண்ட்ஸ்! நீதான் புது வரவு...! என்னையும், அவனையும் பிரிக்கறதுக்காகச் செய்யற எந்த முயற்சியும் எனக்குப் பிடிக்காது...' என்றான் சற்றே கண்டிப்பான குரலில்.

அவள் பதறிப் போனாள்.

'ஐயோ...! நான் எதுக்கு உங்களைப் பிரிக்கணும்? இன்ஃபாக்ட்... உங்க நட்புல நீங்க இவ்வளவு தீவிரமா இருக்கறது... எனக்குப் பிடிச்சுத்தான் இருக்கு...!' என்றாள்.

அவளது பதைபதைப்பில் இருந்த உண்மையின் தீவிரம் அவனுக்குப் புரிந்தது.

'ம்... அதானே... பாத்தேன்...! ஆனா.. அப்பா எதுக்கு உட்கார வச்சு... அப்படி உபதேசம் பண்ணினாரு...?' என்றான்.

'தெரியலே...!' என்றாள் அவள் முனகலாக.

'சரி...! இனிமே.... உன் சைடில இருந்து எனக்குப் பிராப்ளம் வராமப் பாத்துக்க..! அப்பா... அம்மாவை நான் பாத்துக்கறேன்!' என்றான்.

அவள் வேகமாகத் தலையாட்டினாள்.

அவன் சிரித்துக் கொண்டான்.

'சரி... புறப்படு...!' என்றான்.

'எங்கே...?!' என்றாள்.

'சினிமாவுக்குப் போலாம்....' என்றான்.

அவள் உற்சாகமாகப் பத்தே நிமிடத்தில் புறப்பட்டாள். சினிமாவுக்கு போனார்கள்.

அங்கே வைத்து அவள் முற்றிலும் வேறொரு ரஞ்சித்தைப் பார்த்தாள்.

தியேட்டரில் படம் ஓட ஓட இன்னொரு பக்கம் வேடிக்கையாக அவன் விமர்சன வரிகள் ஓடின.

சிரித்து சிரித்து அவள் வயிறு புண்ணாகிப் போனது.

சோகமான காட்சியில் கூட அவள் சிரிப்பதைப் பார்த்துவிட்டு அக்கம்பக்கத்தார்கள் ஒரு மாதிரியாக புன்னகைத்துக் கொண்டார்கள்.

'என்னங்க...! எல்லாரும் ஒரு மாதிரியா பார்க்கறாங்க...!' என்றாள்.

'எல்லாம் இந்தப்படத்தோட பாதிப்பா இருக்கும்...!' என்றான்.

வீட்டுக்கு வந்ததற்குப் பிறகும் அவன் புதிதாகத் திருமணமான ஒரு கணவன், மனைவியிடம் எப்படியிருக்க வேண்டுமோ, அப்படித்தான் நடந்து கொண்டான்.

திருமணமாகி வந்த நாளிலே இருந்து தன் கணவனுக்குத் தன்னை அவ்வளவாகப் பிடிக்கவில்லையோ என்ற சந்தேகம்கூட அவளுக்குள்ளே லேசாக இருந்தது.

அந்த மாதிரிக் கவலைகளையெல்லாம் சுத்தமாகத் துடைத்துவிட்டான் அவள் கணவன்.

மௌனச் சிரிப்பும், கொண்டாட்டமுமாக அவர்கள் அந்த நாளைக் கழித்தார்கள்.

எல்லாம் அடுத்தநாள் அந்தத் தொலைபேசி அழைப்பு வரும்வரை தான்.





# 4

'நல்ல வேளை! இப்படியொரு யோசனை வந்ததே' என்று எண்ணிக் கொண்டாள் வானதி.

செல்போன் எடுத்தாள்.

'ஏங்க! இன்னைக்கென்னமோ நீங்க வரதுக்கு நேரமாகும்னு சொன்னீங்களே! நானே சாப்பாடு கொண்டு வரட்டுமா?' என்றாள்.

'இங்கே பாருப்பா...! இதை அங்கே வை! அதை இங்கே வை...!' என்று யாருக்கோ இன்ஸ்ட்ரக்ஷன் கொடுப்பது தெரிந்தது.

பொறுமையாகக் காத்திருந்தாள்.

ஓரிரு வினாடிகளுக்குப் பிறகு அவன் குரல் கொஞ்சம் கடுமையான தொனியுடன் ஒலித்தது.

'என்ன சொல்லு?'

'இல்லே..! நான் வேண்ணா சாப்பாடு கொண்டு வரட்டா?'

'ம்...!' என்றவன் அங்கே யாரிடமோ -

'அங்கே இல்லப்பா.. இங்கே... இங்கே...' என்று சொல்லிவிட்டு போனைத் துண்டித்துக் கொண்டான்.

அந்த 'ம்' என்ற ஒற்றை எழுத்தையே ஒப்புதலாக எடுத்துக் கொண்டு அவள் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு போனாள்.

கடையை விரிவுபடுத்திக் கொண்டிருந்தார்கள். அவளைப் பார்த்தவுடன் பெரிதாக எந்தப் பிரதிபலிப்பும் காட்டாமல் -

'என்ன... எங்கே வந்தே?' என்றான்.

அவள் திகைத்துப் போனாள்.

'என்னங்க... இப்படிக் கேக்கறீங்க?' என்றாள்

'என்ன... எப்படிக் கேட்கிறேன்....' என்று பதில் சொன்னாலும் கண்கள் என்னமோ பொருட்கள் எங்கெங்கே வைக்கப் படுகின்றன என்பதைக் கவனிப்பதிலேயே இருந்தன.

'நான்தான் ஃபோன் பண்ணினேனே? சாப்பாடு கொண்டு வரட்டுமான்னு கேட்டேன். நீங்க கொண்டுவான்னு சொன்னீங்களே...?' என்றாள் ஆற்றாமையுடன்.

'நானா...? அப்படியா சொன்னேன்?' என்றான். அவளுக்குள் ஏமாற்றம்

பொங்கியது.

'ஓ! ஏதோ நினைவில் வரச் சொல்லியிருக்கிறார் என்று வருத்தத்துடன் எண்ணிக் கொண்டாள்.

அவள் முகம் வாடுவதைக் கவனித்தவன், 'சரி...! சரி...! பரவால்லே...! அந்த ரூம்ல வை...! சாப்பிடறேன்' என்றான்.

எங்கே திருப்பி அனுப்பி விடுவானோ... என்று யோசனையுடன் நின்றவள் அவன் ஒப்புதல் கேட்டவுடன் துள்ளலுடன் 'சரி...' என்று அறைக்குள் போனாள்.

அவள் துள்ளலையும், உற்சாகத்தையும் பார்த்தவுடன் அவனையும் அறியாமல் அவன் முகத்தில் புன்னகை அரும்பியது.

மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான். ஒரு இருபது நிமிடத்திற்குப் பிறகு மனைவி காத்துக் கொண்டிருக்கிறாள் என்பது நினைவுக்கு வர அந்த ஓய்வறைக்குப் போனான்.

அவள் பொறுமையுடன் அமர்ந்திருப்பதைப் பார்த்தவுடன் புன்னகைத்தான்.

'இங்கே... இத்தனை வேலையை விட்டுட்டு எப்படி நிம்மதியா சாப்பிட முடியும்? வீட்டுக்கே வந்திருப்பேனே...' என்றான்.

'இல்லே..! நேத்திக்கே சாப்பிட வர்லே! உங்களுக்கு மோர்க்குழம்பு ரொம்பப் பிடிக்கும்னு அத்தை சொன்னாங்க! செஞ்சேன். அதான் கொண்டு வந்தேன்...!' என்றாள்.

'ஆனாலும்... அசத்தறிடி என் செல்லம்.' என்றான். குறும்பாகக் கண் சிமிட்டினான்.

சட்டென்று அவன் மூடு மாறியது! 'பளிச்'சென்று சிரித்தான்.

அவள் முகமும் பூவாய் மலர்ந்தது. அவள் பரிமாற அவனும் மகிழ்ச்சியோடு சாப்பிட்டான். அப்படியே மெல்ல அவன் அறையை நோட்டமிட்டான்.

அது மட்டுமில்லாமலம் பத்திரிகை டிசைன்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஷோ கேஸ்களைக் கூடப் பார்த்தாள்.

'ஏங்க...! உங்க ஆஃபீஸ் ரூம்ல கொஞ்சம் சேஞ்சஸ் பண்ணினா நல்லா இருக்கும் போல இருக்கு....' என்றாள்.

'செய்யேன்...!' என்றான்.

சாப்பிட்டு முடித்தவுடன் யாரோ வாங்குபவர்கள் வந்தவுடன் அவன் எழுந்து போனான்.



அவள் இந்த அறையில் சிறிய மாற்றங்கள்தான் செய்தாள்.

சுவரில் தொங்கிக் கொண்டிருந்த படங்கள் இரண்டு மூன்றை இடம் மாற்றி வைத்தாள். மேஜையில் இருந்த இரண்டு மூன்று பேபிள் வெயிட்களை இடம் மாற்றினாள்.

அறையே மாறினாற் போல அழகாகி விட்டது. அவன் உள்ளே வந்தவன் மெல்ல நோட்டம் விட்டான்.

'ஹேய்...! நல்லா இருக்கே...!' என்று சிரித்தான்.

அவள் உள்ளத்தில் உற்சாகம் பொங்கியது. அதே உற்சாகத்தோடு ஷோ கேஷ்களிலும் வேறு சில மாற்றங்கள் செய்தாள்.

ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிறங்களில் பத்திரிகைகளை வைத்த விதத்தில் எல்லாமே எடுப்பாகத் தெரிந்தன.

'சார்! மேடம் உண்மையாவே நல்லா அரேன்ஜ் பண்றாங்க.' என்று ஆளுக்காள் அவனிடத்தில் சொல்லும்போது அவனுக்குள்ளேயும் ஏதோ மொட்டு விரிந்தாற் போலத்தான் இருந்தது.

ஒரு விதமான மகிழ்ச்சியும், நிறைவும் அவன் உள்ளத்தில் நிறைந்து உடலுக்குள் வியாபித்த மாதிரி இருந்தது. ஒருவிதமான புளகாங்கிதம் உள்ளுக்குள்ளே நிறைந்த மாதிரி உணர்ந்தான்.

அதே உணர்வுடன் நின்று கொண்டிருக்கையில்தான் அது நிகழ்ந்தது!

ரகுநாத் உள்ளே நுழைந்தான். கொஞ்சம் ஆர்ப்பாட்டமாகவே நுழைந்தான்.

'டேய்! ரஞ்சித்!' என்று குரல் வேறு கொடுத்தான்.

ஸ்விட்ச் போட்டாற் போலத் திரும்பினான் ரஞ்சித்.

இதுவரை நடந்த எல்லாவற்றையும் மறந்தவன் போலத் திரும்பினான்.

'டேய்! ரகு!' என்று அவனை நோக்கி வேகமாகப் போனான்.

வானதியின் மனதில் சற்றே வாட்டம் ஏற்பட்டது. இவ்வளவு நேரமும் கணவன் தன் அன்புப் பிடிக்குள்ளே இருந்தாற்போலவும், சட்டென்று தனது அன்பு வலையை அறுத்துக் கொண்டு போகிறாற் போலவும் இருந்தது.

'என்னடா...! ரொம்ப பிஸியா? நானும் அப்பவே இருந்து ஃபோனை அடிச்சடிச்சுப் பார்க்கிறேன். நீ கிடைக்கவே மாட்டேங்கிறே...!' என்றான்.

'அப்படியா? நான் இங்க வேலையா இருந்தேன்.' என்றபடி, தனது செல்ஃபோனை எடுத்துப் பார்த்தான்.

உண்மைதான்! நான்கைந்து முறை அழைத்திருந்தான் போலும்.

'சாரிடா...!' என்றான்.

'பரவால்லே...! பரவால்லே...!' என்றவன் கடையை நோட்டம் விட்டான். அவன் முகம் மாறியது.

'என்னடா இது! எல்லாம் சேன்ஜ் ஆயிருக்கு.' என்றவன் பத்திரிகைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஷோகேஸின் அருகிலே போனான்.

உதட்டைப் பிதுக்கினான்.

'யார்டா இப்படி அரேன்ஜ் பண்ணினது? நல்லாவே இல்லையே?!' என்றான்.

கடைக்கே உரிமைக்காரன் போல எல்லாவற்றையும் கலைத்தான். மாற்றி அடுக்கினான்.

வானதி துணுக்குற்றாள். ரகுநாத்தைக் கவனிப்பதைவிட அவள் கண்ணும், மனமும் ரஞ்சித்தைத்தான் கவனித்தன.

ஒன்றுமே சொல்லாமல், செய்வதறியாதவன் போல விழித்துக் கொண்டிருக்கிற கணவனைக் கண்டவுடன் உள்ளே கொதிப்புக் கிளம்பியது!

அப்போதுதான் ரஞ்சித் மெல்லத் தன் வாயைத் திறந்தான்.

'டேய்! அது வானதி அரேன்ஜ் பண்ணினது' என்றான்.

'ஓ...! அப்படியா..! வானதி வந்திருக்காங்களா?' என்றவன் நண்பனிடம் புன்னகைத்து விட்டு அவளை நோக்கி வந்தான்.

'என்ன மேடம்! ரஞ்சித்தை விட்டுட்டு இருக்க முடியலையா? கடைக்கே வந்துட்டீங்க!' என்றான்.

'இல்லே...! அவர் நேரத்துக்கு சாப்பிட வர்றதில்லே...! அதான் நானே... சாப்பாடு கொண்டு வந்தேன்...!'

'அப்படியா...! சாப்பாடு கொண்டு வந்திருக்கீங்களா? உங்க சமையல் நல்லாயிருக்கும்னு சொல்லியிருக்கானே! டேய்... ரஞ்சித்! சாப்பிடலாம் வாடா!' என்று குரல் கொடுத்தான்.

ரஞ்சித் உடனே - செய்துகொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு அவர்களின் ஓய்வறைக்கு வந்தான்.

'உட்காரு! உட்காரு!' என்றான். இருவரும் ஒரு மேஜையின் இப்புறமும், அப்புறமுமாக அமர்ந்தார்கள்



வானதி ரகுநாத்துக்கு பரிமாறினாள்.

'சூப்பர்..!' என்று சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டான் ரகுநாத். அவன் ரசித்துச் சாப்பிட்ட விதத்தில் அவள் மகிழ்ச்சியடைந்தாலும் தன் கணவன்மேல் அவன் உரிமை கொண்டாடுகிற விதம்குறித்து அவளுக்குக் கோபம் பொங்கியது. ஆனால் காட்டிக் கொள்ள முடியவில்லை.

'என்ன சொல்லுங்க சிஸ்டர். இந்தப் புடலங்காய்க் கூட்டும் புளிக்குழம்பும் சூப்பர் காம்பினேஷன்...' என்றான் கூட்டை எடுத்து வாயில் திணித்துக் கொண்டு.

பரிமாறியபோது அவள் கையிலே மோர் கொட்டி விட்டது.

கழுவிக் கொள்வதற்காக அவள் பாத்ரூம் பக்கம் போனாள்.

அக்கவுண்ட் செக்ஷனில் இருந்த அக்கவுண்டண்ட் தன்ராஜும், கிளார்க் தமயந்தியும் பேசுவது காதில் கேட்டது.

'ஆனாலும் இந்த ரகுநாத் இப்படி அட்டையாக ஒட்ட வேண்டாம்.' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் தமயந்தி.

'ஆமாங்க தமயந்தி.' என்றார் தன்ராஜ். மேலும் தொடர்ந்து,

'எங்க... தமயந்தி...! எதுக்கும் 'அந்த' மேட்டரை மேடம் காதுல போட்டுரலாமா?' என்றார் தன்ராஜ்.

ஏதோ விஷயம் இருக்கிறது என்று உணர்ந்தாற்போல் சற்று நேரம் கை கழுவுவது போலவே நின்றாள் வானதி.

'ஆமாங்க தன்ராஜ் சார்! சொல்லிடுங்க.' என்றாள் தமயந்தி.

வெகு நேரம் நின்றால் நன்றாக இருக்காது. திரும்பி கணவன் இருக்கும் மேஜைக்கு வந்தாள்.

தன்ராஜ் எதைச் சொல்லப் போகிறார் என்று கவலையாவே இருந்தாள்.

தன்ராஜ் மிகவும் சாமர்த்தியமாக, அவள் தனியாகக் கிடைத்த ஐந்து நிமிட இடைவெளியில் அவளிடம் விஷயத்தைச் சொன்னார்.

முழுமையும் கேட்ட பிறகு அவளுக்குள் இருந்த ஆதங்கம், ஆத்திரமாக மாறியது.



## 5

**வ**ண்டியை நிறுத்தினான் ரஞ்சித்.

மனதுக்குள் கொஞ்சம் உறுத்தலுடன்தான் வந்தான். 'பாவம்...! மிகவும் ஆசையாக பத்திரிகைகளை அடுக்கினாள் மனைவி! என்ன இருந்தாலும் ரகுநாத் அதைக் கலைத்திருக்கக்

கூடாது.' என்ற எண்ணம் அவனுக்குள்ளும் இருந்தது. இத்தனைக்கும் வானதி அடுக்கியிருந்த விதம் நன்றாகவே இருந்தது.

கடையில் இருந்த ஊழியர்கள் முன்னிலையில் இந்த விஷயத்தைப் பெரிது படுத்த வேண்டாமே என்றுதான் விட்டு விட்டான்!

தனிமையிலாவது தன் நண்பனைக் கண்டித்திருக்கலாம். ஆனால் திருமணம் முடிவானவுடனே அடிக்கடி ரகுநாத் 'ம்.... இனிமே அவ்வளவுதான்... ஃபிரண்ட்ஷிப்பை மறந்துடுவே...' என்பது போலப் பேசி அவனுக்குள் ஒரு உறுத்தல் உணர்வை ஏற்படுத்தி இருந்தான். சட்டென்று அவனைக் கண்டிக்க முடியாததற்கு அதுவும் ஒரு காரணமாகி விட்டது.

வானதியோ வேறுவிதமான மனநிலையில்தான் இருந்தாள். இதுநாள்வரை கணவன் நண்பனுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறான் என்பது மட்டும்தான் அவளுக்குள் ஒரு ஆதங்கமாக இருந்தது. ஆனால் இப்பொழுது அது கோபமாக மாறி இருந்தது.

ரஞ்சித் உள்ளே வரும்போதே 'ஹேய்! வானதி...!' என்று குரல் கொடுத்துக் கொண்டு வந்தான்.

திருமணமாகி வந்ததில் இருந்து முதல்முறையாக அவன் குரல் ஒலித்தது இப்படி!

அவளுக்கும் உடனே 'என்னங்க!' என்று ஓட வேண்டும்போல இருந்தது. அடக்கிக் கொண்டாள்!

இங்கிதம் தெரிந்து பெற்றோர்கள் கோயிலுக்குப் புறப்பட்டனர்.

ரஞ்சித் இன்னும் சுதந்திரமாக உணர்ந்தான்! வானதி ரொம்பவும் வேலையிருப்பவள் போல சமையலறைக்குள் புகுந்து கொண்டாள்.

என்ன செய்யலாம் என்று யோசித்தவள் காஃபி கலக்க ஆரம்பித்தாள்.

போய் விட்டு வருகிறோம் என்று குரல் கொடுத்த பெற்றோரை வாசல் வரை சென்று வழியனுப்பினான் ரஞ்சித்.

வானதி ஏற்கெனவே தலையாட்டி விட்டுத்தான் உள்ளே நுழைந்து கொண்டாள்!

வாசல்வரை சென்றபின் சதுர்முகன், 'எங்கே... மருமகப்பொண்ணு...!' என்று தேட முற்படுகையில் 'வாங்க சித்தே பேசாம...!' என்று செல்லமாகக் கண்டித்து இழுத்துக் கொண்டு போனார் கலைமணி

அவர்கள் கிளம்பியபின் மீண்டும் உள்ளே நுழைந்த ரஞ்சித் தங்கள் அறைக்குப் போனான். சுற்று முற்றும் பார்த்தான்.

மனைவியைக் காணவில்லை.



'ஹேய்.... வான்...' வானதி...!' என்று சமையலறைக்குப் போனான். மெல்லப் பின்னாலிருந்து கட்டிக் கொண்டான்.

அவளுக்கும் அது பிடித்தமானதாகத்தான் இருந்தது. உடனே அவள் உள்மனதுக்கு சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

'வேண்டாம்! திருமணமாகி வந்ததற்குப் பிறகு இன்றைக்குத்தான் கணவன் சற்றே உல்லாசமான மனநிலையில் இருக்கிறார். ஆஃபீஸ் பிரச்சனை இன்று நேற்று வந்த பிரச்சினை இல்லையே. கொஞ்ச நாளாகவே இருக்கிற பிரச்சினைதானே! பிறகு பார்த்துக் கொள்ளலாம்.' என்று முடிவு கட்டினாள்.

அவள் குரல் குழைந்தது!

'என்னவாம்... வானதிக்கு...!' என்றாள் மெல்லிய குரலில்.

'ம்... வானதிக்கு.... என்னென்னவோ சர்ப்ரைஸ் வச்சிருக்கேன்.' என்றான் அவனும் குழைந்த குரலில்.

'உங்க ஃபிரண்ட்கிட்டே அதுக்கெல்லாம் பர்மிஷன் வாங்கிட்டீங்களா?' என்று கேட்க வேண்டும் போல் இருந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

'இருங்க... காஃபி கொண்டுட்டு வரேன்..' என்றாள்.

'இருக்கேன்... இங்கேயே....' என்று அடுப்பு மேடை மேல் ஏறி அமர்ந்து கொண்டான். காலாட்டிக் கொண்டு அமர்ந்தவாறே அவளைக் குறுகுறுவென்று பார்த்தான்.

முகம் சிவக்க அவள் நடமாடுவதைப் பார்த்து அவனுக்குள்ளும் ஆனந்தம் பொங்கியது போலும். காஸ் அடுப்பை அணைத்துவிட்டு வரும்வரை காத்திருந்தான். பிறகு தன்னருகில் இழுத்துக் கொண்டான்.

அன்றைக்குத்தான் மனைவியின் அழகை முழுமையாக ரசிக்கிறோம் என்பது அவனுக்குப் புரிந்தே இருந்தது.

'ஆக்சுவலா... வெளியே போலாமான்னு யோசிச்சுக்கிட்டுத்தான் வந்தேன். அம்மா அப்பா... வெளியே கிளம்பறதைப் பார்த்தவுடனே நான் திட்டத்தையே மாத்திக்கிட்டேன் அம்மிணி...!' என்றான்.

'ம்... அப்படியா? கடையை விட்டுட்டு எப்படி வந்தீங்க?' என்றாள் அவள் செல்லக் கோபத்துடன்.

'பின்னே? கல்யாணம்னு ஒண்ணு ஆயிடுச்சில்லே...?'

'தேங்ஸ்!' என்றாள் அவள் மனப்பூர்வமாக.

'தேங்ஸை இப்படி சொல்லக்கூடாது.... வேற மாதிரி சொல்லணும்...' என்றான்.

அறைக்கு அழைத்துக் கொண்டும் போனான்.

தங்கள் விருப்பு வெறுப்புகளை எல்லாம் மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள். பல விஷயங்களில் அவர்கள் இருவரது ரசனையும் ஒத்துப் போனது என்பது அவளுக்கு உற்சாகத்தைத் தந்தது.

'ஏங்க..! நான் படிச்சிருக்கேன் - 'எந்த வீட்ல ஹஸ்பெண்ட் அண்ட் வொய்ஃபுக்குள்ளே நட்பு இருக்கோ, அவங்க வாழ்க்கைதான் சக்ஸஸ்ஃபுல்லா இருக்கும்'னு...!'

'அது சரிம்மா...! அதுக்காக நண்பர்களே கூடாதுன்னு சொல்லிராதீங்க' என்றான் அவன் படு எச்சரிக்கையாக.

கணவன் விவரமாகவே தனக்கு 'செக்' வைக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. சட்டென்று சலிப்பும் தட்டியது.

'நமக்கென்ன வந்தது! எப்படியோ போகட்டும் என்று விட்டு விடலாமா' என்று கூடத் தோன்றியது.

'ஆமா வானதி... நீ எதுக்குத் தேவையில்லாம தலையிட்டுக்கறே...! இன்னைக்குக் கணவன் நடந்து கொள்றதைப் பார்த்தா, 'என்னோட ஃபிரண்ட்ஷிப் விஷயத்துல நீ தலையிடாம இருந்தா நானும் ஒரு நல்ல ஹஸ்பெண்டாத்தான் இருப்பேன்'ற மாதிரித்தானே இருக்குது. உனக்கு ஆக வேண்டியதை மட்டும் நீ பாத்துட்டு நிம்மதியா இருந்துட்டுப் போயேன்.' என்றது ஒரு மனது.

'ஆமா...! ஆனாலும்.... ரகுநாத்க்கு அந்தத் தகுதி இல்லையே...! ஆனால் இப்போது எதைச் சொன்னாலும் கணவனிடம் எடுபடாது என்பதும் அவளுக்குப் புரிந்தது.

கணவனின் விருப்பத்துக்கு வளைந்து கொடுத்தாள்; இழைந்து கொண்டாள். சற்று நேர அளவளாவலுக்குப்பின் -

'அது சரி...! அத்தையும், மாமாவும் திரும்பி வர்றதுக்குள்ளே டிஃபன் ரெடி பண்ணணுமே...' என்றாள்.

'ஆமா... இல்லே! சரி... வா... நானும் ஹெல்ப் பண்றேன்....' என்றான்.

'நீங்களா?' என்றாள் ஆச்சரியமாக.

'ஏன்... நான் ஹெல்ப் பண்ண மாட்டேனா...? என்னோட ஹாபியே சமையல்தான்.' என்றான்.

சொன்னது மட்டுமல்லாமல் நன்றாகவே உதவி செய்தான்.

எளிமையாக ஒரு வெஜிடபிள் உப்புமா செய்திருந்தார்கள். ஃப்ரிஜ்ஜில் மாவு இருந்தது. தோசை வார்த்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்து



அதற்கேற்ப கடலைக் குழம்பு செய்தார்கள்.

நட்பு மலர்ந்தாற் போல உணர்ந்தாள்! மிகவும் மகிழ்ச்சியாக உணர்ந்தாள்!

அதே சமயம் 'உனது மகிழ்ச்சி மட்டுமே உனது நோக்கமாக இருப்பது நியாயமா? நடக்கிற விஷயத்தைத் தெரிந்த பின்னும் நீ கண்டு கொள்ளாமல் இருப்பது சரியல்ல...' என்றும் ஒரு குரல் அவளைப் பிறாண்டியது.

வேலைகளைச் செய்து கொண்டே, சிந்தனையும் செய்தாள்.

இதை நேரடியாக அணுகக்கூடாது. வேறு வழியில் அணுக வேண்டும். வியூகத்தை முடிவு செய்து கொண்டாள்.

'ஹேய்..! சூடாக இருக்கு! என்னால ரெஸிஸ்ட் பண்ணவே முடியலை! போடு தட்டிலே...!' என்று தட்டை எடுத்தான்.

பரிமாறிக் கொண்டே அவள் சொன்னாள். 'பாருங்க..! நான் இனிமே போர்க்கொடி உயர்த்தப் போறேன்...' என்றாள்.

அவன் அதை வேடிக்கையாகவே எடுத்துக் கொண்டான்.

'ம்ஹூம்...! எப்படி?' என்றான்.

'நானும் என் ஃபிரண்ட்ஸையெல்லாம் ரெகுலரா பாக்கப் போறேன்.'

'ம்...'

'ஆமா... பின்னே! ஜெண்ட்ஸுக்கு மட்டும்தான் கல்யாணத்துக்கு அப்புறமும் ஃபிரண்ட்ஷிப் நிலைச்சிருக்கணும்னு இருக்கா என்ன?'

அவன் சிரித்தான்.

'ஓஹோ...! உரிமைப் போர்...? நடத்து...!' என்றான்.

அவள் சிந்தனை வயப்பட்டவளாகத் தொடர்ந்தாள்.

'இல்லைங்க! என் ஃபிரண்ட்ஸ் எல்லாம் அடிக்கடி சொல்லுவாங்க..! 'கல்யாணத்துக்கு அப்புறம் பெண்களுக்கு நட்புங்கறது ஒரு கடந்த கால விஷயம்'ன்னு...! ஏன் அப்படி?' என்றாள்.

அவனும் யோசனையுடன் சொன்னான்.

'இருக்கலாம். நான் நினைக்கறேன், அதுக்குக் காரணமும் பெண்களேதான்னு! ஹஸ்பெண்ட், குழந்தைகள்னு... முக்கியத்துவம் கொடுக்கறாங்க...! தொடர்பு விட்டுப் போகுது...!'

'எங்கம்மாகூட அடிக்கடி சொல்வாங்க! அதுவும் எனக்குக் கல்யாணம்னு ஆனதுக்கப்புறம்.... ரொம்பத் தனிமையா ஃபீல் பண்றாங்க! இப்பத்தான் பழைய நட்போட நினைவெல்லாம் வருதுங்கறாங்க...!'

'அது சரி..! இப்ப எதுக்கு இதெல்லாம் சொல்றே? உனக்கு ஏதோ கோபம் இல்லே?

'ஐயய்யோ...! அப்படியெல்லாம் இல்லைங்க...! ஒரு ஆதங்கம்.' என்றாள்.

'ஓ.கே. நான் ஸ்ட்ரெயிட்டா வர்றேன்...! இன்னைக்கு நீ ரொம்ப நல்லா அலங்காரம் செஞ்சே! ஆனா.. ரகுநாத் வந்து அதையெல்லாம் கலைச்சுட்டான். எனக்கே கோபம்தான்...! ஆனா, வேலையாட்கள் முன்னாலே அவனை விட்டுக்குடுக்கவும் முடியலே! ஆனா தனியா சொன்னேன்' என்றான்.

கணவன் இவ்வளவு தூரம் இறங்கி வருவான் என்று அவள் நினைக்கவில்லை. இந்த நேரத்திலேயே அந்த முக்கியமான விஷயத்தையும் சொல்லி விடலாமா என்று நினைத்தாள்.

'ஆமா... அவர் அப்படி செஞ்சிருக்க வேண்டாம்தான். அது மட்டும் இல்லைங்க. இன்னும் அவரைப் பத்தி...'என்று ஆரம்பித்தாள்.

சட்டென்று ரஞ்சித்தின் முகம் மாறியது!

'இதுதான்... இடம் குடுத்தா மடம் பிடுங்கறதுங்கறது.' என்றான்.

வானதியின் முகமும் மாறியது!

'தப்புப் பண்றீங்க அத்தான்...! நான் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வந்தேன். நீங்க இதுக்காக வருத்தப் படுவீங்க..!' என்றாள்.

'பரவால்லே! தட்ஸ் நன் ஆஃப் யுவர் பிஸினஸ்...!'

'அப்ப சரி! நானும் என் ஃபிரண்ட்ஸை எப்ப வேண்ணா பாக்கப் போவேன்...!' என்றாள்.

அவன் சட்டென்று விலகி நின்றான்.

'ஓ.கே...! இனிமே நான் உன் ஃபிரண்ட்ஸைப் பத்திப் பேச மாட்டேன். நீயும் ரகுநாத்தைப் பத்திப் பேசக் கூடாது...' என்றான் கடுமையான குரலில்.

'ஏங்க...! எனக்கொண்ணும் அவர் மேலே பொறாமையெல்லாம் இல்லே...! நான் உங்க நல்லதுக்குத்தான் சொல்ல....' என்று அவள் மேலே பேசுமுன்னே அவன் 'விசுக்'கென்று எழுந்தான்.

சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினான் அவன். அப்போது கொஞ்சம் திகைத்துப் போனாள் என்றால் அவனது பெற்றோர்கள் 'என்னது... வெளியே போயிருக்கானா?' என்று கேட்ட போது அவர்களை எப்படி சமாதானப் படுத்துவது என்று தெரியாமல் இன்னும் கொஞ்சம் திகைத்துத்தான் போனாள்.





# 6

'நீ என்னடா... நீ...! உன்னால எனக்குப் பெரிய தலைவலியாகப் போச்சு...' என்று சலித்துக் கொண்டான் ரஞ்சித்.

'ஏன்... என்னாச்சு?' என்றான் ரகுநாத்.

'பின்னே... நீ பாட்டுக்கு என் வைஃப் செஞ்ச அரேன்ஜ்மெண்ட்டைக் கலைச்சு விட்டுட்டே. அவளுக்கு அதனால கோபம்!'

'எவளுக்கு?' என்றான் ரகுநாத் - அசிரத்தையாக. அவன் கேட்ட முறையும் அந்தச் சொல்லும் ரஞ்சித்துக்கே கோபத்தை வரவழைத்தது.

'டேய்.... என்னடா நீ...! இப்படி மரியாதையே இல்லாம என் வைஃபைப் பத்தி...!' என்று கோபப் பட, ரகுநாத் -

'சாரிடா... சாரிடா...' என்றான். மேலும் தொடர்ந்து 'எனக்கென்னடா... தெரியும் - உன் வைஃப் செஞ்ச அலங்காரம்ன்னு...?'

'தெரியலேன்னா பரவால்லே! சட்டுன்னு நீ கலைச்சிருக்கக் கூடாதில்லே...!'

'ஆமா...' என்றான் அவனும் வருத்தத்துடன். அப்படி அவன் ஒத்துக் கொண்டதற்குப் பிறகு ரஞ்சித்துக்குப் பேசுவதற்கு ஒன்றுமில்லாமல் போய் விட்டது.

'சரிடா. போகட்டும் விடு! அதனால இப்ப வீட்ல பிரச்சினை...!'

'இது என்னடா பெரிய விஷயம். சரண்டராயிடு!'

'ஆமாண்டா. அப்படித்தான் செய்யணும். போடா... எதுக்குக் கல்யாணம் பண்ணினோம்ன்னு இருக்கு.... எல்லா உரிமைகளும் பறிபோற மாதிரி இருக்கு...' என்றான்.

'அப்படித்தாண்டா இருக்கும் ஆரம்பத்துல. அப்புறம் சரியாய்ப் போயிடும்.'

'என்னத்தை சரியாப் போறது?' என்றான் ரஞ்சித்.

அதே நேரம் -

ரகுநாத்தின் செல்"ஃபோன் ஒலித்தது. எடுத்தான்.

இன்றைக்கு ஏனோ ரகுநாத் தன்னிடம் அசிரத்தையாகவே பேசுவது போல உணர்ந்தான் ரஞ்சித். 'இவனுக்காகத்தான் மனைவியிடம் சண்டை போட்டுவிட்டு வந்திருக்கிறோம். இவனானால் அதைக் கண்டு கொள்ளாதவன் போல நடந்து கொள்கிறானே' என்றிருந்தது.

திரும்பி ரகுநாத்தை கவனித்தான்! அவன் செல்ஃபோனை எடுத்துக் கொண்டு நகர்ந்தான்.

முகம் மலர அவன் உற்சாகமாகப் பேசிக் கொண்டே நகர்ந்தான்.

வாயசைவை மட்டுமே ரஞ்சித்தால் பார்க்க முடிந்தது. என்ன பேசுகிறான் என்று புரியவில்லை.

புதிதாகக் கல்யாணமான மனைவியையே விட்டுவிட்டு வந்திருக்கிறோம். ஆனால் இவன் கவனிக்கவில்லையே!

முதன்முறையாக அவனுக்குள் சலிப்புணர்வு தோன்றியது. சற்று நேரம் இவனைக் காக்க வைத்து விட்டுத்தான் வந்தான் ரகுநாத்.

'யாரு... ஃபோன்ல?' என்றான் ஆர்வமாக.

'இது வேற...!' என்று அந்தக் கேள்விக்கான பதிலைத் தவிர்த்து விட்டான் ரகுநாத்.

அடிபட்டாற் போல உணர்ந்தான் ரஞ்சித்

'சரிடா...! நான் கிளம்பறேன்.' என்று கிளம்பினான்.

பேருக்குக்கூட 'இரேண்டா...!' என்று சொல்லவில்லை ரகுநாத்.

மிகுந்த வருத்தத்துடன் கிளம்பினான் - வீட்டில் என்ன காத்திருக்கிறது என்று தெரியாமல்.

'**யா**ராக இருக்கும்?' என்ற எண்ணத்தோடு கதவைத் திறந்தாள் சுப்ரியா.

ஆச்சரியத்தைக் கொட்டிக் கொடுத்தவளாய் அங்கே நின்று கொண்டிருந்தாள் வானதி.

'ஏய்.... என்னடி... இது! புதுப் பொண்ணு... அதுவும் இந்த நேரத்துல...?' என்றாள் சுப்ரியா வியந்து போனவளாய்!

'ஏன்... வரக்கூடாதா?' என்றாள் வானதி செல்லமாகக் கோபித்தவளாய்.

'ஐயய்யோ! வரக்கூடாதுன்னு சொல்வேனா? எதிர்பாராத சந்தோஷமில்லையா.... இது?' என்றாள்.

'வா... வா... உட்காரு!' என்று சோஃபாவில் அமரச் செய்தாள்.

வானதி சுற்றுமுற்றும் பார்த்தாள். 'எங்கடி அம்மா அப்பா?' என்றாள்.

'இரண்டு பேரும் கோவிலுக்குப் போனாங்க...! எவ்வளவு சீக்கிரம் என்னை இங்க இருந்து கடாச முடியும்னு பாக்கறதுக்கு கோவில் கோவிலாய் போய்... ரெகமண்டேஷன் பிடிச்சுட்டிருக்காங்க' என்றாள்.



'ஆமாடி. எல்லாப் பெத்தவங்களுக்கும் இது ஒரு பெரிய கவலை! எப்படியாவது நம்மளை வெளியே அனுப்பிட்டா, அவங்க நிம்மதியாயிடுவாங்க! ஆனா, நமக்குக் கவலை ஆரம்பிச்சுடும்.' என்றாள் வானதி.

சுப்ரியாவின் நெற்றியில் முடிச்சுக்கள் விழுந்தன.

'என்ன இது? புதிதாகக் கல்யாணம் செய்தவள். இப்படிப் பேசுகிறாளே?' என்ற கவலை உள்ளே ஓடியது.

உடனடியாக ஒரு காரியம் செய்தாள். தங்கள் வீட்டு டெலிஃபோனை எடுத்தாள். முக்கியமான இரண்டு பேருக்கு ஃபோன் செய்தாள்.

அரைமணி நேரத்தில் வீடு களை கட்டியது! அப்படி ஒரு காரியம் நடந்தது. ஜலஜாவும், மாதங்கியும் ஆர்ப்பாட்டமாக வந்து சேர்ந்தார்கள்.

'ஹேய்...! எப்படிடி ரெண்டு பேரும் வந்தீங்க?' என்றாள் வானதி.

'அது... நான்தான் ஃபோன் பண்ணினேன்.' என்றாள் சுப்ரியா.

'எதுக்குடி?' என்றாள் வானதி.

'ஏய்.... சுப்ரியா! நீ போய் டிஃபன் பண்ணு. நாங்க இவகிட்டே கொஞ்சம் பேசணும்' என்றாள் ஜலஜா.

'என்ன இது?' என்பது போலப் பார்த்த சுப்ரியாவிடம் கண்ணசைத்தாள் ஜலஜா.

சரியென்று தலையசைத்து விட்டு உள்ளே போனாள் சுப்ரியா.

சுப்ரியா அந்தப் பக்கம் போனவுடன் ஜலஜாவும், மாதங்கியும் வானதியின் இரண்டு பக்கமும் அமர்ந்தார்கள்.

'என்னடி விஷயம்? இப்படி ஏழு மணிக்கு... அதுவும் தனியா... சுப்ரியா வீட்டுக்கு வந்திருக்கே?' என்றாள் மாதங்கி.

மாதங்கி கேட்டதுதான் தாமதம்.

வானதி பொங்கிப் பொங்கி அழ ஆரம்பித்தாள்!

மாதங்கியும், ஜலஜாவும் திகைத்துப் போனார்கள். 'ஹேய்... என்னடி இது?' என்றார்கள்.

கொட்டித் தீர்த்தாள் வானதி.

ஜலஜாவும், மாதங்கியும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மாதங்கி மெல்ல வாய் திறந்தாள்.

'அடி பைத்தியமே..! வாழ்க்கைன்னா என்ன நினைச்சே. நீ இப்பத்தான் ரஞ்சித்தோட வாழ்க்கையில நுழைஞ்சிருக்கே. நீ நுழைஞ்சவுடனே அவரு

அடியோட மாறிட முடியுமா? கொஞ்சம், கொஞ்சமாதான் மாறணும்!' என்றாள்.

வானதி கண்களைத் துடைத்துக் கொண்டாள். 'ஆமாம்' என்பது போல மேலும் கீழுமாகத் தலையாட்டினாள்.

'அப்புறம் தனியா இருக்கும்போது உன்கிட்டே அன்பா நடந்துக் கறார்தானே?' என்றாள் ஜலஜா.

'அதுக்கெல்லாம் ஒண்ணும் குறையில்லே....' என்றாள் வானதி.

ஜலஜாவும், மாதங்கியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு புன்னகைத்தார்கள்.

இரண்டு தோழிகளுமாய் சேர்ந்து கொண்டு வாழ்க்கை பற்றிப் பாடமெடுக்கத் தொடங்கினார்கள்.

**அ**தே நேரம்!

வானதியின் வீட்டில் ஒரு பெரிய களேபரமே நடந்து கொண்டிருந்தது.

நண்பன் வீட்டில் இருந்து ஒருவிதமான தளர்வான மனநிலையில் வந்தான் ரஞ்சித்.

உள்ளே நுழையும் போதே மனைவியின் அருகாமையை நாடுகின்ற மனநிலையில் இருந்தான்.

'ஹேய்... வானதி...!' என்று குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே வந்தான்.

வீட்டின் நடு ஹாலில் சோஃபாவில் அம்மாவும், அப்பாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

அவன் எல்லா அறைகளிலும் தேடி விட்டு வந்தான். அதுவரையிலும் அம்மாவும், அப்பாவும் சோஃபாவில் இருந்து நகரவேயில்லை.

ரஞ்சித் திரும்பி வந்தான்.

'அம்மா..! வானதி எங்கே?' என்றான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். உதட்டைப் பிதுக்கினார்கள்.

'யாருக்குத் தெரியும்?' என்றார்கள்.

'அம்மா... என்னம்மா... சொல்றே?' என்றான்.

'என்னடா நடக்குது இங்கே...? நீ என்னமோ திடீர்ன்னு வெளியே போனே...! கொஞ்ச நேரத்துல அவ என்னமோ ஃப்ரெண்ட் வீட்டுக்குப் போயிட்டு வரேன்னு கிளம்பிப் போனாள்' என்றார் அம்மா.

அவன் ஒரு நிமிடம் திகைத்துப் போனான்.



'இந்த நேரத்துலயா?' என்றான்.

'ஆமா...!' இந்த முறை குரல் வந்தது அப்பாவிடம் இருந்து.

'ம்...! எந்த... ஃப்ரெண்ட் வீட்டுக்காம்? எப்ப வருவாளாம்?' என்றான்.

'எதுவும் எங்ககிட்ட சொல்லலையே?' என்றார் அம்மா.

அவன் திகைத்துப் போனான்.●

'ஓ' என்றான் உள்ளடங்கிய குரலில்...

'நீங்க எதுவும் கேட்கலையா?' என்றான்.

'எப்படிக் கேட்கறது? கேக்கறோம்னு வச்சுக்கோ. அதுக்கு அவ, 'உங்க பையனும் இப்படித்தான் ஃப்ரெண்டைப் பாக்கப் போறேன், ஃப்ரெண்டைப் பாக்கப் போறேன்னு கல்யாணம் ஆன மொதோ நாள்ல இருந்து போயிட்டு வர்றாரு! அவரை நீங்க எதுவும் கேக்கலையே'ன்னு கேட்டா நாங்க முகத்தை எங்கே கொண்டு போய் வச்சுக்கறது. அதான் கேட்கலே....' என்றார்கள்.

'ஓஹோ...!' என்றான் சுருதி இறங்கிய குரலில்.

'ஆமப்பா..! அவளே வருவா.' என்றார் அம்மா.

அவன் கடிகாரத்தைப் பார்த்தான்.

'இப்ப மணி என்ன தெரியுமா? ஒன்பதரை' என்றான்.

அம்மா அப்பாவிடம் இருந்து எந்தப் பிரதிபலிப்பும் வராமல் போகவே அவன் கோபமாகத் தனது அறைக்குப் போனான்.

அடுத்த ஒரு மணி நேரம்!

அறைக்குள் குறுக்கும் மறுக்குமாக நடைபோட்டுக் கொணடிருந்தான். முகத்தில் கோபம் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

அம்மா மெதுவாக அறைவாசலில் நின்றபடி சொன்னார்கள்,

'தம்பி! அவ வந்தவுடனே எதுவும் பேசிறாதே! மெதுவா சொல்லிக்கலாம். வீணா சண்டை போடாதே! நீ செய்யறதைத் தானே அவளும் செய்யறா...' என்று முடிக்கும் முன்னதாவே அவன் வாயைத் திறந்தான்.

அவன் சொல்லப் போவதை அறிந்தாற்போல அம்மா... 'நான் ஆம்பளை'ன்னு சொல்லப் போறியா? அதெல்லாம் இந்தக் காலத்துல செல்லாது.' என்றார்.

அவன் சுத்தமாக அடங்கிப் போனான். பத்தரை மணிக்கு மாதங்கியும், ஜலஜாவும் வானதியைக் கொண்டு வந்து விட்டுவிட்டுப் போனார்கள். அவர்களிடம் மிகவும் பண்பாகவே நடந்து கொண்டு அனுப்பி வைத்தான்.

'இருக்கட்டும்' என்று மனதுக்குள் கறுவிக் கொண்டே இருந்தான்.



# 7

**'சே..'** என்று சலித்துக் கொண்டான் ரஞ்சித். கோபம், கோபமாக வந்தது!

இரண்டு நாட்களாக ரகுநாத்துக்கு ஃபோன் செய்கிறான். அவன் எடுக்கவே மாட்டேன் என்கிறான்.

வீட்டிலோ நிலைமை வேறுவிதமாக இருந்தது. அம்மா அப்பா ஒரு பக்கம் கோபித்துக் கொண்டு முகத்தைத் தூக்கிக் கொண்டிருந்தார்கள் என்றால், வானதியும் கோபத்தில் இருந்தாள்.

'உங்களுக்கு மட்டும்தான் நட்பு இருக்க வேண்டுமா? எங்களுக்கு நட்பு இருக்கக் கூடாதா...' என்று உரிமைக் குரல் கொடுக்கிறாள்; கொடி பிடிக்கிறாள்.

என்ன செய்வதென்றே தெரியவில்லை.

முக்கியமான நேரத்தில் முரண்டு பிடிகிறாள். இத்தனைக்கும் கல்யாணமாகி ஒரு மாதம் கூட முடியவில்லை. இத்தனை குழப்பம் இந்த ரகுநாத்தால்தான் என்று கொஞ்சம் கோபம்கூட வந்தது.

'சார்! இவங்களுக்கு நாலாயிரம் கார்ட்ஸ் வேணுமாம். இந்த நாலு மாடலும் பார்க்கணும்கறாங்க.' என்று வந்தார் தன்ராஜ்.

முக்கியமான ஆர்டர்கள் என்றால் மட்டுமே தன்ராஜ் அவன் டேபிளுக்கு வருவார்.

ரஞ்சித் உடனே பூவுலகுக்கு வந்தான்.

'சொல்லுங்க சார்...!' என்று அவன் அவர்களிடம் பேச ஆரம்பித்தான். அந்த நேரம் மற்ற எல்லாக் கவலைகளும் பின்னுக்கு ஓடின.

'சார்! முந்நூறு ஸ்பெஷல் கார்ட்ஸ் வேணும்! கொஞ்சம் ஹை குவாலிட்டி கார்டா வேணும்!' என்றார்கள்.

'சார்! த்ரீ டி கார்ட்ஸ் கூட இருக்கு சார்! ஆனா விலை முந்நூறு ரூபாய் வரும்' என்று எடுத்துக் காண்பித்தான்.

அவர்களுக்கு மிகவும் பிடித்துப் போனது. கிடைத்தது மிகப் பெரிய ஆர்டர் என்பதால் அவனும் உற்சாகமானான். மற்ற கவலைகளையெல்லாம்கூட மறந்து போனான்.

உடனே வேண்டும் என்றார்கள்.

'இல்ல சார். உங்களது பெரிய ஆர்டர். கொஞ்சம் டைம் குடுங்க! அட்லீஸ்ட் ஒரு வாரமாவது வேணும்...'என்றவன் எதற்கும் தன்ராஜிடம் பேசுவோம் என்று எழுந்து போனான்.

அப்போது தமயந்தியும், தன்ராஜுூம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'சார்! நான் திரும்பத் திரும்ப சொல்லிக்கிட்டிருக்கேன். நீங்க காதுல வாங்கிக்கவே மாட்டேங்கறீங்களே!' என்று குறைபட்டுக் கொண்டிருந்தாள் தமயந்தி.

'அவங்க ரொம்ப நாளா பர்சனல் ஃப்ரெண்ட்ஸா இருக்காங்க. நாம எப்படி நடக்கல...?' என்று இழுத்துக் கொண்டிருந்தார் தன்ராஜ்.

ரஞ்சித்துக்கு கொஞ்சம் சலிப்பாகத் தோன்றியது. 'சார்...! கொஞ்சம் வரீங்களா?' என்றான் லேசான கடுப்புடன்.

'இதோ வந்துட்டேன் சார்...!' என்று வேகமாக வந்தார் தன்ராஜ்.

'பாருங்க! இவங்களுக்கு இந்த மாடல் பத்திரிகை வேணும்னு கேட்கறாங்க...!'

தொழில் விஷயத்தில் மூழ்கினார்கள்.

ரகுநாத்தையும், வானதியையும் ஒரு சேர மறந்து போனார்கள்.

பெரிய ஆர்டர் தொடர்பான விஷயங்கள் முடிந்த பிறகு அவனே தன்ராஜிடம் பேசினான்.

'ஏங்க தன்ராஜ் சார்! நம்ம ஆஃபீஸ்ல எல்லாருக்கும் ஏனோ ரகுநாத்தைப் பிடிக்கறதில்லை... இல்லையா?'

தன்ராஜ் மென்று விழுங்கினார்.

'அப்படித்தான் தெரியுது...!' என்றார்.

'அப்புறம் ஏன் நேர்ல சொல்ல மாட்டேங்கறீங்க?'

'அது எப்படி..?' என்று அவர் மறுபடியும் மென்று விழுங்கினார்.

'இங்க உட்காருங்க' என்று எதிர்சீட்டைக் காட்டினான். அவரும் அமர்ந்தார்.

'சொல்லுங்க... உங்களுக்கு என்னென்ன காரணத்தால ரகுநாத்தைப் பிடிக்கறதில்லை.'

'அது... வந்து சார்... எல்லாருக்கும் அவங்கவங்க 'லைஃப் நேரம்'ன்னு இருக்கு! நேரம் காலம் இல்லாம உங்களை டிஸ்டர்ப் பண்றாரு...' என்றார்.

துணிவை வரவழைத்துக் கொண்டார். 'சொல்லறதுன்னு ஆச்சு... சொல்லிடுவோம்.' என்று எண்ணிக் கொண்டார்.

'சார்... கேட்டுட்டீங்க! என்ன இருந்தாலும் நான் உங்களை விடப் பெரியவன். உங்களுக்குப் பிடிச்சாலும் சரி... பிடிக்காட்டியும் சரி. சொல்லிடறேன்...

ஃபிரண்ட்ஷிப்ங்கற போர்ல அவரோட எல்லையை மீறாரு. உங்க குடும்ப வாழ்க்கையிலேயும் தலையிடறாரு!'

'ம்...!' என்றான்.

'எல்லாத்துக்கும் மேல... இன்னொரு முக்கியமான விஷயம் என்னன்னா...?'

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஃபோன் வந்தது.

'ஹேய்... ரகுநாத்...!' என்று அவன் உற்சாகமாகி அந்த இடத்தை விட்டு நகர,

'இத்தனை நேரம் பேசியதெல்லாம் வீண்' என்ற தோரணையில் தன்ராஜ் நிற்க - ஒரே நிமிஷத்தில் ஃபோன் பேசி முடித்து விட்டு வந்த ரஞ்சித்தின் முகம் இருண்டு கிடந்தது.

ஜாடையாக கணவனைப் பார்த்தாள் வானதி.

அவன் முகம் வாடியிருந்தது. வெறும் கோபம் மட்டும் அல்லாமல் வேறு ஏதோ உணர்வுகளும் அதில் தெரிந்தது.

என்னவோ நடந்திருக்கிறது. ஆனால் கணவன் மறைக்கிறான் - என்று தோன்றியது.

அவளுக்குள்ளும் ஒரு குற்றவுணர்வு இருந்தது. என்னதான் கணவன் பக்குவமில்லாதவனாக இருந்தாலும் தானும் எட்டிக்குப் போட்டி என்று ஆரம்பித்திருக்கக் கூடாது என்றும் இரவு பத்தரை மணிக்கு மேல் வீட்டுக்கு வந்திருக்கக் கூடாது என்றும் தோன்ற ஆரம்பித்திருந்தது.

அவ்வளவு துணிவாக அவள் நடந்து கொண்டதற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. அதைச் சொன்னால் அவன் இன்னும் கடுப்பாவான்.

எல்லாவற்றைக் காட்டிலும் இன்னொரு விஷயம் அவளைக் கவலைக்குள்ளாக்கியிருந்தது.

தன்ராஜ் அன்றைக்கு அவளிடம் சொன்ன விஷயம் அவளை வெகுவாக அச்சுறுத்திக் கொண்டிருந்தது. 'கண்டிப்பாக அதைச் சொல்லியே ஆக வேண்டும்.

ஒருவேளை தன்ராஜ் சொல்லியிப்பாரோ என்னவோ...? கேட்டுக் கொள்ளலாமா' என்று யோசித்தாள்.

நல்ல வேளையாக தன்ராஜிடம் செல்ஃபோன் எண் வாங்கியிருந்தாள். தங்களது வீட்டின் பின்புறம் போய் தன்ராஜை அழைத்தாள்.

'சார்! நான் வானதி பேசறேன்!' என்றாள்.



'மேடம்...! குட் ஆஃப்டர்நூன் மேடம்...' என்றார் தன்ராஜ் பணிவாக.

'சார்...! நீங்க அந்த விஷயத்தை எங்க ஹஸ்பெண்ட்டுகிட்டே சொல்லிட்டீங்களா?' என்று கேட்டாள் ஆவலாக.

'மேடம்...! நான் சொல்லலாம்னுதான் இருந்தேன். ஆனா, அதுக்குள்ளே வேற ஒரு விஷயம் நடந்து போச்சுங்க! சார்... உங்ககிட்ட சொல்லலையா... மேடம்...?'

'இல்லையே! என்ன விஷயம்?'

'மேடம்...' என்று இழுத்து விட்டு அந்த விஷயம் என்னவென்று சொன்னார்.

'ஓ' என்று ஒரு நிமிடம் அமைதியாகி விட்டாள்.

'அதான்... ரெண்டு நாளா... மூட் அவுட்ல இருக்காரோ....?' என்றாள் தனக்குத் தானே பேசிக் கொள்வது போல.

'ஆமாம் மேடம்... இந்த சமயத்துல அந்த விஷயத்தையும் சொன்னா... ரொம்பவே அப்செட் ஆயிடுவாரு...' என்றார் தன்ராஜ்.

'ம்.... அது உண்மைதான்.' என்றாள். சற்று யோசித்தாள். பிறகு,

'சார்... நீங்க இப்ப எதுவும் சொல்ல வேண்டாம். டைம் பாத்து நானே சொல்றேன்.' என்றாள்.

'வேண்டாம்... மேடம்! ஆஃபீஸ் மேட்டர் எல்லாம் எதுக்கு மேடத்துக்கு சொன்னேன்னு கேட்டா....?'

'ஓ... ஆமா.. அப்படியும் கேட்கக் கூடும்! சரி... பாக்கலாம். நா வைக்கட்டுமா?

'மேடம்...' என்றார் தன்ராஜ் தயக்கத்துடன்.

'ம்... சொல்லுங்க!'

'மேடம்...! சார் ரொம்ப அதிர்ச்சியா இருக்காரு... நீங்கதான் கொஞ்சம் அனுசரிச்சு...' என்று இழுத்தார்.

'ம்...'

'மேடம்... ஒரு சகோதரனா நினைச்சுத்தான் நான் சொல்றேன். தப்பா எடுத்துக்காதீங்க.' என்றார்.

'ஓ....கே...! ஓ.கே...! நான் சரியான கோணத்துலதான் எடுத்துகிட்டேன்.'

'தாங்ஸ்....' என்றார்.

வானதி செல்ஃபோனை ஆஃப் செய்தாள்.

ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தது.

ஒரு பக்கம் கணவனை நினைத்தால் பாவமாகவும் இருந்தது. ஆனால் இந்த நேரத்தில் கணவனுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று மட்டும் முடிவு செய்து கொண்டாள்.

அதையே கடைப்பிடிக்கவும் செய்தாள்.

**அ**ன்றிரவு!

முகமில்லாத முகத்துடன் நடமாடிக் கொண்டிருந்த கணவனைத்தான் ஜாடையாகப் பார்த்தாள்.

'ஏங்க... என்னமோ மாதிரி இருக்கீங்க...?'

'ப்ச்சு... அதெல்லாம் ஒண்ணுமில்லே....!' என்றான்

'ஏங்க... ஃப்ரீயா இருக்கீங்களா? கோவிலுக்குப் போலாமா.....? ' என்றாள்.

'ப்ச்...' என்று உச்சுக் கொட்டினான்.

'ஏங்க....?' என்றாள் கவலையுடன்.

'மனசு சரியில்லே....!' என்றான்.

'ஓ...!' என்றவள் கவலையுடன் அவன் எதிரில் அமர்ந்தாள்.

'ஏங்க... நான் ஏதாவது தப்பு பண்ணிட்டேனா?' என்றாள் - கலக்கமான முகபாவத்துடன்.

அவள் முகத்தின் தீவிரம் பார்த்து அவன் ஒருகணம் நெகிழ்ந்து போனான். வலக்கையால் அவள் கன்னத்தைத் தடவினான்.

'ஹேய்! நீ எந்தத் தப்பும் பண்ணலே!' என்றான் அன்பு நிறைந்த குரலில்.

அவளும் நெகிழ்ந்து போனாள்.

'தன் வாழ்க்கையையே நம்மிடம் ஒப்படைத்திருக்கிறாளே இந்தப் பெண். இவளை நாம் இதுவரை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லையே' என்ற குற்றஉணர்வு அவன் மனத்தைத் தாக்கியது.

'ஹேய் வானதி! இங்க வா! பக்கத்துல உக்காரு!'' என்றான்.

அப்படியே போய் அமர்ந்தாள்.

'வானதி! இந்த ரகுநாத் என்ன பண்ணினான் தெரியுமா?' என்றான்.

'தெரியும்' என்று சொல்ல வாயெடுத்தவள் காதில், 'தயவு செய்து நான் சொன்னேன்னு சொல்லாதீங்க மேடம்!' என்ற, தன்ராஜின் குரல் ஒலித்தது. அதனால் 'நீங்களே சொல்லுங்கள்' என்பது போல முகத்தை வைத்துக் கொண்டாள்.

'வானதி... அவன் இப்படி செய்வான்னு நினைக்கலே..!' என்றான்.



'என்ன செஞ்சாரு?' என்றாள்.

'கல்யாணம் பண்ணிக்கிட்டான்.' என்றான். அவளுக்கு சிரிப்பு வந்தது.

'நல்ல விஷயந்தானே..?' என்றாள்.

அவன் திரும்பி அவளை ஆழ்ந்து பார்த்தான். ஒரு பெருமூச்சு விட்டான்.

'கல்யாணம் நல்ல விஷயம்தான்! ஆனா... அவ்வளவு தூரம் என்கிட்டே நெருங்கிப் பழகினவன், இதை மட்டும் சொல்லலே பாத்தியா...! அதுதான் வருத்தம்.' என்றான்.

அவன் பெருமூச்சு விட்டான்.

'பரவால்லைங்க! நல்ல விஷயம் நடந்துருக்கு! அதுக்கு நாம சந்தோஷப்படணும்.' என்றாள்.

மறுபடியும் பெருமூச்சு விட்டான்.

'ஆமா.... அப்படித்தான் மனசைத் தேத்திக்கணும்...' என்றான்.

வானதி யோசித்தாள். சங்கடத்துடன் சங்கடமாக அந்த விஷயத்தையும் சொல்லி விடலாம் என்று முடிவெடுத்தாள்.

'ஏங்க..! நான் இன்னொரு விஷயம் சொல்லணும்' என்றாள்.

'சொல்லு...' என்றான்.

சொன்னாள்.

அவன் முகம் இறுகிப் போனது.

'உனக்கெப்படித் தெரியும்?' என்றான் இறுகிய குரலில்.

'எப்படிச் சொல்றது... எப்படிச் சொல்லறதுன்னு தன்ராஜ் சாரும், தமயந்தி மேடமும் பேசிக்கிட்டிருந்தாங்க. அப்ப காதில விழுந்தது...' என்றாள்.

முகம் இருண்டு போனவனாக சற்று நேரம் அமர்ந்து விட்டான்.

அவளுக்கே பாவமாக இருந்தது.



## 8

**யோ**சனையில் ஆழ்ந்திருந்தான் ரஞ்சித்.

'ஒருவகையில் நம்மை இளிச்சவாயன் ஆக்கி விட்டானே நண்பன்' என்ற எண்ணம் உள்ளே ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு மாதம் ஓடியிருந்தது.

ரகுநாத் ஒரே ஒரு முறை அலுவலகம் வந்திருந்தான் - தனியாக அல்ல!

புது மனைவியுடன் வந்திருந்தான்.

'சாரிடா! கோச்சுக்காதடா! பாத்தே ரெண்டு மாசம் தான் ஆச்சு! ரொம்ப பில்ட் அப் ஆயிடுச்சுன்னு வச்சுக்கயேன்!

நீயும் கல்யாணம், கல்யாணம்ன்னு பிஸியா இருந்தே! மெதுவா சொல்லிக்கலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே ரூபலதா ஃபேமிலியில மேரேஜ் பண்ணிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்திட்டாங்க...!' என்று அவனே பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பி விட்டான்.

புதுப்பெண்ணும், மாப்பிள்ளையுமாக வந்திருக்கையில் எதுவும் பேசுவதற்கு வழியில்லாமல் போய் விட்டது. ஆனால் தன் மனைவி அன்றைக்குக் கோடி காட்டிய விஷயம் அவனுக்குள் ஓடிக் கொண்டே இருந்தது.

தன்ராஜை அழைத்துக் கேட்பதற்கே வெட்கமாக இருந்தது.

'சரி... போகுது போ! கொஞ்சம் நஷ்டம்தான். இந்தளவுக்கு விடுபட்டோமே...' என்று எண்ணிக் கொண்டான். ஆனால் உண்மையில் நஷ்டம் எவ்வளவு என்பதை அவன் புரிந்து கொள்ளவில்லை.

வானதி அதைப் புரிந்து கொண்டிருந்தாள்! புரிந்து கொண்டது மட்டுமல்லாமல் அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறாள் என்பது அப்போது அவனுக்குப் புரியவில்லை.

'ஏங்க! உங்க ஃப்ரெண்ட் கொடுக்கறாரோ இல்லையோ, எதுக்கும் கேட்டுப்பாருங்க!' என்றாள்.

அலுவலகத்திற்குப் பறப்படும் நேரமாக ஆரம்பித்தால் எங்கே கோபித்துக் கொள்வானோ என்ற பயமும் எழுந்தது.

அவன் சிந்தனையுடன் அவளைப் பார்த்தான். மனைவி உண்மையிலேயே தன் நலம் விரும்பி என்பதை அவனும் உண்மையிலேயே உணர ஆரம்பித்திருந்தான்.

'ம்... சரி!' என்றான்.

'அதுமட்டுமில்லீங்க! கேக்கறதுக்கு முன்னாடி தன்ராஜ் சார்கிட்டே கேட்டு மொத்தமா எவ்வளவு தொகை கொடுத்திருக்கோம்கறதையும். தெரிஞ்சுக்குங்க! அப்புறம் கேளுங்க...!' என்றாள்.

'ம்...!' என்றான்.

அப்படியே தன்ராஜிடம் கேட்டான். அதிர்ந்து போனான்.

கிட்டத்தட்ட இரண்டரை லட்ச ரூபாய் வாங்கியிருந்தான்.



'என்ன சொல்றீங்க... தன்ராஜ் சார்! இவ்வளவு தொகை குடுத்திருக்கமா?' என்றான்.

தன்ராஜ் மென்று விழுங்கினார்.

'சார்...! ஒரே தடவையா வாங்கலை! கிட்டத்தட்ட ஒரு வருஷமா... சன்னஞ் சன்னமா வாங்கினாரு...!' என்றார்.

ரஞ்சித்துக்கு அதிர்ச்சியை விழுங்குவது கொஞ்சம் கடினமாக இருந்தது.

அடுத்து தன்ராஜ் சொல்ல வந்த ஏதோ விஷயத்தைக் கூட அவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

'அப்பறம் பேசலாம்' என்றபடி தன் அறைக்கு நகர்ந்து விட்டான்.

அவன் உள்ளே நகர்ந்ததும் தன்ராஜ் வானதியிடம் தனது செல்ஃபோனிலிருந்து பேசினார்.

வானதி அமைதியாகக் கேட்டுக் கொண்டாள். பிறகு,

'சார்! இந்த மேட்டர் இப்படியே இருக்கட்டும். இப்போதைக்கு அவர்கிட்டே சொல்ல வேண்டாம். முதல்லே அவர் பணம் கேட்கட்டும். எப்படியும் கொஞ்ச நேரத்துல தெளிவாகி பணம் கேட்பாரு. அப்ப என்ன பதில் வருதுன்னு பார்க்கலாம்.' என்றாள்.

'அதுவும் சரிதான்.' என்றார் தன்ராஜ். தமயந்தியிடம் ஆலோசித்தார்.

'பரவாயில்லயே... மேடம் சொல்றதுதான் கரெக்ட்' என்றாள் தமயந்தி.

வானதி எதிர்பார்த்தது போலவே ரஞ்சித் கொஞ்ச நேரத்தில் தெளிவாகி விட்டான்.

ஃபோனை எடுத்தான். ரகுநாத்திடம் பேசினான். ரகுநாத்தின் பதிலும் அதில் தெரிந்த அலட்சியமும் அவனை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

கோபத்தில் கொதித்துப் போனான்.

வானதிக்கு ஃபோன் செய்தான்.

'வானதி... உடனே கிளம்பி வா...! கொஞ்சம் வெளியே போகலாம்.' என்றான்.

வானதி இதை எதிர்பார்த்தவள் போல மாமனார், மாமியாரிடம் சொல்லி விட்டு ஒரு ஆட்டோ பிடித்துப் போனாள்.

ஒரு பூங்காவுக்குப் போனார்கள்.

'வானதி... பாத்தியா... ரகுநாத் என்ன சொல்றான் தெரியுமா? 'நீ ஏதோ கோபத்துல என்கிட்டே பேசறே! இவ்வளவு பணமெல்லாம் நான் வாங்கவே இல்லை. சரி... அப்படியே வாங்கினேன்னே வச்சுக்க. அதுக்கு என்ன அத்தாட்சி வச்சிருக்கே?' அப்படீங்கறான்' என்றான்.

வானதி இதை எதிர்பார்த்தாள் என்றாலும் தன் கணவன் அளவுக்கு அவளும் அதிர்ச்சியைக் காட்டினாள்.

'ஐயய்யோ..!' என்றாள்.

'ச்சே...! நான் இப்படி நினைக்கவே இல்லை. ஃபிரண்ட்ஷிப்புக்கு அர்த்தமே இல்லை.' என்றான் தன்னிரக்கம் நிறைந்த குரலில்.

'சேச்சே...! அப்படி நினைக்காதீங்க. ஃபிரண்ட்ஸ்க்காக உயிரையே குடுக்கறவங்க இருக்காங்க.' என்று தேற்றினாள்.

'வானதி... பணம் எனக்குப் பிரச்சினையில்லை. இரு. இரு...! நம்ம கடையில இருந்துதானே பணம் எடுத்துக் குடுத்தேன். அது என்னோட பணம் மட்டும் இல்லையே! அப்பா ஆரம்பிச்ச தொழில்! அவரு வளத்து விட்ட தொழில்..! அதுல இருந்து பணம் எடுத்துக் குடுக்க எனக்கு என்ன ரைட் இருக்கு?'

'கரெக்ட்தான்.' என்றாள் வானதி - ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக.

'அந்தப் பணத்தை எதுக்காக அவனுக்கு விட்டுக் குடுக்கணும்? நெவர்' என்றான் வேகமாக.

அப்போதுதான் வானதி அந்த வார்த்தைகளைச் சொன்னாள்.

'என்ன சொன்னே..?' என்றான் ரஞ்சித் அதிர்ச்சியும் ஆனந்தமும் கலந்த குரலில்.

'ஆமாங்க' என்றாள் வானதி அழுத்தமாக.

வானதி சொன்ன விஷயம் அவன் மனதுக்குள் சுகமாக இறங்கியது. கூடவே ஆச்சரியமும் தோன்றியது.

'அது சரி.... இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும்?' என்றான்.

வானதி புன்னகைத்தாள்.

'இல்லைங்க... அன்னைக்கு ஆஃபீஸுக்கு நான் வந்தப்ப நான் செய்த அரேன்ஜ்மென்ட்ஸை உங்க ஃபிரண்ட் மாத்தினாரில்லே. அப்ப நான் மூட்அவுட்டாய் நின்றுகிட்டிருந்தேன். அநேகமாக தன்ராஜ் சாருக்கும் ஏனோ ரகுநாத் சாரைப் பத்தின பயம் இருந்திருக்கும் போல. என்கிட்டே இந்தப் பண விஷயத்தைக் கோடி காட்டினாரு. நான் விடலே. மறுபடியும், மறுபடியும் ஃபோன் செஞ்சு விஷயத்தை வாங்கினேன். கிட்டத்தட்ட மிரட்டினேன்.' என்று சிரித்தாள்.

'ம்ஹூம்? என்னன்னு மிரட்டினே?'

'நான் அவரோட வைஃப். கம்பெனியோட நல்லது கெட்டதுல எனக்கும் பங்கிருக்கு.... கண்டிப்பாக இந்த விஷயம் எனக்குத் தெரிஞ்சாகணும்'னு...!

'ம்ஹூம்... தன்ராஜ் செஞ்சது சரியில்லையே.. ஆஃபீஸ் சீக்ரெட்ஸ் எல்லாம் சொல்லக் கூடாதே...!'

வானதியின் முகம் வாடியது

அவன் சிரித்தான். மெல்ல அவள் தலையைக் கலைத்து விட்டான்.

'சும்மா சொன்னேன். அவசியம்ங்கறதுனாலதான் சொல்லியிருக்காரு.' என்று சிரித்தான்.

'ஆமா...! அதையும் சொன்னாரு. 'மேடம்... நியாயப்படி நான் இந்த விஷயத்தை உங்ககிட்டே சொல்லக்கூடாது. ஆனா, நம்ம சார், ரகுநாத் சாரைப் பற்றி எதைச் சொன்னாலும் காது குடுத்துக் கேக்க மாட்டாரு. டைம் பாத்து நீங்கள்தான் சொல்ல முடியும். அதுக்காகத்தான் உங்ககிட்டே இதைச் சொல்றேன்' அப்படீன்னு சொல்லீட்டுத்தான் சொன்னாரு.' என்றாள்.

'ம்...!' என்று உள்வாங்கிக் கொண்டான்.

'ஆமாங்க. ஏதோ ஒரு சமயம் ரொம்ப அவசரமா பணம் வேணும்னுட்டு வந்தாராம் ரகுநாத். அந்த சமயம் 'சார்.... ஆடிட்டருக்கு அக்கவுண்ட் குடுக்கணும். சும்மா பேருக்கு ஒரு ரெண்டு சைன் போடுங்க.' அப்படீன்னுட்டு டாகுமென்டேஷன் பண்ணீட்டாராம்.' என்றாள் வானதி.

'குட் ரியலி குட்!' என்று சிலிர்த்துக் கொண்டான் ரஞ்சித்.

மெல்ல மனைவியிடம் திரும்பினான். அவளைக் கைகளால் வளைத்துக் கொண்டான்.

'ஹேய்...! நான் உன்னை சரியாப் புரிஞ்சுக்கலையோ...?' என்றான்.

'அப்படியெல்லாம் இல்லீங்க' என்றாள் அவளும் - மெல்ல இழைந்தபடி.

'நீங்க என்ன செய்வீங்க! உங்க ஃபிரண்டை நம்பினீங்க. ஆனா... அவரு நம்பிக்கைக்கு உகந்தவரா நடந்துக்கலே... அவ்வளவுதான்' என்றாள் ஆறுதலாக.

'ஹேய்...! போதும். கொஞ்ச நேரம் இந்த ரகுநாத்... அவன் இவன்கறதையெல்லாம் மறந்துட்டு கிளம்பு. நாம எங்காவது போயிட்டு வரலாம்.' என்றான்.

புறப்பட்டார்கள்.

'ரொம்ப தூரம் போக வேண்டாம்! பக்கத்துல இருக்கற பொட்டானிகல் கார்டனுக்குப் போகலாம்' என்றபடி அழைத்துப் போனான்.

அருகிலேயே இருந்த விவசாயக் கல்லூரியின் நிலத்தில் விளைந்திருந்த சூரியகாந்திப் பூக்களை வேடிக்கை பார்த்தார்கள்.

விதவிதமான அழகிய மலர்களைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

முதன்முறையாக புது மணமக்களுக்கேயுரிய விதத்தில் அவளிடம் பேசினான்.

அவளும் மகிழ்ந்து போனாள்.

இத்தனை நடந்த போதும் ரஞ்சித்தின் மனதுக்குள்ளே ஒரு விதமான கோபம் கனன்று கொண்டே தான் இருந்தது.

வானதியும் அதை உணர்ந்தவள் போல எல்லாவகையிலும் அவனை அதை மறக்கச் செய்ய வேண்டும் என்றே முயற்சித்தாள்.

அப்போது மட்டுமல்ல. அன்றைய தங்கள் தனிமையின் போதும் கணவனின் கவலையை மாற்றுவதற்கு அவள் மிகவும் முயற்சித்தாள்.

அவனும் புரிந்து கொண்டான்.

பல நாட்களுக்குப் பிறகு தந்தையிடம் அமர்ந்து பேசினான்.

'அப்பா, சாரிப்பா. பல தடவை நீங்க சொன்னப்ப நான் புரிஞ்சுக்கலே. கடைப்பணத்தை எடுத்து நான் வாரி வழங்கியிருக்கக் கூடாது. சாரிப்பா.' என்றான் மறுபடியும் மறுபடியும்.

அப்பா நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

'போனால் போகட்டும் விடு! தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சுன்னு விடு! பெரிய தொகைதான். ஆனா.. என்ன பண்றது...!' என்றார்.

ரஞ்சித்தின் முகம் இறுகியது.

'அப்பா. அப்படியெல்லாம் விட மாட்டேன். இதுல பணம் பிரச்சினையேயில்லை. நம்பிக்கை துரோகம். அதுதான் பிரச்சினை. விட மாட்டேன்' என்றான்.

இந்த நேரத்தில் மகன் எது சொன்னாலும் கேட்க மாட்டான் என்பதைப் புரிந்து கொண்ட தந்தை எதுவும் பேசவில்லை. உண்மை என்னவென்றால் ரஞ்சித்தின் கோபத்தின் ஆழத்தை அவருமே புரிந்து கொள்ளவில்லை.



9

'ரூபா... ரூ.... ப... ல...தா... என்ன யோசனை!' என்று இழுத்தான் ரகுநாத்.

ரூபலதா உண்மையிலேயே யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

திருமணமாகி இருபதே நாட்கள்தான்



ஆகியிருந்தன. ஆனால் ஏனோ ரூபாவின் மனதில் மிகப் பெரிய கலக்கம் தோன்றியிருந்தது. திருமணத்திற்கு முன்பு தான் பழகிய ரகுநாத்துக்கும் இப்போது தான் பார்க்கிற ரகுநாத்துக்கும் பெரிய வேறுபாடு இருக்கிறாற் போலத் தோன்றியது.

பொதுவாகவே அப்படி ஒரு வித்தியாசம் இருக்கும் என்பது அவள் எதிர்பார்த்ததுதான்.

திருமணத்துக்கு முன்பு தன்னுடைய நல்ல பக்கங்களை மட்டுமே வெளிப்படுத்திக் கொள்வார்கள் என்பதும், திருமணத்திற்குப் பின்புதான் பலவீனங்கள் வெளிப்படும் என்பதும் பற்றி அவள் பலபேர் சொல்லக் கேட்டிருக்கிறாள். சில புத்தகங்களில் படித்துமிருக்கிறாள். ஆனால் அவள் எதிர்பாராத விஷயம் என்னவென்றால் வித்தியாசம் இவ்வளவு பெரிதாக இருக்கும் என்பதுதான்.

திருமணமாகி தங்கள் வீட்டுக்கு வந்தபோது அந்த வீடு பிரம்மச்சாரியின் வீடு என்பதற்கான எல்லா இலட்சணங்களோடும் இருந்தது.

ரூபலதா சிரித்துக் கொண்டாள். புது மணமகளுக்கேயுரிய வேகத்துடனும், ஆர்வத்துடனும் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்தாள். அப்போதுதான் டேபிள் டிராயரில் இருந்த கிரெடிட் கார்டுகளைப் பார்த்தாள்.

ஒன்றல்ல, இரண்டல்ல, நான்கைந்து கார்டுகள் இருந்தன. 'இது எதுக்குங்க இவ்வளவு கார்ட்ஸ்?' என்றாள்.

'அதெல்லாம் தேவைக்குத்தான்' என்றான் அலட்சியமாக.

ரூபலதா திகைத்தாள். அவளுடைய தோழியின் சகோதரருக்கு நேர்ந்த அனுபவம் அவளுக்கு நினைவுக்கு வந்தது. அளவுக்கு அதிகமாக கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்தி வட்டிக்கு மேல் வட்டி கட்ட நேர்ந்ததையும் பெரிய அளவிலான நிதிச் சிக்கலில் மாட்டிக் கொண்டதையும் அவனுக்கு விவரமாகச் சொன்னாள்.

ரகுநாத் ஒரு குறுஞ்சிரிப்புடன் கேட்டுக் கொண்டதைக் கவனித்தாள். அதில் தெரிந்த அலட்சியம் அவளை உறுத்தியது. ஆனாலும் கடமையில் தவறாத நோக்கம் கொண்டவளாக நிறுத்தாமல் சொல்லி முடித்தாள்.

ரகுநாத் முழுவதையும் ஒரு பொறுமையற்ற முகபாவத்துடன் கேட்டுக் கொண்டு சிரித்தபடி அவள் தலையைத் தடவிக் கொடுத்தான்.

'இந்த சின்னத் தலைக்குள்ளே இருக்க வேண்டியதெல்லாம் நாம எப்படி என்ஜாய் பண்ணலாம்கற நினைப்பு மட்டும்தான். ஓ.கே.யா?' என்று பேச்சை மாற்றினான்.

ரூபலதா அப்போதைக்கு அதை ஏற்றுக் கொண்டவள் போலக் காட்டிக் கொண்டாலும் முழுமையாக சமாதானம் ஆகவில்லை.

கவலையாகவே இருந்தாள்.

தங்கள் பிறந்த வீட்டுக்குப் போனபோதுகூட தந்தையிடம் பேசினாள்.

'ஏம்மா...! லவ் மேரேஜ்தான். உன் இஷ்டத்துக்குப் பண்ணணும்னே. ஒரே மகள்ன்னு ஒத்துகிட்டோம். ஆனா... இப்ப ஒண்ணும் முகத்துல சந்தோஷத்தையே காணோம்.' என்றார்.

அவளுக்கு அவமானமாக இருந்தது. சொல்லவும் முடியவில்லை. மெல்லவும் முடியவில்லை. 'அப்பா! கனவுகள் வேற... வாழ்க்கை வேறன்னு இப்பத்தான் புரியுது.' என்றாள்.

'என்னம்மா இப்படிச் சொல்றே!' என்றார் அப்பா சிவப்பிரகாசம்.

'ஆமாப்பா...!' என்றாள். சற்றே கோடி காட்டினாள்.

'ரூபா...! அம்மாவுக்குத் தெரிஞ்சா மனசு விட்ருவா.' என்றார் வருத்தத்துடன்.

'ஆமாப்பா! அதனாலதான் சந்தோஷமா இருக்கறமாதிரி நடிச்சுகிட்டிருக்கேன்.' என்றாள்.

'ஏம்மா...! குடி, கிடின்னு ஏதாவது பழக்கம்...' என்று இழுத்தார் அப்பா. குரலிலேயே சொல்ல முடியாத வேதனை தெரிந்தது.

ரூபலதாவுக்கும் தொண்டை அடைத்தது. இடம், வலமாகத் தலையாட்டினாள்.

'நல்ல வேளையா அதெல்லாம் இல்லேப்பா. ஆனா.. நிறையக் கடன் இருக்கும் போலே இருக்கு...' என்றாள்.

'ஏம்மா...! நாம ஏதாவது ஹெல்ப் பண்ணலாமா?''

'பண்ணலாம்ப்பா! ஆனா... எத்தனை தரம் பண்ணுவீங்க? எனக்கென்னவோ இந்தப் பிரச்சினைகளை அவரே சந்திக்கணும்னு தோணுது.' என்றாள்.

'ம்!' என்று அப்பா உள்வாங்கிக் கொண்டார்

'ஆமாப்பா...! இதனால என்னென்ன பிரச்சினைகள் வரும்னு அவர் புரிஞ்சுக்கட்டும்.'

'என்னம்மா விட்டேத்தியாய் பேசறே!'

'வேற வழியில்லப்பா...!' என்றாள்.

இப்படிச் சொல்வதற்கு அவளுக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால் தனது நெருங்கிய நண்பன் என்று யாரைச் சொல்லிக்



கொண்டிருந்தாரோ அவரிடமே தன் கணவன் சொன்ன பதில் அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது.

'அவ்வளவு பணம் குடுத்ததுக்கு என்ன ஆதாரம் வச்சிருக்கே?' என்று அப்பன் கேட்ட கேள்வி, அவளைக் கவலைக்குள்ளாக்கியிருந்தது.

ஆதாரங்கள் என்பது ஒரு பக்கம் இருந்தாலும் அடிப்படை நாணயம் என்று முன்நிற்கிறதல்லவா? அதை அப்படியே ஒதுக்கி வைத்து விட்டு இப்படிப் பேசுவதற்கு என்ன காரணம்? மனசாட்சியற்ற தன்மைதான் இதற்குக் காரணமாக இருக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு கணவனுக்கு மனைவியாகத் தான் என்னென்ன பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்குமோ என்ற கவலையும் அவளுக்குள் தோன்றி அவளை அரித்துக் கொண்டிருந்தது.

முதன்முதலாக அவனை அழைத்துக் கொண்டு தந்தையை சந்திக்க வந்த பொழுது தந்தை சொன்னது இப்போது நினைவுக்கு வந்தது.

'அம்மா... எத்தனை நாளா பழக்கம்?'

'அப்பா... கிட்டத்தட்ட ஒரு வருஷம்...' என்றாள்.

'நல்லா அனலைஸ் பண்ணிக்கம்மா...' என்றார்.

'ஏம்ப்பா...?' என்றாள்.

'இல்லே...! என் கற்பனையோ என்னவோ தெரியலே. அந்தப் பையன்கிட்டே ஏதோ தப்பு இருக்கும்மா...! கண்ணை நேராப் பாத்துப் பேச மாட்டேங்கறான்' என்றார்.

அவள் புன்னகைத்தாள். 'அப்பா...! ரொம்ப ஓவரா அனலைஸ் பண்ணாதீங்க! உங்ககிட்டே பேசறதுக்கு பயமா இருக்குன்னு சொல்லிட்டேதான் வந்தாரு...' என்றாள்.

'அப்படியும் இருக்கலாமோ...' என்று அவரே தேறிக் கொள்கிற அளவுக்கு அவளும் பேசிக் கரைத்து விட்டாள். அன்றைக்கு அது மிகப்பெரிய சாமர்த்தியமாக அவளுக்குத் தோன்றியது. ஆனால் இன்றைக்குப் பின்னோக்கிப் பார்க்கும்போது மிகப் பெரிய பைத்தியக்காரத் தனமாகத் தோன்றியது.

'தேவ்...! என்ன யோசனை!' என்று கணவன் மறுபடியும் அவள் கன்னத்தைத் தட்டிய போதுதான் அவள் பூவுலகுக்கு வந்தாள்.

'என்னங்க... என்ன...?' என்றாள்.

'இல்லே...! எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறே...? இப்படி யோசனை!' என்றான் [illegible]

'ம்...! அப்படியெல்லாம் ஒண்ணும். இல்லே!' என்று சமாளித்தாள்.

'சரி... இப்பக் கொஞ்சம் வெளியே போலாமா...?' என்றான்.

'எதுக்கு...?' என்றாள்.

'சும்மா.... ஷாப்பிங் போலாம்னுதான்' என்றான்.

அவளுக்கு பகீரென்றது. இருக்கிற கிரெடிட் கார்டுகளில் எதையாவது ஒன்றை அள்ளிக் கொண்டு வருவான். தாராளமாகச் செலவு செய்வான். ஆனால் அத்தனை தலைவலியும் பின்னாலே அவர்கள் ஒன்றாக அல்லவா சுமக்க வேண்டும்.

மெல்ல முகபாவத்தை மாற்றிக் கொண்டாள். 'இங்க பாருங்க... இன்னைக்கு என்னமோ, எனக்குத் தலைவலியா இருக்கு. நீங்க போயிட்டு வாங்க.... ஆனா... நான் இல்லாம எதுவும் வாங்காதீங்க... என்ன!' என்றாள். ஆனால் வார்த்தைகள் கடுமையாக இருக்கக் கூடாது என்பதற்காக குரலில் குழைவையும், கொஞ்சலையும் கலந்து கொண்டாள்.

ரகுநாத்தின் முகத்தில் லேசாகக் கோபம் தோன்றி மறைந்தாற்போல் இருந்தது. ரூபலதாவுக்கு அது தெரிந்தபோதும் அவள் அதைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை.

ரகுநாத் தன் கோபத்தை மறைத்து சகஜமாக சிரித்தபடி, 'என்னை என்ன செலவாளின்னே முடிவு பண்ணிட்டியா? என்றான்.

'இல்லியா பின்னே' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள். ஆனால் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. அதேபோல அவனும் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு செல்லமாக அவள் கன்னத்தைத் தட்டினான். அதற்குள் அவள் அவனை சமாதானப்படுத்தும் விதமாக 'அப்படி இல்லைங்க, இன்னைக்கு காஸ்ட் ஆப் லிவிங் ரொம்ப அதிகமா இருக்கு. நாம இப்ப இருந்தே சேமிச்சாத்தான் நல்லது' என்றாள்.

'அப்படிப்போடு' என்று கலகலவென்று சிரித்த ரகுநாத் 'சரி நான் வெளியே போயிட்டு வரேன்.' என்று சொல்லிவிட்டு எதையோ எடுக்க உள்ளே சமயலறைக்குப் போனான். வாசலில் அழைப்பு மணி ஒலித்தது. அவள் முன் அறைக்கு வந்தாள்.

யாரோ ஒரு இளைஞன் கையில் ஏதோ இரசீது புத்தகங்களை வைத்துக் கொண்டு நின்றான்.

'யார் நீங்க?' என்றாள் ரூபலதா. 'நாங்க அந்த கிரெடிட் கார்டு கம்பெனியிலிருந்து வர்றோம்.' என்று ஏதோ ஒரு கிரெடிட் கார்டு கம்பெனிப் பெயரைச் சொன்னான்.



ரகுநாத் 'என்ன அது' என்று கேட்டுக் கொண்டே முன் அறைக்கு வந்தவன் அந்த இளைஞன் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டதும் திகைத்து நின்றான்.

அந்த இளைஞன் 'சார்... நீங்க மூணு மாசமா பணம் கட்டலை' என்றான்.

'நாளைக்கு ஆஃபீஸ் வந்து கட்றேம்ப்பா' என்றான் ரகுநாத்.

'சார்! ரெண்டு மாசமா இப்படித்தான் சொல்றீங்களாம். அதனால இன்னைக்கு நா இருந்து வாங்கிட்டுதான் போகணும் சார். இல்லேன்னா எங்க கம்பெனி மேனேஜர் என்னைத் திட்டுவார்.' என்றான் அந்த இளைஞன். ரூபலதாவின் முகம் சிவந்து போனது.

ரகுநாத் அவளை நோக்கித் திரும்பி, 'ரூபா நீ உள்ள போ. நா பேசிட்டு வர்றேன்...' என்றான்.

'இல்லீங்க. நானும் நிக்கிறேன்' என்றாள் அழிச்சாட்டியமாக. ரகுநாத்துக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை.

'நாளைக்குக் காலையில பேங்க்லேயிருந்து எடுத்துத்தான்பா தரணும்' என்றான் ரகுநாத்.

அந்த இளைஞன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல் நின்றான்.

ஒரு கணம் செய்வது அறியாதவன் போல் திகைத்த ரகுநாத், 'செக் போட்டு தரட்டுமா?' என்றான்.

'வேண்டாம் சார்! செக் வாங்க வேண்டாம்னு எங்க மேனேஜர் சொல்லி அனுப்பினார். ஏன்னா போன தடவை நீங்க கொடுத்த செக்கே பணமில்லாம ரிட்டன் ஆயிடுச்சு. நியாயப்படி நாங்க அதுக்கே ஆக்ஷன் எடுக்கணும். நீங்க ரஞ்சித் சாரோட ஃப்ரெண்டுங்கறதுனால எங்க மேனேஜர் உங்களுக்கு இப்படி ஒரு வாய்ப்பு குடுத்துருக்காங்க' என்றான்.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த - சொல்லப்போனால் வேதனையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ரூபலதா தன் கணவனின் முகம் பார்க்காமல் அந்த இளைஞனிடம் எவ்ளோ கட்டணும்?' என்றாள்.

'ரூபா நீ...' என்று ரகுநாத் ஏதோ சொல்ல, அவள் வலக்கையை உயர்த்தினாள்.

'பேசாதீங்க' என்பது போல அழுத்தமாக அந்தக் கை உயர்வதைப் பார்த்த ரகுநாத் ஸ்தம்பித்து நின்றான்.

'மேடம்... மினிமம் டியூவே ஃபைவ் தௌசண்ட் கட்டணும்' என்றான்.

அவள் மனமளவென்று உள்ளே போய் தன் பெட்டியிலிருந்து பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள். கொடுத்துவிட்டு உள்ளே போய் விட்டாள். அந்த இளைஞன் இரசீது போட்டுக் கொடுக்கவும் அதை வாங்கிக் கொண்டு உள்ளே வந்த ரகுநாத்தின் முகம் வற்றிப் போய் இருந்தது.

'ரூபா...' என்று அவன் கெஞ்சலாக ஏதோ சொல்ல ஆரம்பிக்க, அவள் திரும்பி அவனைப் பார்த்தாள்.

முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல் 'எங்கேயோ ஷாப்பிங் போகணும்னு சொன்னிங்களே, போயிட்டு வாங்க' என்றாள் அமர்த்தலாக.

அவன் ஒரு நிமிடம் நின்று பார்த்தான். அவள் எதுவும் பேசாததால் கிளம்பிப் போனான். அவன் போவதை அவள் வெறுமையாகப் பார்த்துக் கொண்டு நின்றாள். பின் செல்ஃபோனை எடுத்து யாருக்கோ ஃபோன் செய்தாள்.



**10**

'**எ**ன்னங்க...' என்று ஆச்சர்யத்தை முகத்தில் தேக்கிக் கொண்டு வந்தாள் வானதி.

'என்ன' என்பது போல் பார்த்தான் ரஞ்சித்.

'ரூபலதாங்க... பேசினது ரூபலதா!' என்றாள்.

'அதுக்கென்ன?' என்றான் ரஞ்சித் எரிச்சலாக. மேலும் தொடர்ந்து 'இப்ப என்ன... வைஃபை விட்டுப்பேசி சமாதானம் பண்ணப் பாக்கறானுக்கும்?' என்றான்.

'இல்லிங்க. அந்தப் பொண்ணு நிஜமாவே அவருக்குத் தெரியாமதான் பேசுது போல இருக்கு' என்றாள்.

'என்னவாம்?' என்றான்.

'நமக்குக் கொடுக்க வேண்டிய தொகையை அந்தப் பொண்ணு கொடுக்குதாம். ஆனா நாம அதை உங்க ஃப்ரெண்டுகிட்ட சொல்ல வேண்டாமாம்.''

'என்ன செய்யலாம்?' என்று அவளிடமே ஆலோசனை கேட்டான்.

சற்று நேரம் யோசித்தாள்.

'வாங்கிக்கலாங்க. நாம குடுத்த பணம்தானே! நமக்கும் இப்பத் தேவை இருக்கு!' என்றாள் வானதி.

'ம்...' என்று உள்வாங்கி கொண்டான் ரஞ்சித்.



'ஏங்க... நீங்க சரின்னு சொன்னா இன்னும் ஒருமணி நேரத்துல அவங்க அப்பாவோட வராங்களாம்' என்றாள் வானதி.

'சரி... வரச் சொல்லு' என்றான்.

வானதி அப்படியே சொன்னாள்.

அவர்களும் வந்தார்கள்.

ரூபலதாவின் தந்தை செல்லமுத்துவின் முகத்தில் அளவில்லாத வருத்தம் தெரிந்தது.

'தம்பி, சொல்றேன்னு தப்பா நினைக்காதிங்க. உங்க ஃபாமிலிக்கெல்லாம் ரொம்ப ஃபிரண்டு ரூபா மாப்பிள்ளைன்னு ரூபா சொன்னப்ப நா ரொம்ப சந்தோஷப் பட்டேன். ஆனா உங்ககிட்டேயே அவரு சரியா நடந்துக்கலேனு ரூபா சொன்னப்ப ரொம்ப வருத்தப்பட்டேன். என்னமோ லவ் மேரேஜ்னு பண்ணிகிட்டா. இப்போ கண்ணைக் கசக்கிட்டு வந்து நிக்கறா. இருந்தாலும் உங்களை ஏமாத்த எனக்கு மனசு வர்லே. அதனால்தான் நானே பணத்தைக் கொடுக்கலாம்னு வந்தேன்' என்றார்.

சதுர்முகனும் எதிரில் அமர்ந்திருந்தார். ஆனால் எதுவும் பேசவில்லை.

ரஞ்சித், 'பணத்தை வாங்கிக் கொள்ளலாமா' என்று கண்ணாலேயே கேள்வி கேட்க அப்பாவும் கண்ணாலேயே சம்மதம் அளித்தார்.

ரஞ்சித் பணத்தை வாங்கிக் கொண்டு இரசீது போட்டுக் கொடுத்தான்.

ரூபலதாவும் அவள் அப்பாவும் கிளம்பிப் போன பிறகு சதுர்முகனும் மனைவியை அழைத்துக் கொண்டு வெளியே கிளம்பினார்.

வானதி சமையலில் மும்முரமாக இருந்தாள். ரஞ்சித் அவள் பின்னால் போய் நின்று அவளை சீண்டிக் கொண்டிருந்தான்.

அவள் திரும்பி முறைத்தாள். 'பேசாம இருங்க. வேலை செய்ய விடுங்க' என்றாள்.

'ஹேய், நா இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன். வரவே வராதுன்னு நினைச்ச பணம் வந்திருக்கு. ஏன் தெரியுமா? அது நாம உழைச்சு சம்பாதித்த பணம்' என்றான்.

'ஆமாங்க' என்று அவளும் மகிழ்ச்சியாகச் சிரித்தபடி அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். சற்று நேரம் மௌனம் நிலவியது. அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

ரஞ்சித் தீவிரமான முகபாவத்தில் இருந்தான். அவள் தன்னை உற்றுப் பார்ப்பதை கவனிக்காதவன் போலவும் தனக்குத் தானே பேசிக்கொள்பவன் போலவும் சொன்னான்.

'பணம் வந்ததும் சந்தோஷம் தான். ஆனால் இன்னொரு பக்கம் பெரிய இழப்பு ஏற்பட்டுருச்சு. யாரை உண்மையான நண்பன் அப்படின்னு நினைச்சேனோ அவனே என்னை ஏமாத்திட்டான். நட்புங்கற விஷயத்து மேலேயே எனக்கு இருந்த நம்பிக்கை போயிடுச்சு' என்றான்.

அவள் உடனே அவன் சோகத்தைப் போக்குவதற்கான முயற்சிகளில் இறங்கினாள்.

அவனைக் கலகலவென சிரிக்கச் செய்தாள் என்றாலும் அவளுக்கும் அந்த நட்பு இப்படியாகிப் போனதில் அளவுகடந்த வருத்தம்தான்.

மெல்ல அவன் தலையைக் கலைத்து விட்டுச் சொன்னாள்.

'இதப் பாருங்க... நம்மை மீறின சக்தி ஒண்ணு இருக்கு. அது நமக்கு வாழ்க்கையில சில பாடங்களைக் கத்துக் குடுக்குது. ஆனா எல்லாமே ஒரு நன்மைக்குத்தான். நீங்க வெச்ச அன்பும் நட்பும் உண்மையானது. கண்டிப்பா அது தோத்துப் போகாது' என்றாள்.

அவன் பார்வை வாஞ்சையுடன் அவள் முகத்தை வருடியது. இப்போது வந்த இந்தப் பெண் தன்னைத் தேற்றுவதற்கு எவ்வளவு முயற்சி எடுக்கிறாள் என்ற எண்ணம் அவன் மனதுக்குள் ஓடியது. 'இப்படிப்பட்ட பெண்ணைக் காத்திருக்க வைத்துவிட்டு முதல் இரவு அன்று கூட அந்தப் போலி நண்பனுக்காக ஓடினோமே' என்று வருத்தப்பட்டான். அதே நேரம் வானதி 'கண்டிப்பா உண்மை ஜெயிக்குங்க' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவனுக்கு நம்பிக்கை தோன்றவில்லை. ஆனால் அவளுக்குள் ஆழமான நம்பிக்கை இருந்தது.

அவர்கள் இருவரின் வெவ்வேறு மனநிலையையும் பொருட்படுத்தாமல் சத்தியம் தன் பங்கிற்கான விளையாட்டை ஆரம்பித்திருந்தது.

ரகுநாத் இதை எதிர்பார்க்கவில்லை.

தனக்குத் திருமணமான ஒரு மாதத்திற்குள்ளாகவே தனது பலவீனங்கள் ஒவ்வொன்றாக வெளிக்கிளம்புவதைப் பார்த்து அவன் கொஞ்சம் அரண்டுதான் போனான்.

எப்போது பிரச்னைகள் ஆரம்பிக்கும் போதும் அவன் ரஞ்சித்திடம் தான் போய் நிற்பான். ஆனால் இப்போது அவனையும் பகைத்துக் கொண்டாகி விட்டது.



அதையெல்லாம்விட அதிர்ச்சிகரமான விஷயம் என்னவென்றால் தன் மனைவியின் முன்பாகவே தனது இன்னொரு முகம் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதுதான்.

யோசித்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான்.

வீட்டில் கண்ட காட்சியால் ஒரு நிமிடம் தயங்கி நின்றான்.

வீட்டின் ஹாலில் இருந்த ஷோபாவில் ரூபலதாவின் தந்தை அமர்ந்து கொண்டிருந்தார்.

ரகுநாத் இதை எதிர்பார்க்கவில்லை. 'இவர் எதற்காக வந்திருக்கிறார். ஒருவேளை ரூபலதா வரச்சொல்லயிருப்பாளோ?' என்று தோன்றியது.

பேப்பரைக் கையில் பிடித்துக் கொண்டு படித்துக் கொண்டிருந்த செல்லமுத்து பேப்பரை விலக்கி கொண்டு இவனைப் பார்த்தார். ஆனால் புன்னகைக்கவில்லை.

ரகுநாத் உடனே சுதாரித்துக் கொண்டு,

''மாமா.... வாங்க வாங்க!'' என்று வரவேற்றான்.

செல்லமுத்து பதிலுக்கு புன்னகைக்கவில்லை. தலையை மட்டும் ஆட்டினார்.

'ஏதோ விஷயம் இருக்கிறது' என்று அவனுக்குப் புரிந்தது. உள்ளூர கிலிபிடித்துக் கொண்டது. அதை மறைக்க முயல்பவன் போல் -

'ஏய் ரூபலதா... அப்பாவுக்கு காஃபி கொடுக்கலையா' என்று கத்தியபடி சமையலறை நோக்கிப் போனான்.

அப்படியே நின்றான்.

ரூபலதா ஒரு தட்டில் இரண்டு கப்புகளில் காஃபி எடுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தாள்.

'அதானே பார்த்தேன். குட்' என்று குழறியபடி அவன் திரும்பவும் ஹாலுக்கு வந்தான்.

செல்லமுத்து அமர்ந்திருந்த சோபாவுக்கு நேர் எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்து கொண்டான்.

ரூபலதா, மௌனமாக காஃபித் தட்டை நீட்ட, இருவரும் வாங்கிக் கொண்டார்கள்.

செல்லமுத்து ஒருவாய் பருகிவிட்டு காஃபி கப்பை டீபாய் மேல் வைத்தார்.

ஆடம்பரமாய் இருந்த சோபாக்களை ஒரு பார்வை பார்த்தார். வரவு எட்டணா... செலவு பத்தணா... கடைசியில் துந்தணா என்ற வரிகள் தான்

அவருக்கு நினைவுக்கு வந்தன போலும்.

தன் வலது கையால் சோபாவின் பட்டுப் போன்ற கைப்பிடியை நீவிக் கொடுத்தார்.

'ஏன் மாப்பிளே, இந்த சோபாவெல்லாம் வாடகைக்கு எடுத்ததா இல்லை உங்களுக்கு சொந்தம் தானா' என்று கேட்டார்.

ரகுநாத் திகைத்துப் போனான். 'மாமா... நீங்க...' என்று அவன் இழுக்க, அவர் வெடித்தார்.

'பின்னே என்னங்க மாப்பிளே? ஏதோ இரண்டு பேரும் ஆசைப்பட்டீங்களே அப்படின்னுதான் கல்யாணம் பண்ணி வெச்சேன். ஆனா என்பொண்ணு பெரிய தப்பு செஞ்சுட்டாளோ அப்படின்னு இப்பத் தோணுது.'

'ஏன் அப்படி...!' என்று அவன் பதறினான்.

'வாழ வந்த வீட்லே வரிசையா கடன்காரங்களுக்கு பதில் சொல்லிட்டு நிக்கவா நான் பொண்ணைப் பெத்து உங்களுக்குச் கொடுத்துருக்கேன்?'

ரகுநாத் வாயைத் திறக்கவேயில்லை.

'இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை. நான் என் பொண்ணைக் கூட்டிட்டுப் போறேன். நீங்க.... மாப்பிளே...! நல்லாப் புரிஞ்சுக்கோங்க. தப்போ ரைட்டோ ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிகிட்டீங்க. ஒருத்தருகிட்ட இருக்கிற தப்பை இன்னொருத்தர் திருத்தி சேர்ந்து வாழத்தான் வேணும். நீங்க உங்க தப்புகளைத் திருத்திக்கிட்டு அப்புறம் வாங்க. சேர்ந்து வாழறதைப்பத்தி யோசிக்கலாம்.' என்றார்.

ரகுநாத் திகைத்துப் போய் திரும்பி மனைவியைப் பார்த்தான். அவள் இறுக்கமாக முகத்தை வைத்துக் கொண்டு நின்றாள். அவளுக்கும் இந்த முடிவு சம்மதம் என்பது புரிந்தது.

மறுபடியும் மாமனார் தொடர்ந்தார். 'மாப்பிள்ளே... நல்லா கவனியுங்க. நான் உங்களை பர்மனென்ட்டா பிரிய சொல்லலை. இப்பவும் ஒரு வாய்ப்புக் குடுத்திருக்கா. இது நான் மட்டும் பண்ணின யோசனையில்லை. என் பொண்ணும் சேர்ந்துதான் இந்த முடிவை எடுத்திருக்கா' என்றார்.

ரகுநாத் தளர்ந்துபோய் அமர்ந்தான். அவன் பார்க்கப் பார்க்க 'போய் வருகிறேன்.' என்று சொல்கிற மாதிரியான ஒரு தலையசைப்புகூட இல்லாமல் தன் மனைவி தன்னைத் தாண்டிச் செல்கிற நிகழ்வை வேதனையோடு பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

தந்தையும் மகளும் வெளியேறிய பின்னர் வீட்டைச் சுற்றி ஒரு



கண்ணோட்டம் விட்டான்.

வீடு வெறுமையாக இருந்தது.

சென்ற வாரம் நடந்த நிகழ்வு நினைவுக்கு வந்தது.

ரூபலதா சமையலில் மும்முரமாக இருந்தாள்.

மோர்க் குழம்பு கொதித்துக் கொண்டு இருந்தது. ஒரு கரண்டியால் கொஞ்சமே கொஞ்சம் குழம்பை எடுத்து வலது உள்ளங்கையில் ஊற்றி ருசி பார்த்துக் கொண்டிருந்தாள்.

பட்டென்று ஏதோ வெடித்தாற் போல சத்தம் கேட்டது.

பயந்து போய்த் திரும்பினாள்.

ரகுநாத்தின் மேல் மோதிக் கொண்டாள். மெல்ல இடக்கையால் அணைத்தபடி அவன் கடகடவென சிரித்தான்.

சற்று நேரம் சீண்டி விளையாடினான்.

மெள்ள நிமிர்ந்து பார்த்து 'என்னத்தை வெடிச்சீங்க?' என்று கேட்டாள்.

அவன் உள்ளங்கையை விரித்துக் காட்டினான். மளிகை சாமான் வாங்கி வந்த ஏதோ பழைய பிளாஸ்டிக் கவருக்குள் காற்றை ஊதி வெடித்திருக்கிறான்.

இருவரும் இடிஇடி என்று சிரித்தார்கள்.

தன்னுடன் வாழ்ந்த இந்த ஒரு மாத காலத்திற்குள் வீட்டை அவள் சொர்க்கமாக்கியிருந்தாள்.

'பதிலுக்கு அவளுக்கு நாம் என்ன செய்தோம்? நரகத்தைத்தான் காட்டினோம்.'

தனது இமாலயத் தவறுகளின் ஆழம் அவனுக்குப் புரியவில்லை என்றாலும் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டிய அவசியத்தின் நுனி புரிந்தது.

இரவு தூக்கமும் வரவில்லை.

புரண்டு புரண்டு படுத்தான். வெகு நேரத்துக்குப் பிறகு தான் கண்ணயர்ந்தான்.

விஸ்வரூபம் எடுத்தபடி ரஞ்சித் அவன் முகத்தருகில் வந்து வந்து போனான்.

'ஹா... ஹா... ஹா' என்று சிரித்தான்.

'எவ்வளவு தூரம் உன்னை நம்பினேன். எவ்வளவு சீக்கிரம் என்னைத் தூக்கி எறிந்தாய்? இப்பவெல்லாம் தெய்வம் நின்று கொல்றதில்ல...

அப்பப்பவே சொல்லுது. தெரிஞ்சுக்க. அதான் ஒரே மாசத்துக்குள்ள உன் வைஃப் உன்னைத் தூக்கி எறிஞ்சுட்டா.'

'ஹா... ஹா... ஹா...' என்று சிரித்தபடி புகையாய் மறைந்து கலைந்தான்.

வேர்த்துப் போய் எழுந்து அமர்ந்தான்.

கொஞ்சம் தண்ணீரைக் குடித்து விட்டு மறுபடியும் படுத்தான். சற்று நேரத்தில் அதே போல ரூபலதா வந்து மிரட்டி விட்டுப் போனாள்.

சுத்தமாகத் தூக்கம் கலைந்து போனது. விழித்து எழுந்து அமர்ந்தான்.

தனிமையின் துயரமும் அவனை அழுத்தியது. அந்த நேரம் நண்பன் ரஞ்சித்தின் தோளில் சாய்ந்து அழ வேண்டும் போல் இருந்தது. கண்களில் கண்ணீர் பெருகியது.

குலுங்கிக் குலுங்கி அழுதான்.



## 11

புரண்டு புரண்டு படுத்தான் ரஞ்சித்.

ஏதோ ஒரு உணர்வு அவனைத் தூங்கவிடாமல் செய்தது. தலையைப் புறங்கையால் தேய்த்து விட்டுக் கொண்டான். அவன் ஒருவிதமான பரபரப்பான நிலையில் இருப்பதைக் கண்ட மாலதி எழுந்து அமர்ந்தாள்.

'என்னங்க ஆச்சு?' என்று கேட்டாள்.

'தெரியலைம்மா. ஏனோ எனக்கு மனசு சரியில்லை. யாரோ நெருங்கின ஒருத்தருக்கு - ஏதோ சரியில்லை அப்படின்னு மட்டும் தெரியுது' என்றான்.

'அப்படியெல்லாம் இருக்காதுங்க. அப்படியே மனசுக்குத் தோன்றினாலும் யாருக்கும் ஒண்ணும் இருக்கக்கூடாது அப்படின்னு ப்ரே பண்ணிக்குங்க' என்றவள் எழுந்து பூஜை அறைக்குப் போய் விபூதி டப்பாவை எடுத்துக் கொண்டு வந்து அவன் நெற்றியில் பூசி விட்டாள். 'படுத்துக்குங்க' என்றாள். அவன் மனமில்லாதவனாக படுத்துக் கொண்டான். ஆனால் உறக்கம் வரவில்லை.

அதே போல இன்னொரு இடத்தில் இன்னொரு பெண்ணுக்கும் உறக்கம் வரவில்லை.



ரூபலதா!

தனது அறையில் விளக்கைப் போட்டாள். ஏதோ ஒரு கவிதைப் புத்தகத்தைக் கையில் எடுத்தாள்.

**காதலை விடவும்**
**ஊடல் எனக்குப் பிடிக்கிறது.**
**காதலில் கூட**
**காமம் கொஞ்சம்**
**கலந்தே இருக்கிறது**
**ஊடலின் உள்ளேயோ**
**உரிமையின் ஆதிக்கம்**
**இழைந்து ஜொலிக்கிறது!**
**என்ற கவிதை அவள் கண்களில் பட்டது.**
**கண்களில் கண்ணீர் பொங்கியது.**

அது ஒரு கனாக்காலம் - அது ஒரு பொற்காலம் என்றெல்லாம் சொல்வார்களே! அது போல மிகக் குறுகிய காலத்தில் ஏற்பட்ட பழக்கம் தான் எவ்வளவு இனிமையாக இருந்தது!

'குறுகிய காலத்தில் பழக்கம் ஏற்படலாம். ஆனால் குறுகிய காலத்தில் முடிவை எடுத்திருக்கக் கூடாதோ என்று இப்போது தோன்றியது. கண்களின் வழியாகப் பாய்ந்த காதல் உண்மையான உள்ளப் பாங்கை குறித்துக் காட்டவில்லையே.

கனவுகள் நன்றாக இருந்த அளவுக்கு கடன்காரர்களுக்கு பதில் சொல்வது சுலபமாக இருக்கவில்லையே' என்று என்னென்னமோ எண்ணங்கள் ஓடியது. அன்று ஒருநாள் நடந்த நிகழ்வு இப்பொழுது நினைவுக்கு வந்தது.

இருவரும் பூங்காவில் அமர்ந்திருந்தார்கள். வ.உ.சி. பூங்காவில் இருந்த அந்த சிறிய விலங்குக் கண்காட்சியகத்தைப் பார்வையிட்டுவிட்டு ஒரு ஓரமாக அமர்ந்திருந்தார்கள்.

சுண்டல் வாங்கிக் கொடுத்தான் ரகுநாத். அந்த முக்கோண வடிவக் காகித பொட்டலம் நிறைய பட்டாணி சுண்டலும் அதன் உச்சியிலே மாங்காய் துண்டுகளும் தூவப்பட்டு சாப்பிட வேண்டும் என்ற ஆசையை இருவருக்கும் தூண்டியது. இருவரும் சுண்டலைக் கொறித்துக் கொண்டிருந்த போதுதான் அது நிகழ்ந்தது. அவர்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு சற்றுத் தள்ளி ஒரு வயதான பாட்டி அமர்ந்து கொண்டு இவர்கள் கையில் இருந்த சுண்டல் பொட்டலங்களை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவள் உடனே ரகுநாத்திடம் 'அந்தப் பாட்டி பாவம் இல்லைங்க'! என்றாள்.

ரகுநாத் அடுத்த வினாடியே எழுந்து சுண்டல்காரரிடம் இரண்டு பொட்டலங்களை வாங்கிக் கொண்டு போய் அந்தப் பாட்டியிடம் கொடுத்தான். பாட்டி ஆசையுடன் வாங்கிக் கொண்டார்.

'பரவாயில்லையே' என்று அவள் கிண்டல் செய்தாள்.

'பின்னே, நம்ம ஸ்வீட் ஹார்ட்டுக்கு மனசுல குறையிருக்கலாமா?' என்று கண்சிமிட்டிச் சிரித்தான்.

இன்று எவ்வளவு பெரிய குறையை வைத்து விட்டான் என்று எண்ணியதும் அழுகையை அடக்க முடியவில்லை.

தேம்பித் தேம்பி அழுதாள்.

'என்னம்மா?' என்று தந்தை அடுத்த அறையில் இருந்து எழுந்து வரவும் அவசர அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அப்பா அவள் அமர்ந்திருந்த சோபாவில் அவள் அருகில் வந்து அமர்ந்தார்.

'என்னம்மா, நான் அவ்வளவு தூரம் சொல்லியும் நீ இப்படி அழறே? மொதல்லயே திருத்தணும்மா. மொதல்ல விட்டுட்டா அப்புறம் ஒண்ணுமே செய்ய முடியாது.

தும்பை விட்டுட்டு வாலைப் பிடிச்ச கதையா ஆயிடும். நீ இப்படி அழுதேன்னா உங்க அம்மா ஒரு பக்கம் என்னை அரிச்செடுக்க ஆரம்பிச்சுடுவா. இன்னும் நான் அவளுக்கு முழு விவரம் சொல்லலே' என்றார்.

'சரிப்பா' என்றாள்.

எழுந்து விளக்கை அணைத்து விட்டுப் படுத்தாள்.

அப்பா ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு நகர்ந்தார். கண்களில் கண்ணீர் பெருகியது. கன்னங்களில் கண்ணீர் கோடாக ஓடியிருக்க - எப்போது உறங்கினோம் என்றே தெரியாத அளவில் உறங்கிப் போனாள்.

ரூபலதா ஒரு வழியாக அமைதியடைந்தாலும் இன்னொரு புறத்தில் ரஞ்சித் அமைதியடையவில்லை.

மனைவி வானதியை நோக்கி ஒருக்களித்துப் படுத்தான். 'ஏன் வானதி... நம்மை ஒருத்தர் ஏமாற்றினா... நாமளும் அவங்களை ஏமாத்தணுமா? அப்படிச் செய்தா நம்ம அன்பிலே ஏதோ ஒரு குறையிருக்குன்னு தானே அர்த்தம்?' என்றான்.



அந்தக் கணத்தில் ஏதோ ஒன்றுக்கு ஏங்கிப் போய் தாயின் முகம் பார்க்கிற குழந்தையைப் போல கள்ளமில்லாமல் காட்சியளித்தது ரஞ்சித்தின் முகம்.

இவர்தான் எவ்வளவு நல்லவர் என்று எண்ணிய அந்த வினாடியில் வானதியின் அடிவயிற்றிலிருந்து தாய்மை உணர்வும், நெஞ்சின் ஆழத்திலிருந்து அன்பும் அவளுக்குள்ளே பெருக்கெடுத்து ஓடியது.

தன் வலது கையை நீட்டி மெல்ல அவனது முன்னெற்றி முடியைக் கோதி விட்டாள்.

ரஞ்சித் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னாள் வானதி.

'நிச்சயமா நாமளும் ஏமாத்தணுங்கறது இல்லை. ஆனா புரிஞ்சுக்காதவங்ககிட்ட மேலே போய் விழுந்தா நம்மோட அன்புக்கு மதிப்பில்லேங்கறது மட்டும் எனக்குத் தெரியும்' என்றாள்.

'எனக்கும் தெரியும். ஆனா மனசு கேக்கலே' என்றான்.

அந்த நேரத்தில் வானதியால் அவனுக்கு செய்ய முடிந்ததெல்லாம் ஏதோ ஒரு விதத்தில் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அள்ளித் தருவதுதான்.

தந்தாள்!

ரஞ்சித் திணறிப்போகும் அளவிற்கு அன்பையெல்லாம் வாரி வழங்கினாள். அதற்குப் பிறகும் சற்று நேரம் பேசி அவன் மனதிற்குள் ஆறுதலை விதைத்தாள்.

கணவனின் ஆழ்ந்த உறக்கத்தைக் கண்ணுற்ற பின்தான் அவளும் உறங்கினாள்.

இரவு மூன்று மணியிருக்கும்.

திடீரென்று விழித்தாள். புரண்டு படுத்தாள். அருகில் கணவனைக் காணவில்லை. எழுந்து அமர்ந்தாள். கண்களைச் சுழல விட்டாள்.

ஜன்னல் ஓரமாக அவன் இரு கைகளையும் கட்டியவாறு ஜன்னலுக்கு வெளியே பார்வையைச் செலுத்தியிருந்தான். அந்தப் பார்வையில் தெரிந்த ஆழமான வேதனை அவளையும் உறக்கத்தில் இருந்து எழுப்பியது.

**விடியல் தரும்**
**குளிர்ச்சியை மாலை தரும்**
**தென்றலை இரவு தரும்**
**கனவுகளை வெளிச்சம் தரும்**
**இலக்குகளை உணர்த்திக் கொண்டு**
**இருக்கும் உயிர் - நண்பன் உயிர்**
**உறங்கும்போதும்**

விழித்திருக்கும் போதும்
வருடும் - நட்பின் கரங்கள்
நீ இல்லாத போதும்
உன் இருப்பை உணர்த்தும் ஜீவன்!
வெற்றிக் களிப்பில்
ஓரமாய் நின்று
கைதட்டும் ஜீவன்!
தோல்விகளில்
தோள் தாங்கி
நிற்கும் துணை!
உயரும் போது
படிக்கட்டாகும்!
தாழும் போது
ஊன்று கோலாகும்!
தேடும் போது
வெளிச்சப் புள்ளியாகி
சாயும் போது
மடியைத் தலையணையாக்கும்
நட்பின் வலிமை!

என்று வானதி எப்போதோ படித்திருந்த கவிதை இப்போது அவளுக்குள் நிழலாடியது.

'நண்பன் வேண்டுமானால் பொய்யானவனாக இருக்கலாம். நட்பு பொய்யாவதில்லை' என்று எப்போதோ படித்த வரிகளும் அவளுக்குள் மின்னியது.

எழுந்து போய்க் கணவனிடம் பேசலாமா என்று எண்ணியபோது அவளது செல்ஃபோன் அதிர்வு அலைகளை எழுப்பியது.

இரவு நேரத்தில் பெரும்பாலும் அவள் வைப்ரேஷனில் போட்டு வைத்து விடுவாள்.

ஆச்சர்ய ரேகைகள் முகத்தில் ஓட செல்ஃபோனைக் கையில் எடுத்தாள்.

பழக்கமான எண் அல்ல. புதிய எண். செல்ஃபோனைக் காதுக்குக் கொடுத்தாள். கணவனின் சிந்தனையைக் கலைக்க விரும்பாமல் மெல்லிய குரலில் 'உம்' கொட்டிக் கொண்டாள்.



கிட்டத்தட்ட நவரச 'பா'வங்களையும் கலந்தாற் போல் ஒலித்த குரல் சொன்ன விவரங்களையெல்லாம் அவளும் ஒரு அதிர்வுடனேதான் வாங்கிக் கொண்டாள்.

இத்தனைக்கும் அவள் கணவன் திரும்பிப் பார்க்கவே இல்லை என்பதையும் கவனித்துக் கொண்டாள். தன்னிடம் பேசிய குரலுக்குச் சொந்தக்காரர் ஒய்ந்து விடைபெற்றுக் கொண்ட பிறகு வானதி பத்து நிமிடங்களுக்கு மேல் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தாள். தன் கணவனுக்கு ஏற்பட்ட உள்ளுணர்வு இப்போது அவளுக்குப் புரிந்தது. ஆச்சர்யத்தையும் ஏற்படுத்தியது. டெலிபதி என்பார்களே அது போல ஏதோ ஒரு செய்தி அவனுக்குக் கிடைத்திருக்கிறது.

இப்போது என்ன செய்வது என்று யோசித்தாள். சட்டென்று எழுந்தாள். தனது கணவனின் செல்ஃபோனைத் துழாவி எடுத்தாள். எழுந்து போய்க் கணவனின் அருகில் நின்றாள். மெல்ல அவன் தலையைக் கோதிக் கொடுத்தாள்.

'அட்டடா! இப்ப என்ன? ஃபிரெண்டு கிட்ட பேசணும். அவ்வளவுதானே? பேசுங்க' என்று செல்ஃபோனை நீட்டினாள். அவன் புரிந்தும் புரியாதவன் போல செல்ஃபோனை வாங்கிக் கொண்டான். நண்பனின் எண்ணுக்குத் தொடர்பு கொடுத்தான்.

அவ்வளவுதான்!

பேச்சற்றுப் போய்க் கேட்டுக் கொண்டான். கண்களில் கண்ணீர் தளும்பியது.

குரல் தழுதழுக்க 'நான் இருக்கேண்டா உனக்கு!' என்று உணர்ச்சி பொங்கத் தன் கணவன் கூறுவதை ஆழமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள் வானதி.



## 12

ரஞ்சித்தும் ரகுநாத்தும் கலகலவென சிரித்துக் கொண்டு முன்னாலே போய்க் கொண்டிருந்தார்கள்!

வானதியும், ரூபலதாவும் அதை ரசித்துக் கொண்டு சற்றுப் பின்னாலே மெதுவாக நடந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரின் கையிலும் தேங்காய் பழத்தட்டு இருந்தது.

இப்போது அவர்கள் காலகாலேஸ்வரர் கோவிலில் இருந்தார்கள். சற்றுப்

பிரகாரத்தில் நடந்து கொண்டிருந்தார்கள். அமைதி நிறைந்த அந்தச் சூழல் அவர்கள் உள்ளத்தில் எல்லையில்லாத நிம்மதியை நிலவச் செய்தது.

சுற்றுப்பிரகாரத்தில் அழகழகான பூச்செடிகள் இருந்தன. நல்லவேளையாக அந்த நேரத்தில் கூட்டம் இருக்கவில்லை.

சிறிய கோவிலானாலும் அந்தக் கோவிலுக்கு ஒரு வரலாறு இருந்தது. திருக்கடவூரில் மார்க்கண்டேயர் மீது பாசக் கயிற்றை எமன் வீசியபோது சிவனையும் சேர்த்து அது கட்டியது. தன்னிடம் அடைக்கலம் புகுந்த பக்தன் மீது பாசக் கயிற்றை வீசியதால் கடுங்கோபம் கொண்ட சிவபெருமான் எமனைத் தனது இடதுகாலால் எட்டி உதைத்தார்.

பணியில் தவறி - சிவபெருமானின் கோபத்துக்கு ஆளாகி - அவரிடம் உதை பெற்ற எமதர்மன் தனது அதிகாரம் அனைத்தையும் இழந்து சாதாரண மனிதனுக்கு ஒப்பானவனாக மாறி பூலோகத்தை அடைந்தான். பூலோகம் வந்து சேர்ந்த அவன் ஒவ்வொரு ஊராகச் சுற்றி சிவனை வழிபட்டு வந்தான். அவ்வாறு வந்த அவன் தற்போது கோவில் எழுந்திருக்கும் கௌசிக நதிக்கும் வந்து சேர்ந்தான்.

நதியில் நீராடிய அவன் அவ்விடத்தில் சிவனை வழிபாடு செய்து அவரது அருளைப் பெற வேண்டும் என எண்ணினான்.

சிவனாக எண்ணி வழிபட அவ்விடத்தில் கல் ஏதும் கிடைக்காததால் கோபங் கொண்ட எமன் அங்கே கிடந்த குச்சி ஒன்றை எடுத்து நதிக்கரையின் ஓரிடத்தில் குத்தினான். அப்போது அவ்விடத்தில் இருந்து நுரை பொங்கி வருவதைக் கண்டு அதையே சிவன் உருவமாக செய்து வழிபட்டான்.

அப்போது, கோவில் அருகில் மந்திரச் சொல் ஓதும்படியான குரல் கேட்டு, அவன் அங்கு சென்று பார்த்தபோது கௌசிக முனிவர் (விஸ்வாமித்திரர்) தவம் செய்து கொண்டிருந்ததைக் கண்டான். எமனைக் கண்ட விஸ்வாமித்திரர் அவனிடம் முன்பு பணியில் தவறு செய்ததால் அவனுக்கு நேர்ந்த சம்பவங்களை விளக்கி சிவனை வழிபட ஏதும் கிடைக்காத போதும் அவர் மீது கொண்ட அதீக பக்தியினால் அவ்விடத்தில் ஊற்றாகத் தோன்றிய பகுதியில் இருந்து நுரையை எடுத்து அதனையே சிவனாக செய்து வழிபட்டால் அவனது சாபம் நீங்குவதாகக் கூறி அவன் செய்த சிவனை பிரதிஷ்டை செய்தார். அதன்பின், எமதர்மன் தனது சாபம் நீங்கப் பெற்று இழந்த எமதர்மன் பணியை மீண்டும் பெற்றான்.

இவ்வாறு எமனே இத்தலத்தில் சாபம் நீங்கப் பெற்றதால் மானிடரான நாம் வழிபட்டால் இந்த பூலோகத்தில் சிறப்பாக வாழ முடியும் என்பது இக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் நம்பிக்கையாகும்.



காலகாலேஸ்வரர் கோவில் மூலவருக்குத் தெற்கே தட்சிணாமூர்த்தி, தமிழகத்திலேயே - ஏன்... ஆசியாவிலேயே வேறு எங்கும் காணமுடியாத அளவுக்கு மிகப்பெரிய உருவத்துடன் அழகாகக் காட்சியளிக்கிறார். தனிக் கருவறையில் இருக்கிறார் என்பது இன்னொரு விசேஷம். கருணாகரவல்லி அம்மன் இன்னொரு பக்கத்தில் வீற்றிருக்கிறார். காலகாலேஸ்வரர் சன்னதிக்கும் கருணாகரவல்லி அம்மன் சன்னதிக்கும் இடையே பாலசுப்பிரமணியர் இருக்கிறார். அதனால் சோமாஸ்கந்த அமைப்பு உடைய கோவிலாகக் கருதப்படுகிறது.

கோவையிலிருந்து சத்தியமங்கலம் செல்லும் வழியில் கோவில் பாளையம் என்ற ஊரில் இந்தக் கோவில் அமைந்திருந்தது. தரிசனத்தை முடித்துக் கொண்டு நால்வரும் சற்று நேரம் அமைதியாக அமர்ந்து விட்டு ஒரு அமைதி நிலவிய மனநிலையுடன் அங்கிருந்து கிளம்பினார்கள்.

கார் இப்போது சத்தியமங்கலம் நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

சத்தியமங்கலத்திற்கு அருகே உள்ள பண்ணாரி அம்மன் கோவிலின் உச்சிக்கால பூஜை நடந்து கொண்டிருந்தது. அங்கேயே ஒரு பக்கமாக அமர்ந்து கையோடு கொண்டு வந்திருந்த மதிய உணவை உண்டு முடித்தார்கள்.

'சும்மா சொல்லக்கூடாதும்மா. நீ செஞ்சிருந்த பருப்பு சாதம் சூப்பர்.' என்றான் ரகுநாத்.

'ஏன்... நான் செஞ்சு கொண்டுவந்திருந்த சாதம் மட்டும் நல்லா இல்லையாக்கும்?' என்று செல்லமாகச் சிணுங்கினாள் ரூபலதா.

'ஆகா... ரொம்ப நல்லாயிருந்தது. பிரிப்பேர் பண்றது ரொம்ப கஷ்டமாச்சே! அதுவும் தயிர்சாதம் ரொம்ப ரொம்பக் கஷ்டம்.' என்று இடிஇடி என்று சிரித்தான் ரகுநாத்.

ரூபலதா பொய்க் கோபத்துடன் முறைத்தாள்.

வானதி உடனே உதவிக்கு வந்தாள். 'ஏண்ணா அப்படிச் சொல்றீங்க? தயிர் சாதம் பிசையறதும் ஒரு கலைதான்! ரூபா பாருங்க... திராட்சை, மாதுளை முத்து, முந்திரி பருப்பு, கொத்துமல்லித் தழை, கருவேப்பிலை மிளகாய் எல்லாம் போட்டு எவ்வளவு டேஸ்ட்டா பிசைஞ்சு கொண்டு வந்திருக்காங்க.' என்றாள்.

ரகுநாத் புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

'ஏம்மா, உன்னோட அகராதியில கெட்டவங்க - அப்படின்னு யாருமே இல்லையில்லை?' என்றான்.

ரஞ்சித்தின் பார்வை கூட வாஞ்சையாக அவள் முகத்தை வருடியது. ரகுநாத்தின் புகழ்ச்சி வார்த்தைகளால் லேசான வெட்கம் முகத்தில் இழையோட -

'ப்ளீஸ் அண்ணா போதும்!' என்றாள் வானதி.

அந்த நிமிடத்தில் ரூபலதாவின் முகத்தில் லேசான வாட்டம் தோன்றி மறைந்தது.

ரஞ்சித் கூட சிரித்தான்.

'ஆமாடா... நீ ஆரம்பிச்சுராத. நாம வேற கொடி வேரிக்குப் போறதா ப்ளான் பண்ணியிருக்கோம். பேசிகிட்டு இருந்தா லேட் ஆயிடும். சீக்கிரம் கொட்டிக்கோடா! சாப்பாட்டுக் கடையை ஏறக்கட்டிட்டு கிளம்பலாண்டா' என்றான்.

கிளம்பினார்கள். சத்தியிலிருந்து கோபிக்கு போகிற வழியில் இருந்த கொடிவேரி என்ற சிறிய நீர் வீழ்ச்சி இருக்கும் ஆற்றுப் பகுதிக்குப் போனார்கள்.

நீரில் துளைந்து துளைந்து விளையாடினார்கள்.

'ரூபா... இங்க நிறைய ஷூட்டிங் நடத்தியிருக்காங்க. 'சின்னத் தம்பி' படத்துல மனோரமா ஆச்சியும் பிரபு சாரும் இருந்த வீடும்கூட அந்தப் பக்கம்தான்' என்று காட்டினாள் வானதி.

காலுக்கடியில் தொட்டுவிட்டுப் போன மீன்களைக் கண்டு துள்ளிக் குதித்தார்கள்.

பரவசமாகச் சிரித்தார்கள்.

குளித்து வெளியே வந்து சுற்றுப்புறத்தை வேடிக்கை பார்த்தார்கள்.

ஆற்று மீனைப் பிடித்து அங்கேயே வறுத்து விற்பவர்களும் - அதை வாங்கிச் சாப்பிடுபவர்களும் என்று ஒரு கூட்டம் ஒரு பக்கம் சூழ்நிலையைக் கலகலப்பாக்கிக் கொண்டிருந்தது என்றால்,

இளைஞர்கள் ஒரு பக்கம் கும்பல் கும்பலாக குதியாட்டம் போட்டு வெடிச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அருகில் இருந்த பூங்காவில் குழந்தைகள் கூட்டம் ஒன்று குதித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்

இன்னொரு காட்சியும் தென்பட்டது.

மதுவின் போதையோடு உலவிக் கொண்டிருந்தவர்களும் இருந்தார்கள்.

வருத்தமான விஷயம் என்னவென்றால் அந்த மாதிரியான சிறு



குழுக்களில் இருந்தவர்களைப் பார்த்தால் நன்கு படித்த, நல்ல பணியில் இருக்கிற இளைஞர்களைப் போல் தோன்றினார்கள்.

ரஞ்சித் வருத்தத்துடன் ரகுநாத்தைப் பார்த்தான்.

'ஏன் ரகு... மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்குல்ல? கல்யாணம் - கருமாதி, நல்லது - கெட்டது எல்லா இடத்திலயும் இப்ப மது அருந்தறதுங்கறது ஒரு ஃபேஷனாப் போயிடுச்சு இல்ல? ஒரு விஷயம் தெரியுமா? ரீசெண்டா ஒரு ஆராய்ச்சி பண்ணியிருக்காங்க, தெரியுமா? அதுல இந்தியாவுல எதிர்காலத்துல நிறைய சாவுகள் மதுப்பழக்கத்தாலதான் இருக்கப் போகுதாம்' என்றான்.

இருவரும் ஆற்றங்கரையில் தலையைத் துவட்டிக் கொண்டிருந்தார்கள்.

'ஆமாடா. இந்த மதுப்பழக்கம் எல்லா மட்டத்துலையும் ஊடுருவித்தான் இருக்கு' என்றான் ரகுநாத்தும்.

'அதவிடு! இப்ப சூடா ஏதாவது சாப்பிடக் கிடைச்சா நல்லாயிருக்குமில்லே?' என்றான் ரஞ்சித் - சற்றே ஏக்கம் படிந்த முகத்துடன்.

ரூபலதாவும் வானதியும் ஒருவரை ஒருவர் பார்த்து நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டார்கள்.

வானதி குறும்புச் சிரிப்புடன் கேட்டாள். 'சரி, நாங்க இப்போ காரசாரமா ஏதாவது தந்தா எங்களுக்கு என்ன தருவீங்க?' என்று.

'என்னடா கேள்வி கேட்குற? நான்தான் என்னையே உனக்குத் தந்திருக்கேனே' என்று ஒரு விதமாக முகத்தை வைத்துக் கொண்டு நடித்துக் காட்டினான் ரஞ்சித்.

ரகுநாத் குபீரென்று சிரித்தான்.

'உன்னை வெச்சுக்கிட்டு என்னடா பண்றது?' என்றான்.

'டேய்! என் மதிப்பு உனக்குத் தெரியலே' என்று முறைத்தான் ரஞ்சித்.

'சரி... ஒரு பேச்சுக்கு சொல்றேன். உன்னை இங்க ஏலம் விட்டோம்னு வெச்சுக்கோ. இந்த வறுத்த மீன் விலைக்குக் கூட போகமாட்டே' என்றான் ரகுநாத்.

சட்டென்று ரூபலதா இடையிலே புகுந்தாள்.

'அவரு கிடக்காருண்ணா! அவருக்கு உங்களோட அருமை தெரியல. நீங்க விலைமதிப்புக்கு அப்பாற்பட்டவர்' என்றாள் ரூபலதா.

சட்டென்று அங்கே ஒரு அமைதி நிலவியது. அதை உணர்ந்தவன்

போல் ரஞ்சித் குறுக்கிட்டு 'ஏம்மா அப்படிச் சொல்றே? என்னைக் கேலி செய்ற உரிமை அவனுக்கு இல்லையா என்ன?' என்றான்.

வானதி இடையிலே நுழைந்து 'ஹலோ... ஹலோ டாப்பிக்கை மாத்தாதிங்க.

நான் என்ன கேட்டேன்? இப்ப சூடா சாப்பிடறதுக்கு ஏதாவது கொடுத்தா அதுக்கு பதிலா என்ன குடுப்பீங்க' என்றாள்.

ரஞ்சித் சிரித்தான்.

'பரிந்து அளித்த சோறு எல்லா உலகமும் பெறும்' அப்படின்னு ஔவையார் பாட்டெழுதிக் குடுத்த மாதிரி நானும் தறேன்' என்றான்.

வானதி அழகாக சிரித்து விட்டு 'ரெண்டு பேரும் பயங்கரமான நழுவல் மன்னர்கள்' என்றபடி காருக்குப் போனாள்.

ஒரு பிக்னிக் கூடையில் வைத்திருந்த ஒரு ஹாட் பேக்கை எடுத்து வந்தாள். அதில் சூடான வெஜிடெபிள் கிச்சடி இருந்தது. இன்னொன்றில் தொட்டுக் கொள்ள வெள்ளைக் குருமா வைத்திருந்தாள்.

ஆண்கள் இருவரும் ருசித்து உண்டார்கள்.

ஒவ்வொரு முறையும் அந்த அருமையான உணவை வாய்க்குள் போடும்போதும் ரகுநாத்தின் உள்ளத்தில் எழுந்த நன்றி உணர்வு தொண்டைக்குள் விக்கியது.

அந்த நன்றி உணர்வு வெஜிடபிள் கிச்சடிக்கால் எழுந்த நன்றியுணர்வு அல்ல. சென்ற வாரத்தில் ரஞ்சித் தனக்காகப் பட்ட பாட்டை நினைத்து எழுந்த நன்றியுணர்வுதான் அது.

தான் செய்தது துரோகமே ஆனாலும் அதை மறந்து - மன்னித்து தனக்காக அவன் ஓடி வந்த நிகழ்வு இப்போதும் மனதுக்குள் ஓடியது.

**'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு'**

என்று திருக்குறள் சொல்வதைப் போல தனது துன்பம் களைவதற்காக எப்படி ஓடி வந்தான் இவன்.... அதுவும் எந்த நேரத்தில்? இப்போது நினைத்தாலும் உள்ளமும் உடலும் சிலிர்த்தது.

அதே நேரத்தில் ரஞ்சித்தின் உள்ளத்திலும் அந்த நிகழ்வு பற்றிய சிந்தனை தான் ஓடிக் கொண்டிருந்தது.

நள்ளிரவு நேரத்தில் தன் மன வாட்டத்தையும், முக வாட்டத்தையும் கண்ட மனைவி 'இந்தாங்க பேசுங்க' என்று செல்ஃபோனைக் கொண்டு



வந்து நீட்டினாளே... அந்தக் கணத்தில்தான் வானதியின் உள்ளத்தின் அழகு அவனுக்குப் புரிந்தது. அந்த நொடியில்தான் அவள்மேல் எல்லையற்ற அன்பும் காதலும் பெருக்கெடுத்தது.

இப்போது போல அந்த நாள் அவன் உள்ளத்தில் நிழலாடியது.



## 13

தோளில் சாய்ந்து கொள்ள தோழன் மட்டும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று எப்போது ரகுநாத் நினைத்தானோ அதே கணத்தில் அவனது செல்ஃபோன் சங்கீதம் பாடியது.

கையில் எடுத்தான்.

ரஞ்சித்தின் பெயர் மின்னியது.

அழுகை கொப்பளிக்க - உதடுகள் துடிக்க - 'ஹலோ' என்றான்.

'நீ ஒண்ணும் பிசிராந்தையார் இல்லை. நான் ஒண்ணும் கோப்பெருஞ்சோழன் இல்லை. சொல்லப் போனால் நீ ஒண்ணும் எங்கிட்ட நல்லா நடந்துகிட்டவன் இல்லை. ஆனாலும் நீ ஏதோ கஷ்டத்துல இருக்கிறதா ஒரு நினைப்பு என் மனசைப் போட்டு அலைக்கழிக்குது. அதான் ஃபோன் பண்ணினேன். இது பைத்தியக்காரத்தனமாக் கூட இருக்கலாம். சரி, நான் வைக்கறேன்' என்று தொடர்பைத் துண்டிக்க முயற்சித்த போது -

'டேய், ப்ளீஸ்... வைச்சுராதடா' என்று பொங்கிப் பொங்கி அழுது விட்டான் ரகுநாத்.

ரஞ்சித், அவன் அழுது முடிக்கும் வரை மௌனமாகக் காத்திருந்தான். அழுகை குறைந்தவுடன் ரஞ்சித் 'சரி! இப்போ நான் அங்கே வரட்டா?' என்றான்.

'வேண்டாம். ஆனா காலையில வரியா?' என்றான் ஆர்வமாக.

'சரி வரேன். ரூபா மேடம் எங்கே?' என்றான்.

'காலையில சொல்றேண்டா' என்றான் - அதே கலக்கம் மண்டிய குரலில்.

அதற்குள்ளாக வானதி ரஞ்சித்தின் தோளை லேசாக அழுத்தி, 'எனக்குத் தெரியும். நான் சொல்றேன்' என்பது போல கண்அமர்த்திக் காட்டினாள்.

அந்தப்புறம் ரகுநாத்தும் 'அவ என்னை விட்டுட்டுப் போயிட்டா'

என்றான்.

ரஞ்சித் அதிர்ச்சியுடன் அந்தச் செய்தியை உள்வாங்கிக் கொண்டான். நீண்ட பெருமூச்செறிந்தான்.

'பேசலாண்டா! எல்லாத்தையும் காலையில பேசலாம்! எதுக்கும் கவலைப்படாதே! நல்லது கெட்டதுக்குத்தான் நண்பன் வேணுங்கறது... நீ திருந்த வேண்டியிருக்கும். இல்லை அவங்க திருந்த வேண்டியிருக்கும். எதுவானா என்ன... காலையில பேசிக்கலாம்.' என்றான்.

' நான்தான் திருந்த வேண்டியிருக்கும்' என்று ஏதோ சொல்ல முயன்ற ரகுநாத்தை அதட்டினான் ரஞ்சித்.

'நான்தான் சொல்றேனே - காலையில பேசிக்கலாம்னு' என்றான்.

என்றைக்குமில்லாத நிம்மதியுடன் அன்றைக்கு உறங்கினான் ரகுநாத்.

அடுத்த நாள் காலை!

அதிகாலை ஆறுமணிக்கெல்லாம் மனைவியோடு வந்து நின்றான் ரஞ்சித்.

'சரி, நீங்க பேசிக்கிட்டு இருங்க! நான் காஃபி போடறேன்'. என்று உரிமையோடு உள்ளே போனாள் வானதி.

உண்மையில் நடந்தது என்னவென்றால் ரஞ்சித் ரகுநாத்தோடு பேசுவதற்கு முன்பாகவே இரவு ரூபலதா வானதியிடம் எல்லா விஷயத்தையும் கொட்டித் தள்ளியிருந்தாள்.

'நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். ஆனா அப்பா கேட்கல. 'கண்டிப்பா ஹெல்ப் பண்ணலாம்மா. ஆனா எடுத்தவுடனே ஹெல்ப் பண்ணிட்டா எப்படியானாலும் நமக்கு உதவி கிடைக்குங்கற தைரியம் வந்துடும். மேல மேல தப்பு செஞ்சுகிட்டேதான் இருப்பாரு. கொஞ்சம் அலையவிடலாம். பணங்கறது அவ்வளவு ஈஸியான விஷயம் இல்லைங்கறது புரிஞ்சதுக்கப்புறம் கண்டிப்பா செய்யலாம். நீ என் மேல பழியைப் போடு. 'நான் என்ன செய்யறது? எங்க அப்பா பணம் தரமாட்டேங்கறாரு.' அப்படின்னே சொல்லுங்கறாரு' என்று அழுதாள்.

'அவர் சொல்றதுலேயும் நியாயம் இருக்கு ரூபா மேடம்' என்றாள் வானதி.

'ப்ளீஸ்... மேடம் எல்லாம் இல்லை... அவங்க ரெண்டு பேரும் எப்படி ஃப்ரெண்ட்ஸோ அதே மாதிரி நாமளும் ஃப்ரெண்ட்ஸ்தான்' என்றவள் மேலும் தொடர்ந்து 'இப்ப எனக்கு என்ன பயம்னா நீங்களும் விலகிட்டீங்க.



நானும் இப்போ பிரிஞ்சு வந்துட்டேன். எங்கே மனசொடிஞ்சு போயிடுவாரோன்னு கவலையாயிருக்கு. ப்ளீஸ்... நீங்க ஏதாவது செய்ய முடியுமா?'என்று தயவாகக் கேட்டாள்.

'தெரியலை. நான் இவருகிட்ட வேணாப் பேசிப் பார்க்கறேன். இவரும் ஏனோ உங்க ஹஸ்பெண்டை பத்திதான் பேசிக்கிட்டு இருக்காரு' என்றாள். அதற்குப் பிறகுதான் அவளே செல்போனைக் கொடுத்து பேசச் சொன்னாள்.

காலையில் புறப்படும்போது ரூபலதா தன்னிடம் பேசியதையும் சொன்னாள்.

இதையெல்லாம் யோசித்துக் கொண்டே வானதி காஃபியைப் போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள்.

'ஆமா, உனக்கு எதுக்கு நாலஞ்சு கிரெடிட் கார்டு?' என்று கேட்டான் ரஞ்சித்.

ரகுநாத் அசடுவழிய புன்னகைத்து விட்டு 'இல்லை... ஆரம்பத்துல கொஞ்சம் கடன்தான் வாங்கினேன். ஆனா அதுல போட்டு இதுல போட்டுப் புரட்டினதுல அதிகமாயிடுச்சு' என்றான்.

'இந்தப் பாரு ரகு. கிரெடிட் கார்டு எல்லாம் சரியா ஹேண்டில் பண்ணத் தெரியலைனா ரொம்ப மாட்டிக்கிடுவோம். குறிப்பிட்ட நாளுக்குள்ள பணத்தைக் கட்டலைன்னா வட்டி குட்டி போடும். ஆளை முழுங்கிடும். கூப்பிட்டு கூப்பிட்டு கடன் கொடுக்கறாங்க அப்படின்னு ஆசையில கடனை வாங்கிட்டோம்னா... அவ்ளோதான் மாட்டிருவோம். அதுலயும் நாலஞ்சு கிரெடிட் கார்டு எதுக்கு உனக்கு?' என்று கடிந்து கொண்டான் ரஞ்சித்.

உதவிக்கு என்று ஓடிவந்து கை கொடுக்கிற நண்பன் உரிமையோடு கேட்கற கேள்விகளில் ஆழமான அக்கறையும் அர்த்தமும் இருப்பதை உணர்ந்து கொண்டதால்தானோ என்னவோ ரகுநாத் தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருந்தான்.

'சரி... பேப்பரும் பேனாவும் எடுத்துட்டு வா' என்றான். ரகுநாத் எடுத்துக் கொண்டு வந்தான்.

இங்கிதம் அறிந்தவளாக வானதி 'நான் வேண்ணா ஏதாவது டிஃபன் செய்றேன்' என்று எழுந்தாள்.

காஃபி போடுவதற்காக பால் பாக்கெட்டை எடுக்கும் போதே

வெங்காயம், தக்காளி, கொஞ்சம் காய்கறிகள் ஃபிரிஜ்ஜில் இருந்ததைப் பார்த்திருந்தாள்.

அதோடு கூட தன்னை வைத்துக் கொண்டு கடன் விவகாரங்களைப் பேசுவதில் ரகுநாத்துக்கு அசௌகரியம் இருக்குமென்று அவளுக்குப் புரிந்தது. அதனால்தான் எதையோ செய்கிறேன் என்று அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள்.

தன் எதிரில் 'ஹோம் வொர்க்' செய்யாமல் வந்து ஆசிரியரிடம் பிடிபட்ட மாணவனைப்போல் விழித்துக் கொண்டு வந்து அமர்ந்த ரகுநாத்தைப் பார்த்து ரஞ்சித்துக்கு பாவமாகவும் இருந்தது. சிரிப்பாகவும் இருந்தது.

கடன் எவ்வளவு என்று கணக்குப் போட்டார்கள். கிட்டத்தட்ட பத்துலட்ச ரூபாய்க்கு மேல் வந்தது. ஏதோ ஒரு ப்ரைவேட் கம்பெனியில் எல்லா அலவென்ஸ்களும் சேர்ந்து மொத்தமாக சம்பளம் பதினைந்தாயிரத்தைக் கூடத் தாண்டாத நிலையில் இவ்வளவு பெரிய தொகையைக் கடனாக வைத்துக் கொள்வது என்பது எவ்வளவு பெரிய விபரீதம் என்று பட்டியலிடுகையிலேயே ரகுநாத்துக்கு மெல்ல மெல்லப் புரிந்தது.

நிலைமையின் தீவிரம் உணர்ந்து கலங்கிப் போனான். 'இவ்வளவு இருக்கும்ன்னு நினைக்கலடா' என்று அழாத குறையாக ரஞ்சித்தைப் பார்த்தான்.

ரஞ்சித் 'சரி... கடன் எவ்வளவுன்னு பார்த்தாச்சு. இனி அசெட் எவ்வளவு இருக்குன்னு சொல்லு.'

'அசெட்டா?' என்றவன், 'அடுத்த தெருவுல ஒரு சின்ன ஓட்டு வீடு மூணு செண்ட் இடத்தோட என் பேர்ல இருக்கு. அதுல இருக்கப் பிடிக்காமதான் இங்க வந்து இருக்கேன். அம்மாவும் அப்பாவும் - அவங்க காலத்துக்குப் பின்னாடி இருக்கட்டும்னு எழுதி வைச்ச சொத்து அது ஒண்ணுதான்' என்றான்.

'ம்! இந்த வீட்டுக்கு வாடகை எவ்வளவு?' என்றான்.

'வாடகைக்கு இல்லப்பா, போக்கியத்துக்குத் தானே இருக்கேன். மூணு இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கேன்.'

'சரி' என்று உள்வாங்கிக் கொண்ட ரஞ்சித் 'ஓட்டு வீட்டு மதிப்பு எவ்வளவு தேறும்? வீட்டு கட்டிடம் எவ்வளவு ஸ்ட்ராங்?' என்று கேட்டான்.

ரகுநாத் முகத்தில் பெருமைமின்ன, 'அதெல்லாம் ரொம்ப ஸ்ட்ராங். எல்லாம் அந்தக் காலத்து ஒன்றரைக்கல் செவுராக்கும்' என்றான்.



'ப்ராப்ளம் என்னன்னா ஓட்டு வீட்டுக்கு பேங்க் லோன் கிடைக்கிறது கஷ்டம். ப்ரைவேட் ஃபைனான்சிங் தான் அரேஞ்ஜ் பண்ணனும். நான் பண்றேன். ஆனா நீயும் சில தியாகங்கள் பண்ணனும். இந்த வீடு உனக்குத் தேவையில்லை. இதைக் காலி பண்ணிட்டு அந்த வீட்டுக்குப் போயிடு. சவுகரியக் குறைபாடு இருந்தாலும் பரவாயில்லை. எவ்வளவு ரூம் இருக்கு?' என்று கேட்டான்.

'அதெல்லாம் ஒண்ணும் பிரச்சினையில்ல. ஒரு ஹால் இரண்டு மூணு ரூம், ஒரு கிச்சன் எல்லாம் இருக்கு. தண்ணி வசதியும் இருக்கு' என்றான்.

'அப்புறம் என்ன... போக்கியப் பணத்தைக்கேளு. நானும் ஃபைனான்ஸ் அரேஞ்ஜ் பண்றேன். வேண்ணா ரூபா அவுங்க அப்பாகிட்ட கேட்கலாமா?' என்றான்.

கேட்டுவிட்டு ரகுநாத் என்ன பதில் சொல்கிறான் என்று குறுகுறுவென பார்த்தான்.

ரகுநாத் நீண்டதொரு பெருமூச்சு விட்டுவிட்டு சொன்னான். 'வேண்டாம்ப்பா, இப்ப மரியாதை கெட்டதே போதும்' என்றான் வருத்தம் தோய்ந்த முகத்துடன்.

நேர்மாறாகக் கலகலவென்று சிரித்த ரஞ்சித் 'இதை... இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்' என்றான்.

அதற்குள்ளாக வானதி டிஃபன் செய்து கொண்டு வந்தாள். சாப்பிட்டார்கள்.

'சரிடா... நானும் வானதியும் கிளம்பறோம். நீ எதையும் நினைக்காம ஆஃபிஸ்க்கு போ. நான் ப்ரைவேட் ஃபைனான்சியர்கிட்டே பேசிட்டு உன்னைக் கூப்பிடறேன். ஈவ்னிங் கூட போலாம். தேவைப்பட்டா ஆபிசுக்கு லீவு போடலாம்' என்றான்.

அன்று மாலையே பிரைவேட் ஃபைனான்சியரை பார்த்தார்கள். ஓட்டுவீட்டின் மதிப்பு பன்னிரண்டு இலட்சம் என்று கணக்குப் போட்டு ஆறு இலட்சம் கடன் வாங்கினார்கள். அடுத்த நான்கு நாட்களுக்கு ரகுநாத் லீவு போட்டுவிட்டு வந்தான்.

வானதியைக் கடையில் அமரவைத்துவிட்டு அப்பாவிடம் விவரம் சொன்னான் ரஞ்சித். அப்பாவுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்றாலும் 'பட்டுத் திருந்தியிருக்கான்ப்பா. நண்பனா அந்த நேரத்துல நான்

உதவி செய்ய வேண்டியது ரொம்ப அவசியம்' என்று நயந்து சொல்லி சம்மதிக்க வைத்தான்.

முதல் வேலையாக அனைத்து கிரெடிட் கார்டு கடன்களையும் அடைத்தார்கள். மற்ற நண்பர்களிடம் வாங்கியிருந்த கடன்களையும் அடைத்தார்கள். ரஞ்சித்துக்கு கொடுக்க வேண்டிய தொகையைப் பற்றிக் குறிப்பிட்ட ரகுநாத், ரஞ்சித்தின் இருகைகளையும் பிடித்து கொண்டு -

'கொஞ்சம் பொறுத்துக்கோடா. போக்கியத்தொகை வந்தவுடனே கொடுக்கிறேன்' என்றான்.

'முதல்ல அந்த ப்ரைவேட் ஃபைனான்சியருடைய கடனை அடை. அதுக்கப்புறம் பாத்துக்கலாம். நான் வேண்ணா ஒரு ஹெல்ப் பண்றேன். சாயங்காலம் ஆறுமணியிலிருந்து ஒன்பது மணிவரைக்கும் நம்ம கடையில கூட்டம் வரும், வந்து உட்காரு - பார்ட் டைம் மாதிரி. நானும் ஒரு அமௌண்ட் தரேன்' என்றான்.

'ஒரு மூவாயிரம் ரூபாய்னாலும் மளிகைச் செலவுக்கு ஆகுமே' என்றான்.

'அது உண்மைதான்' என்று ஒத்துக்கொண்டான் ரகுநாத்.

மீண்டும் ரகுநாத் கடைக்கு வந்தவுடனே முதலில் கொஞ்சம் கலக்கம் அடைந்துவிட்ட தன்ராஜும் தமயந்தியும், அந்த மாத இறுதிக்குள்ளாகவே ரகுநாத்தின் நடத்தையில் ஏற்பட்டிருந்த மாற்றத்தைக் கண்டு உண்மையில் ஆச்சர்யப்பட்டுத்தான் போனார்கள்.

ரகுநாத்துக்கு இதுநாள்வரை தெரியாத ஒரு உண்மை என்னவென்றால் ப்ரைவேட் ஃபைனான்சியர் மூலமாகப் பணத்தைக் கொடுத்து பத்திரத்தைத் தன் பொறுப்பிலே வைத்துக் கொண்டிருப்பது செல்லமுத்துதான் என்பதுதான் அது. அதையும் ஒரு நாள் ரஞ்சித் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

சொன்னான்.



## 14

அடுத்த தெருவில் இருந்த ஒட்டுவீட்டை ஆட்களின் உதவியோடு சுத்தப்படுத்திக் கொண்டிருந்த போது ரஞ்சித் சொன்னான்,

'இவ்வளவு முட்டாள்தனத்திலயும் ஒரு நல்ல காரியம் செஞ்சிருக்கடா' என்று.



அசடுவழிந்தபடி அவன் முகத்தைப் பார்த்தான் ரகுநாத்

'அந்த வீட்டுக்கு மூணுலட்சம் ரூபாய் போக்கியத்துக்கு குடுத்து வைச்சிருந்தையே... அதைச் சொல்றேன்' என்றான்.

ரகுநாத்தின் முகத்தில் இன்னும் கொஞ்சம் அசடு வழிந்தது.

'நான் எங்கடா குடுத்தேன். எங்க அப்பா இருந்தப்ப நாலு வருஷத்துக்கு முன்னாலேயே கொடுத்தது.'

'அதானே பார்த்தேன். உனக்கு எங்கே அவ்வளவு தூரம் மூளை வேலை செய்யப்போகுது' என்றவன், ஏதோ நினைவு வந்தவன் போல 'ஏண்டா ரகு..! நாமபாட்டுக்கு நம்ம இஷ்டத்துக்கு அரேஞ்ஜ் பண்றோமே... ரூபாவுக்கு இதெல்லாம் புடிக்குமோ என்னமோ?' என்றான்.

உடனே ரகுநாத்தின் முகத்தில் கடுப்பேறியது.

'அவளைப்பத்தி மட்டும் பேசாதே' என்றான்.

ரஞ்சித்தின் முகத்தில் மெல்லியதொரு புன்னகை படர்ந்தது.

'அப்படி மட்டும் நெனச்சேன்னா நீ இதுவரை செய்த எல்லா முட்டாள்தனத்திலயும் அதுதான் உச்சக்கட்டமான முட்டாள்த்தனமாக இருக்கும்' என்றான்.

ரகுநாத் புரியாதவனாக விழித்தான்.

'ஆமாடா. இருபது வருஷமான இந்த ஒட்டுவீட்டுக்கு எந்த ஃபைனான்சியர்டா ஆறு இலட்சம் ஏழு இலட்சம் கடன் கொடுப்பாங்க? அவ்வளவு பெரிய தொகைக்கு கியாரண்டி போடறதுக்கு எந்த அப்பாவையும் சம்மதிக்க வைக்க முடியாது. எல்லாம் செல்லமுத்துப் பெருமாள் செஞ்ச உதவியாக்கும்' என்று சிரித்தான் ரஞ்சித்.

'ஏண்டா எங்கிட்ட சொல்லலை? கஷ்டமான நேரத்திலே ரூபா என்னை அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டா. அப்புறம் எதுக்கு அவங்ககிட்ட உதவி வாங்கணும்?'

'பேசாதடா நீ. சாப்பாட்டுக்கு இல்லாமயா... வேற ஏதாவது அவசியமான காரியத்துக்காகவா நீ கடன் வாங்கின? கொழுப்பு.... ஆடம்பரம்... இதுக்காகத்தானே வாங்கினே? எந்த ஒரு பொறுப்பான வைஃபும் அதை ஏத்துக்கமாட்டா. ரூபா கொடுத்தது ஷாக் ட்ரீட்மெண்ட்...'

ரூபாவுக்கு ஆதரவாகப் பேசுகையில் ரஞ்சித்தின் முகத்தில் தெரிந்த தீவிரம் பார்த்து ரகுநாத் சிந்தனை வயப்பட்டான். ரஞ்சித் தொடர்ந்தான்.

'ஆமா! இங்கிருந்து போன ரூபா சும்மா இருக்கல. 'விட்டுப் புடிக்கணும்மா.

இப்ப இருந்தே குடுத்துப் பழக்கினா பொறுப்பு வராதும்மா. கொஞ்ச நாள் பிரிஞ்சிரு என்று அப்பா சொல்றதுல நியாயம் இருந்தாலும் ரூபா சும்மா இருக்கலை. வானதிக்கு போன் பண்ணி அழுதுச்சு. ஃப்ரெண்டையும் பிரிஞ்சுட்டாரு. என்னையும் பிரிஞ்சிட்டாரு. மனசு விட்றப் போறாரு' அப்படின்னு கெஞ்சுச்சு' அந்தப் பொண்ணு என்றான் ரஞ்சித்.

ரகுநாத்தின் முகத்தில் இளக்கம் தோன்றியது.

'ஓ' என்றான் அடங்கிய குரலில்.

'என்ன ஓ! நீ பாட்டுக்கு அழுதுகிட்டு ஒக்காந்துட்ட அந்தப் பொண்ணு அசுர வேலை செஞ்சுருக்கு தெரியுமா.

அவங்கப்பாகிட்ட பேசி - அவரை சம்மதிக்க வச்சு இந்த ஆறுலட்ச ரூபாய்க்கு கியாரண்டி போட வச்சுது. எனக்கு இன்னும் கூட ஒரு சந்தேகம் என்னன்னா பணத்தையும் அவரே கொடுத்திருக்கலாம். ஒரு வேளை பத்திரம் கூட உங்க மாமனார் கிட்டதான் இருக்கும்னு நினைக்கிறேன். ஆனா நான் அதைப் பத்தி கேட்கலை. ஏன் தெரியுமா? அவங்க எப்ப சொல்லலையோ அப்ப நாமளும் தெரிஞ்ச மாதிரி காட்டிக்கக் கூடாது.

ரூபா நல்லதைத்தான் செஞ்சுது. எந்த ஒரு நல்ல வைஃபும் 'கிரெடிட்கார்டுல' கடன் வாங்கியிருக்கேன். அதுவும் நாலஞ்சு கிரெடிட் கார்டுல அப்படின்னு சொன்னா 'ஹை... ரொம்ப சந்தோஷம். இன்னும் ரெண்டு கிரெடிட் கார்டு வாங்கிக்கங்க' அப்படின்னு சொல்ல மாட்டாங்க என்றான் காட்டமாக.

ரகுநாத் மௌனமாக உள் வாங்கிக் கொண்டான். ரஞ்சித் மேலும் தொடர்ந்தான்.

'இந்த தாடி வெச்சுக்கிட்டு ஒரு மனுஷன் இருப்பாரே வள்ளுவர் வள்ளுவர்ன்னுகிட்டு - அவருதான் அழகா சொல்லியிருக்காரு 'ஒரு மனைவி நல்ல பண்புள்ளவளா இருந்தா ஒருத்தனுக்கு என்ன இல்லாமப் போகும்? அதுவே ஒரு நல்ல மனைவி இல்லேன்னா எதுதான் இருந்து என்னத்துக்கு ஆகும்.' அப்படின்னு.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை**

அது மாதிரி அந்தப் பொண்ணு மட்டும் அப்படியொரு ஷாக்



ட்ரீட்மெண்ட் கொடுக்கலேன்னா நீ இப்படி போர்க்கால அடிப்படையில செயல்பட்டிருப்பியா?' என்றான்.

'அதென்னமோ நிஜம்தான்' என்று மெல்ல முணுமுணுத்த ரகுநாத் கண்களில் குறும்புமின்ன இன்னொன்றும் சொன்னான்.

'அப்படின்னா நீ இப்போ என் இரண்டு கன்னத்துலயும் ரெண்டு இடி இடிக்கணுமே?' என்றான்.

இப்போது புரியாமல் பார்ப்பது ரஞ்சித்தின் முறையாயிற்று.

'முறைக்காதடா! நீ மட்டும்தான் குறள் சொல்லுவியா? நானும் கூடத்தான். அதே தாடிக்காரர்தான் நண்பா இப்படி சொல்லியிருக்காரு:

'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு.' ஹை நானும் ஒரு குறள் சொல்லிட்டேனே' என்றான் ரகுநாத். இருவரும் சிரித்தார்கள்.

சிரித்து ஓய்ந்ததும் ரஞ்சித், 'போடா... ரெண்டு பேரோட சுதந்திரமும் பறிபோயிடுச்சு. அதான் இடிச்சோறு போடறதுக்கு நம்ம வீட்ல இரண்டு பேர் வந்துட்டாங்களே' என்றான்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போதே ரஞ்சித்துக்கு ஒன்று புரிந்தது. எப்போதடா ரூபாவை பார்ப்போம் என்ற எண்ணம் ரகுநாத்துக்குள் பொங்கிக் கிளம்பியிருக்கிறது என்று புரிந்தது.

'என்னடா... ரூபாவைப் பாக்கணும்னு தோணிருச்சா?' என்றான்.

சற்றே வெட்கத்துடன் நண்பனைப் பார்த்த ரகுநாத் மேலும் கீழும் தலையாட்டினான்.

'தெரியும்டா. நாங்க விஷயத்தைச் சொன்னவுடனே ஐயாவுக்கு ரொமாண்டிக் மூடு வரும்னு தெரியும்' என்று கேலி செய்தான்.

'இன்னும் ஒரு அரைமணி நேரத்துல வருவாங்க' என்றான்.

'யாருடா?' என்றான் ஆர்வமாக.

'ரெண்டு பேரும்தான். அதாவது உங்க தேவியாரும் எங்க தேவியாரும்தான்' என்றான்.

இப்போது கோபியிலிருந்து கோவைக்கு வருகையில் அந்த விஷயங்கள் நினைவுக்கு வந்தன நண்பர்களுக்கு. ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டார்கள்.

**வீ**ட்டுக்கு முன்னாலே இருந்த அந்த இடத்தில் இரண்டு சேர்களை போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்

'உண்மையிலேயே நாம ரஞ்சித் அண்ணாவுக்கு ரொம்ப நன்றி சொல்லணும்' என்றாள் ரூபா.

'ஆமாம்மா' என்றான் ரகுநாத். தொடர்ந்து 'அன்னைக்கு நைட் அவனுக்குத் தூக்கமே வரலையாம். ரகுநாத்துக்கு ஏதோ பிரச்சினை அப்படின்னு புலம்பிக்கிட்டே இருந்தானாம். என் மேல எவ்வளவு அன்பு இருந்திருக்கணும்.' என்று நெகிழ்ந்து போனான். சொல்லிச் சொல்லி மாய்ந்து போனான்.

'உண்மைதாங்க' என்று ஒவ்வொரு முறையும் ஒத்துப்பாடினாள் ரூபலதா. சற்று நேரம் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். விளையாடிக் கொண்டார்கள்.

'சரி, இப்படியே பொழுது போக்கிட்டு இருந்தா சமையல் யார் செய்யறதாம்' என்று நகரமுயன்றவளை இழுத்துப் பிடித்து நிறுத்தினான்.

'வேண்டாண்டா செல்லம். இன்னைக்கு மட்டும் பேசிட்டு இருக்கலாம். கடையில் வேணா சாப்பிடலாம்' என்றான்.

அவள் உண்மையாகவே முறைத்தாள்.

'தலைக்கு மேல கடனை வெச்சுக்கிட்டு ஹோட்டலா? இனிக் கடன் தீருற வரைக்கும் விரதம் இருக்கணும் சார் விரதம்! சிக்கன விரதம்' என்றாள்.

அவன் 'சரிங்க மேடம்' என்று குனிந்து போலியாக வணக்கம் போட்டான்.

ரூபலதா ஒரு நிமிடம் நகத்தைக் கடித்துக் கொண்டாள். சிந்தனை வயப்பட்டாள். பிறகு சொன்னாள். 'ஏங்க! நான் ஒரு விஷயம் சொல்வேன். நீங்க கோபிச்சுக்கக் கூடாது. நீங்க சரின்னு சொன்னா நாம இவ்வளவு சிரமப்படவேண்டி இருக்காது' என்றாள்.

அவள் போடுகிற பீடிகையிலே எதை நோக்கி வருகிறாள் என்று அவனுக்குப் புரிந்தது. முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் -

'சொல்லு' என்றான்.

'நீங்க பணம் வாங்கியிருக்கிற அந்த ப்ரைவேட் ஃபைனான்சியருக்கு எங்க அப்பாதான் ரெக்கமண்ட் பண்ணினார். யாருகிட்டயோ நம்ம வீட்டுப் பத்திரம் எதுக்காக இருக்கணும்? எங்க அப்பாவே பணம் தருவார். கேட்கலாமா?' என்றாள். அவன் அழுத்தமாக குறுக்கும் நெடுக்குமாகத் தலையாட்டினான். அவள் திரும்பத் திரும்பச் சொல்லவும் அவன் தன் மனதில் இருப்பதை வெளிப்படையாகச் சொன்னான்.

'ஒரு தடவை மரியாதையைக் கெடுத்துகிட்டதே போதும் ரூபா. மறுபடியும் உன்னை என்கிட்ட அனுப்பிச்சு வைச்சதே பெருசு' என்றான்.

அவள், 'இல்லைங்க. செல்லமுத்துவோட பொண்ணு வெளியிலே கடன் வாங்கியிருக்கு அப்படின்னு பேச்சு வந்தா அவருக்கும் மனசு கஷ்டமாதான் இருக்கும்' என்றாள்.

'ஓ! இப்படி ஒண்ணு இருக்கோ. அப்படின்னா ஒண்ணு செய்யச் சொல்லு. இதே டர்ம்ஸ்ல ஃபைனான்ஸ் பண்ணச் சொல்லு. இந்த ஃபைனான்ஸ் கம்பெனியில் எப்படி நாம கடனை அடைச்சுட்டு பத்திரத்தை வாங்குவோமோ அதே போல பணத்தை அடைச்சிட்டு பத்திரத்தை வாங்கிக்கலாம்' என்றான்.

அவள் உற்சாகமானாள். 'இது போதுங்க' என்றாள். அப்போது அவள் முகத்தில் மின்னிய பெருமை அவனுக்குள் நெகிழ்வை ஏற்படுத்தியது.

'ஆமா ரூபா... இந்த அளவுக்குக் கூட நான் திருந்தலேன்னா ஒரு நல்ல மனைவியும் நல்ல நண்பனும் அமைஞ்சதுக்கு ஒரு அர்த்தமே இல்லாமல் போயிடும்.'

அவள் நெகிழ்ந்து நின்றாள். சுற்று முற்றும் பார்த்தாள். 'உள்ளே வாங்க' என்றாள்.

'ஏன்' என்று அவன் புரியாமல் கேட்க 'உள்ளே வாங்களேன்' என்று அவள் மீண்டும் மிரட்டினாள். அவனுக்கு இப்போது புரிந்தது.

சிரித்துக் கொண்டே உள்ளே போனான்!

'**ப**ரவால்லைம்மா நீ' என்று சிரித்தார் சதுர்முகன். பக்கத்தில் நின்றிருந்த கலைமணியும் புன்னகைத்தார்.

'ஆமாப்பா! ரூபலதாவுக்கு என்னைவிட உங்க மருமகள் மேலதான் நம்பிக்கை வந்திருக்கு. வானதி எப்படியாவது காப்பாத்துவாப்ல அப்படின்னு நம்பியிருக்காங்க' என்றான்.

வானதி புன்னகையுடன் சொன்னாள்.

'ஏன் அப்படி நினைக்கறீங்க. திடீர்னு ஜென்ஸ்கிட்ட எப்படி ஃப்ரீயா பேசமுடியும்? அதனாலதான் எங்கிட்ட சொல்லியிருக்காங்க."

'அது கரெக்ட்டுதான்' என்றார் சதுர்முகன். மேலும் தொடர்ந்து வானதியிடம் சொன்னார்.

'இன்னொரு விஷயம் நடந்ததும்மா. ஈவினிங் பார்ட்டைம் வேலைக்காக ரகுநாத் வந்தப்போ நான் ரொம்ப அதிர்ச்சியாயிட்டேன். என்னை விட தன்ராஜு'ம் தமயந்தியும் ரொம்பவே அதிர்ச்சியாயிட்டாங்க' என்று சிரித்தார்.

மற்றவர்களும் சிரித்தார்கள்.

வானதி முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு சொன்னாள்.

'மாமா, உண்மையிலேயே அவங்க ரெண்டு பேரும் நம்ம வெல்விஷர்ஸ். ரகுநாத் முதல்ல நிறையப் பணம் வாங்கியிருந்தப்ப ரொம்பப் பதைபதைச்சிப் போனாங்க. அவங்கதான் பிரச்சினையோட அளவையே எங்கிட்ட சொன்னாங்க' என்றாள்.

இப்போது ரஞ்சித் கூடச் சேர்ந்து கொண்டான். 'ஆமா, உண்மைதான். நான் அவங்க ரெண்டு பேரையும் தனியா அழைச்சிக்கிட்டுப் போயி எல்லா விவரத்தையும் சொன்னேன். அப்புறம் தான் நிம்மதியானாங்க' என்றான்.

'இத பாரு தம்பி... இப்பவும் நான் ஒண்ணு சொல்றேன். ரகுநாத் உங்கிட்டே வெச்ச நட்பு உண்மையோ இல்லையோ - நீ ரகுநாத்கிட்ட வெச்ச நட்பு உண்மையானது. அதனால இப்பவும் ஜெயிச்சது நீதான்' என்றார்.

'இல்லப்பா. ஜெயிச்சது நானுமில்ல; ரகுநாத்தும் இல்ல. உண்மையான நட்புதான்' என்றான்.

கலகலவென சிரித்த அப்பா 'அப்படித்தான் இருக்கட்டுமே! அதனால என்ன! சரி நானும் அம்மாவும் கொஞ்சம் வெளியே போறோம். உங்க அம்மாவோட சித்தப்பா பொண்ணு பார்வதி ரொம்ப நாளாக் கூப்பிட்டுகிட்டு இருக்கா. நாங்க ஒரு ஒருமணி நேரம் போய்த் தலையைக் காமிச்சிட்டு வரோம்' என்று மனைவியைப் பார்த்தார்.

இருவரும் கிளம்பினார்கள். அவர்கள் அந்தப் பக்கம் நகர்ந்த உடனே இந்தப்பக்கம் மனைவியைப் பார்த்து சிரித்தான் ரஞ்சித்.

'இங்கிதம் தெரிந்த அப்பா இல்லே?' என்றான்.

'ஆகா, ஆரம்பிச்சிடுவீங்களே' என்றாள் வானதி.

தங்கள் வீட்டில் பின்னாலே இருக்கிற அந்த சின்னத் தோட்டத்தின் நடுவே இரண்டு நாற்காலிகளைப் போட்டு அமர்ந்திருந்தார்கள்.

திடீரென்று 'சாரி வானதி' என்றான் ரஞ்சித்.



அவள் புரியாமல் விழித்தாள். 'எதுக்கு?' என்றாள்.

'இல்ல... முதன் முதலா நம்ம வீட்டுக்கு நீ வந்தப்ப உன்னை நான் சரியா நடத்தல. அதுக்காக என்னை மன்னிச்சுக்கோ' என்றான். அவள் சட்டென்று அவன் வாயைப் பொத்தினாள்.

'சேச்சே, என்ன நீங்க. இப்படியெல்லாம் பேசறீங்க' என்றாள்.

'இல்லே வானதி. நீ ரொம்ப உயர்ந்தவள். என் மனசைப் புரிஞ்சுகிட்டு ரகுநாத்கிட்ட பேசச் சொன்னையே... அது எவ்வளவு பெருந்தன்மையான விஷயம் தெரியுமா?' என்றான்.

'போதுங்க. வேற பேசுங்க' என்றாள்.

'வேற பேசணும்ன்னா பேசறேன். அப்படிப் பேசினா நான் கேட்கறதெல்லாம் குடுக்க வேண்டியிருக்கும் தெரியுமா?' என்றான்.

அவள் வெட்கத்துடன் புன்னகைத்தாள். குரலே எழும்பாத ஒரு குரலில் 'உங்களுக்கு இல்லாததா!' என்ன வேணும் கேளுங்க' என்றாள்.

அவன் கடகடவெனச் சிரித்தான்.

'நிறையக் கேட்கணும்தான். ஆனா அப்பாவும் அம்மாவும் வந்துடுவாங்களே! ஏதோ ஒரு கவிதையில படிச்சது ஞாபகம் வருது. இப்போதைக்குப் **புன்னகை மட்டும் கொடு**' என்றான்.

அவள் அவனைப் பார்த்து மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.

மெல்ல புன்னகைத்தாள். ஒரே ஒரு புன்னகையில் இத்தனை அன்பையும், காதலையும் கொடுக்க முடியுமா என்ன?

அவள் கொடுத்தாள்.

புல்லாங்குழல் ஊதும் கண்ணனின் மயக்கும் புன்னகைக்குக் கிறங்கி நின்ற கோபியர்களைப் போலே அந்தக் கவர்ந்திழுக்கும் புன்னகைக்கு அவன் கிறங்கி நின்றான்.

பூக்களின் வாசனை அங்கே படர்ந்து பரவியது!

**முற்றும்.**